
அகவை 75 இல்

மறைமுதல்வன் G. P. வேதநாயகம்



# பவள விழா மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பவளவிழா மலர்

## அகவை 75 இல் 'மறைமுதல்வன்'

## G. P. வேதநாயகம் - 16. 11. 2020

<u>மலர் வெளியீட்டுக் குழு</u>

பிரதீப் சுந்தரேஸ்வரன்
கவிதா குணசீலன்
டண்ஸ்ரன் குணசீலன்
சுவேதா குணசீலன்
நித்திக் குணசீலன்
ஜடா வேதநாயகம்

கவிதாலயா வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலரின் உள்ளே ...


* நுழைவாயிலில் 05
* சுய விபரக் கோவை 06
* கற்ற & கற்பித்த பாடசாலைகள் 07
* நடித்த மேடை நாடகங்கள் 08
* பிறரது பிரதிகளில், நெறியாள்கையில்.. 11
* இலங்கை வானொலியில் .... 14
* கதம்பத்தில்... 17
* சக்தி வானொலியில்.. 20
* சூரியன் பண்பலை வானொலியில்.. 22
* சின்னத் திரையில்... 24
* பிற எழுத்து முயற்சிகள் - 25
* சிறுகதைகள் 26
* அனுபவப் பகிர்வுகள் 27
* நூல்கள் 28
* வலைத் தளத்தில் .... 30
* **YouTube** இல்... 32


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* காற்று வெளியில்..... 33

* ஆசிரிய சேவையில்.... 34

* திரு.K.S. சிவகுமாரனின் வாழ்த்துரை 41

* திருமதி விசாலாட்சி ஹமீதின் வாழ்த்துரை- 42

* திரு. S.தில்லை நடராசாவின் வாழ்த்துரை 44

* ஜனாப் அப்துல் ஹமீதின் வாழ்த்துரை 48

* ஆசிரியர் வ. இராசையாவின் அணிந்துரை 55

* திரு. பாக்கியம் ராமஸ்வாமியின் அணிந்துரை 59

* திரு. சுந்தரேஸ்வரன் பிரதீப்பின் அணிந்துரை 62

* திரு.A.R. வாமலோசனனின் அணிந்துரை 67

* திரு. பி. விக்னேஸ்வரனின் அணிந்துரை 72

* 'வெள்ளி' - பரிசுக் கட்டுரை 76

* ஒரு நேர்காணல் 82

* நான் அறிவிப்பாளன் ஆன கதை 106

* ஒரு பகுதி நேர அறிவிப்பாளரின்
இரண்டாவது அத்தியாயம் 117

* நேயர்களின் பார்வையில்... 121

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* இலங்கை வானொலிப் பிரபலங்கள் சிலரும் அறிமுகங்களும் 128

* சில நேரங்களில் சில சந்திப்புகள் 140

* வானொலிக் கலைஞர்கள் சிலர் 158

* விழா நாயகரின் நன்றி நவிலல் 161

* நிழற் படங்கள் 165



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுழைவாயிலில்...

பல்கலை வித்தகர், கலாபூஷணம் மறைமுதல்வன் ஜி..பி.. வேதநாயகம் அவர்களின் பவள விழாவையொட்டி இச்சிறு மலரைச் சமர்ப்பணம் செய்கிறோம். கலைஞர்கள் வாழுகின்ற காலத்திலேயே வழுத்தப்பட வேண்டும் எனும் வேணவாக் காரணமாக அவரது பல்துறை ஆற்றல்களைக் கோடி காட்டும் வண்ணம் இவ்வெளி யீட்டை வெளிக் கொணர்வதெங்கள் நோக்கம்.

அவரைப்பற்றி அவரைவிட வேறு யார் அதிகம் அறிவார்? அதனால் அவரிடம் உசாவிப் பெற்ற தகவல்கள் பல வற்றையும் இங்கு தொகுத்துத் தந்துள்ளோம்.

அவரை வாழ்த்த எமக்குத் தகுதியோ வயதோ இல்லை யாயினும், அகவை **75**ஐ எட்டிவிட்ட பின்பும் கூட இன் னும் இளமைத் துடிப்புடன் இயங்கிக் கொண்டிருக்கும் அவர், கலைத்துறையில் இன்னும் பல சிகரங்களைத் தொட்டுச் சாதனைகள் படைக்க வேண்டும் என வல் லோனை வேண்டி வாழ்த்துகிறோம்.

தவிர்க்க முடியாத சில பல காரணங்களால் இந்நூல் வெளியீடு சற்றுத் தாமதமாயினும் குறுகிய காலத்தில் உயர்தரமாகச் சிறப்புடன் பதிப்பித்துத் தந்துள்ள வெள்ள வத்தை ஸ்ரீ டிஜிட்டல் அச்சகத்தாருக்கும் விழா நாயகரை வாழ்த்தி ஆசியுரைகள் வழங்கிய ஆன்றோருக்கும் சான் றோருக்கும், தோன்றாத் துணையாக நின்று உதவிக்கரம் நீட்டிய அன்புள்ளங்கள் அனைத்துக்கும் எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்..

மலர்க் குழுவினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வி பயின்ற கலாசாலைகள்

புனித பெனடிக்ற் கல்லூரி, கொழும்பு - 13. [1950 – 1958]/[1963 -1965]

திரு இருதயக் கல்லூரி, கரவெட்டி. [1958 June -December]

புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம். [1959 -1961]

ஆசிரிய கலாசாலை, கொழும்புத்துறை. [1973 – 1974]

## கல்வி கற்பித்த பாடசாலைகள்/வித்தியாலயங்கள்

புனித அந்தோனியார் அரசினர் தமிழ்ப் பாடசாலை, கொச்சிக்கடை, கொழும்பு – 13. [1970 – 1971]

விவேகானந்த மகா வித்தியாலயம், கொழும்பு - 13 .[1972]

புனித மரியாள் தமிழ்ப்பாடசாலை, எட்டியாந்தோட்டை.[1975 – 1980]

அம்பன்பிட்டிய தமிழ்ப் பாடசாலை, அம்பன்பிட்டிய.[1981]

கொட்டாஞ்சேனை முஸ்லீம் தமிழ் வித்தியாலயம், கொழும்பு - 13 [1982 -1983]

கொழும்புத்துறை அரசினர் தமிழ்ப் பாடசாலை, கொழும்புத் துறை.[1986 January]

புனித சாள்ஸ் தமிழ் வித்தியாலயம், யாழ்ப்பாணம்.[1986 – 1989]

செல்வநாயகபுரம் அரசினர் தமிழ்ப் பாடசாலை, திருகோண மலை.[1991 – 1996]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழா நாயகர் 'வேதா'வின்

# சுய விபரக் கோவை

முழுப் பெயர் - கிறகறி பஞ்சரத்தினம் வேதநாயகம்

புனை பெயர்கள் -மறைமுதல்வன்/ வேதா/ ஜீப்பீ /பபா/ சித்திர புத்திரன்/

பிறந்த திகதி **- 16 – 11 - 1945**

பிறந்த இடம் - கரம்பொன்

தந்தையார்- வித்துவான் நீ.மே.யோ.வேதநாயகம் [இராசபட்சி]

தாயார் - மதலேனா வேதநாயகம்

மூத்த தமையனார் - அஞ்சலோ மரியதாஸ் வேதநாயகம்

இளைய தமையனார் - சைமன் விக்டர் ரெஜினோல்ட் வேதநாயகம்

இளைய சகோதரர் - றொபேட் சத்தியராஜ் வேதநாயகம்

சகோதரி - புஷ்பராணி பவானந்தன்

மனைவி - ஆன் கத்தறீன் ஐடா வேதநாயகம் [திருமண நாள் - 09/07/1973]

மகள் - ஜூடி கவிதா குணசீலன் [பிறப்பு - 03/06/1974]

மருமகன் - கனகராஜசிங்கம் டன்ஸ்ரன் குணசீலன்

பேத்தி - சுவேதா பியோனா குணசீலன்

பேரன் - நித்திக் லியோபின் குணசீலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## G.P.வேதநாயகம் எழுதித் தயாரித்து இயக்கி நடித்த **மேடை நாடகங்கள்**

நாடகம்/ அரங்கம்/ காலம்

01. நெஞ்சில் நிறைந்தவள் -புனித பெனடிக்ற் கல்லூரி, கொழும்பு- 20/11/1963

02. இவரும் ஒரு சமூக சேவையாளரே! - அக்குவைனாஸ், பொரளை - 1965

03. முசுப்பாத்திதான் !லும்பினிஅரங்கம்-கொழும்பு/18/02/1968

04. கலை + 6 தலை = ஒரு கொலை -புனித பெனடிக்ற் கல்லூரி 1971

05. ஆணவத்தின் அழிவு [பிரதி +இயக்கம் மட்டும்]- றோயல் கல்லூரி. கொழும்பு - 1971

06. சதுரங்கம் -சரஸ்வதி மண்டபம் -பம்பலப்பிட்டி 04/02/1971

07. வாக்குறுதி *[ஜமதக்கினிமுனிவரின்கதை]* - ஆசிரிய கலாசாலை, நல்லூர்- 1974

08. ர்வ பங்கம் [*ஹிரண்யன் கதை*] புனித மரியாள் பாடசாலை, எட்டியாந்தோட்டை-1977

09. நாயில்லாமல் நானில்லை! - செல்வநாயகபுரம் தமிழ் வித்தியாலயம், திருமலை -17/08/1996

10. வெளிநாடும் வெங்காயமும் - காக்கை தீவு, கொழும்பு - 21/02/2001 & ராமகிருஷ்ண மண்டபம், வெள்ளவத்தை - 16/03/2001

11. உள்ளேவெளியே- " " 15/07/2001 & புனித பெனடிக்ற் கல்லூரி. கொழும்பு - 2001



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரபல சிங்கள, தமிழ்த் திரைப்பட, தொலைக்காட்சி நடிகர்களும் வானொலி நடிகர்களுமான சி.நடராஜ சிவமும் உபாலி எஸ். செல்வசேகரமும் மறைமுதல்வ னின் 'நெஞ்சில் நிறைந்தவள்' நாடகம் மூலம் மேடையில் அறிமுகமானவர்கள்.

பிரபல நடிகரான கே.எஸ்.பாலச்சந்திரனும் முதன்முதலாகக் கொழும்பு மேடையில் அறிமுகமானது மறைமுதல்வனின் நாடக மன்றத் தயாரிப்பான 'முஸ்பாத்திதான்' நாடகம் மூலமே!

மறைமுதல்வனின் 'கலை + 6 தலை = 1 கொலை' நகைச்சுவை நாடகம் கொழும்பு, புனித பெனடிக்ற் கல்லூரித் தமிழ் மன்றத்தின் வெள்ளிவிழாவின் போது மேடையேறியது. அதில் அவருடன் அக்கல்லூரிப் பழைய மாணவர்களும் வானொலி நடிகர்களுமான ஜோர்ஜ் சந்திரசேகரன், ஜோக்கிம் பெர்னாண்டோ, நடராஜசிவம் ஆகியோரும் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

அந்நாளைய 'கலைக்கோலம்' நிகழ்ச்சியில் கவனயீர்ப்புப் பெற்றதும் கே.எஸ்.சிவகுமாரன் போன்ற விமர்சகர்களால் வியக்கப்பட்டதுமான மறைமுதல்வனின் 'சதுரங்கம்' நாடகத்தில் அவருடன் K.S.பாலச்சந்திரன், கணேசபிள்ளை , சந்திரப்பிரபா மாதவன், K. கந்தசாமி, றொபேட் வேதநாயகம், ரோகிணி ஆகியோரும் நடித்தனர்.

காக்கை தீவில் சிவராத்திரியன்றும் 'வானொலிக் குயில்' ராஜேஸ்வரி சண்முகத்தின் மணிவிழாவின் போதுமென இரு தடவைகள் மேடையேறிய 'வெளிநாடும் வெங்காயமும்' நகைச்சுவை நாடகத்தில் மறைமுதல்வ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னுடன் A.M.C. ஜெகசோதி, ஆர்.யோகராஜன், மணிமேகலை ராமநாதன் ஆகியோரும் பிரதான பாத்திரங்களேற்றனர்.

இ.ஒ.கூ.தாபனப் பவள விழாவிலும் புனித பெனடிக்ற் கல்லூரித் தமிழ்ச் சங்க விழாவிலும் என மறைமுதல்வனின் 'உள்ளே வெளியே' [சக்கடத்தார்] நாடகம் மேடையேறியது. முதல் மேடையேற்றத்தில் ராஜா கணேசன்,K. ஜெயகிருஷ்ணராஜா ஆகியோர் ஏற்ற வேடங்களை இரண்டாவது மேடையேற்றத்தில் முறையே S செல்வசேகரமும் C.நடராஜசிவமும் ஏற்றுச் சிறப்பித் தார்கள்.

ஆசிரிய கலாசாலையில் இடம்பெற்ற நாடகப் போட்டியில் முதற் பரிசு பெற்ற 'வாக்குறுதி'யில் ஜமதக்கினி முனிவராக நடித்துச் சிறந்த குணசித்திர நடிகராகவும் தெரிவான G.P.வேதநாயகத்துடன் த.பஞ்ச லிங்கம், பா.ரகுநாதன், ந.அருணாசலம், செ.யோகேஸ்வரன் முதலான ஆசிரிய மாணவ நண்பர்களும் இணைந்து நடித் தார்கள்.

எமது கல்லூரி நாடகப் போட்டியில்
முதலாம் இடம் பெற்ற வாக்குறுதி நாடகத்தில் ஒரு காட்சி



இடமிருந்து வலம்:
செ. யோகேஸ்வரன், பா. இரகுநாதன், ந. அருணாசலம் (சிறந்த பெண் நடிகர் 1974) ஜி. ப. வேதநாயகம் (சிறந்த குணசித்திர நடிகர் 1974) த. பஞ்சலிங்கம் (சிறந்த நடிகர் 1974) பொ. தில்லைநாதன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

G.P. வேதநாயகம்

பிறரது பிரதிகளில்/ நெறியாள்கையில்

# நடித்த மேடை நாடகங்கள்

01 கோடை - [மகாகவியின் பிரதி/ தார்சீஸியஸின் நெறியாள்கை] திறந்தவெளி அரங்கு, மட்டக்களப்பு - 06/02/1970

02. இதுவும் ஒரு நாடகம் - [சி.சண்முகத்தின் பிரதி + நெறியாள்கை] சரஸ்வதி மண்டபம், பம்பலப்பிட்டி - 04/12/1971

03. வாடகைக்கு அறை - [பௌசுல் அமீரின் பிரதி/சுஹைர் ஹமீடின் நெறியாள்கை] யாழ்- வீரசிங்கம் மண்டபம் - 1972

04. சிங்ககிரிக் காவலன் -[கவிஞர் சொக்கனின் பிரதி + நெறியாள்கையில்] சாதனா பாடசாலை, நல்லூர் - 1974

05. வாடகை வீடு - [ சி.சண்முகத்தின் பிரதி, S. தில்லை நடராஜாவின் நெறியாள்கை]- சரஸ்வதி மண்டபம், பம்பலப்பிட்டி - 05/04/1997 & புனித அந்தோனியார் ஆலய அரங்கு, வவுனியா – 14/06/1997

06. இப்படியும் மனிதர்கள் - [மஹதி ஹசன் இப்ராஹிமின் பிரதி]-ராமகிருஷ்ண மண்டபம்,வெள்ளவத்தை - 27/09/1997

07. பிறந்த மண் - [அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் பிரதி/ ஆர்.யோகராஜனின் நெறியாள்கை] இராமகிருஷ்ண மண்டபம், வெள்ளவத்தை - 16/03/2001

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08.. எந்தையும் தாயும் - [குழந்தை ம.சண்முகலிங்கத்தின் பிரதி சோக்கல்லோ எஸ்.சண்முகநாதனின் நெறியாள்கை] –கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபம், வெள்ளவத்தை - 22/03/2006

&&&&&&&&&&&&&&&&&&&&&&&&&&&&&&&&&&&&&&&&&

'கோடை' கவிதை நாடகத்தில் - தி. சச்சிதானந்தம், ஈஸ்வரநிதி இராசரத்தினம், சித்ரா ராம்ஈஸ்வரா, த.நமசிவாயம், செ.தங்கராசா, மொறிஸ் இம்மானுவேல்/ சேரன் உருத்திரமூர்த்தி, சி.சுந்தரலிங்கம், வி.சிங்காரவேலு, ச.முத்துலிங்கம் ஆகிய பண்பட்ட மேடை நடிகர்களுடன் போலீஸ்கார முருகப்புவாக மறைமுதல்வனும் நடித்தார்.

'இதுவும் ஒரு நாடக'த்தில் ராஜேஸ்வரி சண்முகம், S.S. கணேச பிள்ளை,K.S.பாலச்சந்திரன், வசந்தி சண்முகம் முதலான வானொலிக் கலைஞர்களுடன் G.P.வேதநாயகமும் நடித்தார்.

வாடகைக்கு அறை' நகைச்சுவை நாடகத்தில் T. ராஜேஸ்வரன், பிரான்சிஸ் ஜெனம், ஜெயந்தி அப்புக்குட்டி, ரோகிணி, டிங்கிரி, சிவகுரு போன்ற பிரபல மேடை நடிகர்களுடன் மறைமுதல்வனும் சேர்ந்து நடித்தார்.

' சிங்ககிரிக் காவலன்' வரலாற்று நாடகத்தில் ஆசிரிய கலாசாலை நண்பர் த.பஞ்சலிங்கத்துடன் தாதுசேனனாக மறைமுதல்வனும் நடித்தார்.

'வாடகை வீடு' நாடகத்தில் A.M.C.ஜெகசோதி ,R..யோகராஜன், உடுவை தில்லை நடராஜா, ஜிற்னிஸ் செல்லையா, ஏ.சிவதாசன் முதலானோருடன் ஒரு முஸ்லீம் இளைஞராக G.P. வேதநாயகமும் நடித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இப்படியும் மனிதர்கள்' - நாடகத்தில் ராஜேஸ்வரி சண்முகம், ரஞ்சனி ராஜ்மோகனுடன் மறைமுதல்வனும் நடித்தார்.

'எந்தையும் தாயும்' - நாடகத்தில் - சோக்கல்லோ சண்முகநாதன், A.M.C. ஜெகசோதி, பிரியா ஜெயந்தி, திலகா சண்முகநாதன், உதயகுமார் மயூரபாகன் ஆகியோருடன் அடுத்த வீட்டு ஐயாத்துரையாக G.P. வேதநாயகம் நடித்தார்.

'பிறந்த மண்' நாடகத்தில் வானொலிக் கலைஞர் களான சோக்கல்லோ S. சண்முகநாதன், S. கணேஸ்வரன், V.T. ராஜேந்திரா, A.M.C. ஜெகசோதி, செல்வம் பெர்னாண்டோ, தம்பியையா தேவதாஸ், ரஞ்சனி ராஜ்மோகன், கோபிகா சுவாமிநாதன், ஐ.கஜமுகன், ஸ்ரீகுமார் முதலான நடிகர் பட்டாளத்துடன் யாழ் மத்தியதரக் குடும்பத் தலைவனாக, பாசமுள்ள தந்தையாக G.P.வேதநாயகமும் பங்களிப்புச் செய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

G.P. வேதநாயகம் எழுதி

# இலங்கை வானொலியில் ஒலிபரப்பான நாடகங்கள்

| | |
|---|---|
| நீதியின் நிழலில் [*முதற் பரிசு பெற்றது/ஒரு மணி நேரம்*] - | 1970 |
| [தயிரா வடையா? [*இரண்டாம் பரிசு பெற்றது*] | 1970 |
| நினைவுகள்சாவதில்லை [*திகில் நாடகம்*] | 13/12/1980 |
| கண்டறியாக்கலியாணம் [*தாள லய நாடகம்*] | 26/11/1981 |
| இதுமுடிவல்லஆரம்பம் [15நிமிடம்] | 30/05/1984 |
| நாடகமே உலகம் [15 நிமிடம்] | 27/06/1984 |
| ஓமான் மாப்பிள்ளை [15 நிமிடம்] | 1984 |
| ஊனம் | 04/09/1993 |
| நீயில்லாமல் நானில்லை [45 நிமிடம் ] | 26/02/1994 |
| மீண்டும் ஒரு வசந்தம் [45நிமிடம்] | 26/03/1994 |
| வேஷங்கள் மாறலாம் [45நிமிடம்] | 25/06/1994 |
| மௌனத்தின்மறுபக்கம் | 16/04/1994 |
| சட்டத்தின்வட்டத்துள் | 30/07/1994 |
| பிழைதிருத்தம் | 20/08/1994 |
| காதலிக்கக்காலமுண்டு | 13/05/1995 |
| காதல்போயின்கல்யாணம் | 08/07/1995 |
| ஏதோஒருமயக்கம் | 09/09/1995 |
| ஒருபனிப்போர்முடிவடைகிறது | 21/04/1996 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| பூக்களைப்பறிக்காதீர்கள் | 13/07/1996 |
| முட்களைவிதைக்காதீர்கள் | 03/05/1997 |
| விருப்பமில்லாத்திருப்பங்கள் | 12/07/1997 |
| வானத்தில்மட்டுமல்லவிடிவெள்ளி | 01/11/1997 |
| தாம் தூம் தை தை | 05/04/1997 |
| ததிங்கிணதோம் | 20/09/1997 |
| கிரகணம் [15 நிமிடம்] | 12/10/1996 |
| ஆண்மை[15நிமி'_ம்] | 27/12/1997 |
| கர்வபங்கம்[புராணநாடகம்] | 08/03/1994 |
| ]கவரிமான் [இலக்கியநாடகம்] | 29/03/1997 |
| சீறியது சிலம்பு [இலக்கிய நாடகம்] | 30/08/1997 |
| வேடன் கண்ணப்பா [புராண நாடகம்/கல்விச்சேவையில்] | |
| மர்ம முடிச்சு [கல்விச் சேவையில்] | 18/06/1997 |
| தாரகையும் தூரிகையும் [கல்விச் சேவையில்] | |
| எதிர்பாராதது [கல்விச் சேவையில்] | 18/05/1999 |
| அபஸ்வரத்தில் இருந்து ஓர் அபூர்வ ராகம் [கல்விச் சேவை]- | |
| சனிப்பெயர்ச்சி அல்லது காணாமல் போன சைக்கிளின் கதை | 28/06/1999 |
| பெண்ணியம் | 27/01/2001 |
| எமப் புரட்டன் | 15/12/2001 |
| பாதை மாறிய பயணம் | |
| கேக்கதிகாரம் | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| கந்தசாமி துப்பறிகிறார் | |
| கடவுளும் கந்தசாமியும் | 23/03/2009 |
| நான் கடவுள் | 10/04/2009 |
| முகமூடி மனிதர்கள் | 23/06/2012 |
| ஹலோ!..ஹலோ! [*திகில் நாடகம்*] | 16/06/2013 |
| அக்கரைப் பச்சை | 12/01/2014 |
| களவும் கற்று மற | 2019 |
| இஞ்சேருங்கோ! இஞ்சேருங்கோ! [சேவை - 2 இல் | ] 21/02/2001 |
| ஓர் அறிவிப்பாளர் உதயமாகிறார்! [சேவை - 2 இல்] | |
| திரைகடல் ஓடும் தேவதைகள் [சேவை - 2 இல் தொடர் நாடகம்] | |
| வீடு தேடி வரும் வில்லங்கம் [சேவை - 2 / தொடர் நாடகம்] | |
| இன்றைய ஸ்பெஷல்! [சக்தி வானொலியில்] | |

**பிற எழுத்தாளர்களது வானொலி நாடகப் பிரதிகளில்**

**G.P.வேதநாயகம் நடித்தனவற்றுள் குறிப்பிடத்தக்க10 நாடகங்கள்**

மனிதனைப் பாட மாட்டேன் - இ.முருகையன் [1964]

தீராத செலவுகள் - வாகீசன் [1982]

காட்டு நிலா - என். யோகேந்திரநாதன் [1983]

ஓர் இரவு - அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை 1983]

தனக்குத் தனக்கென்றால் - தா.பி.சுப்பிரமணியம் [1996]

கண்ணீரும் சோறும் - செ. குணரத்தினம் [1997]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசைக் கவிஞன் காளமேகம் - S.S.வேதவனம் [1999]

விடியல் - செ.நடராசா [1997]

ரோமியோ ஜூலியட் -A.A. ஜுனைதீன்

வீரத்தாய் - பாரதிதாசன்

**G.P.வேதநாயகம் -'கதம்பம்' நிகழ்ச்சிக்காக எழுதிய நகைச்சுவைக் குறு நாடகங்களிற் சில**

மன்மதன் தேவை -25/01/1981

இருக்க ஓர் இடம்

னவுகள் கற்பனைகள் 03/07/1983

கவலைப்படாதே டொய்! டொய்! டொய்! – 16/03/1997

அடிக்கு மேல் அடி – 04/05/1997

பட்டம் பறக்கிறது

ஐ சி பப்படம்

கணக்கும் வழக்கும்

கண்டறியாதது

மாலை நேரத்து மயக்கம்

எதிர்த் தாக்கங்கள் – 29/08/1999

புதையல் – 02/02/2000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேஷங்கள் மாறலாம் – 15/03/2000

சங்கடமான சமையல் 29/11/2000

தலைவெட்டு ரஜனி கட்

மீண்டும் ஒரு திருவிளையாடல் 17/02/2001

இருட்டினில் குருட்டாட்டம் – 15/08/2001

ராசி பலன் 24/10/2001

கல்யாணமாம் கல்யாணம் – 30/03/2002

ஞானம் – 03/03/2001

கலைக்காக

சக்கடத்தாரின் சின்னச் சின்ன ஆசைகள்

பழமொழிகள் பொய்ப்பதுண்டு

பல்லுப் போனால் வில்லங்கம்

முச்சந்திப் பேச்சு

சுக்குப் புக்கு ரயிலே..=29/08/2001

சக்கடதாரின் மலரும் நினைவுகள் 19/04/2000

கனவு மெய்ப்பட வேண்டும்

படிக்கவேணும் புதிய பாடம்

படிக்க வேணும் சீனாப் பாடம் – 02/07/1997

காதலிக்காதே கவலைப்படாதே – 21/10/1998



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் வருவாளா? 07/10/1998

காதல் பூட்டு -

கவிதைக் கொலை

புரடக்க்ஷன் நம்பர் 1 – 16/02/2000

ஏணிகள் ஏறுவதில்லை

மெல்லத் தமிழினி..

ஒரு கவிஞர் கடத்தப்படுகிறார்

சாதனையாளர் ஒருவரின் நேர்முகம்

இடுக்கண் வருங்கால்

நீங்கள் அத்தனை பேரும் 15/11/2000

கல்யாணச் சாப்பாடு

கண்ணே கண்ணே

குறுக்குவழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*G.P.* ***வேதநாயகம் 'சக்தி' வானொலியில்*** *'சுவிஸ் கொன்ராக்ட்' நிறுவன அனுசரணையுடன் இடம்பெற்ற* ***'நாளை நமதே'*** *எனும் விளம்பரதாரர் நிகழ்ச்சியில்* ***எஸ்.எழில்வேந்தனின்*** *தயாரிப்பில 14/01/2001 இல் 'இருந்து 07/02/2004 வரையான காலப்பகுதியில் எழுதி நடித்து ஒலிபரப்பான 41 நாடகங்கள் வருமாறு-*

காதலித்துப் பார் - 14/10/2001

புதியதோர் பிசினஸ் செய்வோம் 21/10/2001

பொடி பறக்குது -28/10/2001

மீட்சி 04/11/2001

விடிவு 11/11/2001

விலை 18/11/2001

கடன் பட்டால் சங்கடம் 25/11/2001

வரவும் செலவும் – 02/12/2001

நீயா? நானா? – 09/12/2001

கணக்கும் வழக்கும் - 16/12/2001

என்ன விலை அழகே? 23/12/2001

ஹலோ பாட்னர்! - 30/12/2001

அண்ணன் என்னடா> தம்பி என்னடா? – 06/01/2002

ஏமாறாதே ஏமாற்றதே! - 13/01/2002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டு வேணுமா? 20/01/2002

நீரும் நெருப்பும் - 27/01/2002

துரோகம் - 03/02/2002

தீர்வு - 10/02/2002

காத்திருக்க நேரமில்லை – 17/02/2002

கழிவு – 24/02/2002

நாணயம் – 10/03/2002

பூவின்றி மணமேது – 24/03/2002

குடிக்காதே – 08/09/2002

திருத்தி எழுதிய தீர்ப்பு – 22/09/2002

நன்றிக் கடன் – 13/10/2002

எங்களுக்கும் காலம் வரும் – 27/10/2002

நால்வர் – 10/11/2002

நட்புக்காக – 24/11/2002

கிராமத்து அத்தியாயம் 08/12/2002

இப்படிக்கு – 12/01/2003

கல்யாணிக்குக் கல்யாணம் – 26/01/2003

வெற்றிக் கொடி கட்டு! – 06/12/2003

சந்தித்த வேளை – 13/12/2003

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டு கொண்டேன் கண்டு கொண்டேன் – 20/12/2003

மெல்லத் திறந்தது கதவு – 27/12/2003

தட்டுங்கள் திறக்கப்படும் - 03/01/2004

ஒட்டும் உறவும் - 10/01/2004

தை பொறந்தாச்சு - 17/01/2004

நேருக்கு நேர் - 24/01/2004

தித்திக்குதே! - 31/01/2004

ஜே!ஜே! - 07/02/2004

XXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXX

**G.P வேதநாயகம் எழுதி நடித்து, சூரியன் - FM வானொலியில் - 2006 - 2007 காலப்பகுதியில் ஒலிபரப்பான 25 நாடகங்கள்**

ஒரு ஜீன்ஸ் தையலைத் தேடுகிறது

ஒரு நேர் கோடு வளை கோடாகிறது

ஒளி பிறந்தது

உள்ளே வெளியே!

ஊழிற் பெருவலி யாவுள?

கண்டு பிடி அவளைக் கண்டு பிடி!

காதில பூ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதல் போயின் கல்யாணம்

காதலிக்கக் காலம் உண்டு

குண்டக்க மண்டக்க!

கோழி கூவுது!

சாதலுக்கு மரியாதை

திருடா! திருடி!

நடிகர்கள் ஜாக்கிரதை!

நாய்க்கொரு தாலாட்டு!

நிழலின் மறுபக்கம்

பட்டம் பறக்கிறது!

புது வருட நாடகம் அரங்கேறுகிறது

மறதிக்குப் பெயர் அம்னீஷியா!

மன்மதன் அம்பு!

முறுக்கோ முறுக்கு!

யூரேக்கா! யூரேக்கா!

ராஜாதி ராஜ ராஜ மார்த்தாண்ட!

வாங்க மச்சான் வாங்க

வெளிநாடும் வெங்காயமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னத்திரையில் G.P.வேதநாயகத்தின் பங்களிப்பு

***குலுக்கிய பின் சிரிக்கவும்*** - சுயாதீனத் தொலைக் காட்சியில்[ITN] **-16/01/1999** M. வரதராஜனின் தயாரிப்பில் **G.P**. வேதநாயகம் எழுதி ராஜா கணேசன், ஏஞ்சல் வெர்ஜினா ஆகியோருடன் நடித்தது.]

***அண்ணனும் தம்பியும்*** - ரூபவாஹினியில் **- 1998** [சோக்கல்லோ சண்முகத்தின் பிரதி. அவருடன் யோகராஜனும் **G.P.**வேதநாயகமும் நடித்தது.

**'கலைச் சுரங்கம்'** - நகைச்சுவைக் குறு நாடகங்கள் - சொர்ணவாஹினியில் **G.P.** வேதநாயகம் எழுதி ஜெயரஞ்சன் யோகராஜனுடன் நடித்தவை.] **-1997**

*'வா வாத்யாரே'* -நகைச்சுவைத் தொடர் நாடகம் சக்தியில் - **2007** ['ஆச்சி' மனோரமா, செந்தில், மீரா கிருஷ்ணன், குமரிமுத்து முதலான தென்னகத் திரைப்பட நடிகர்களுடன் **G.P.**வேதநாயகமும் நடித்தது.]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வானொலி நாடகம்

முதல் பரிசு ரூ. 10,000
'இது ஒருவழிப்பாதை'
மறைமுதல்வன்,
திருகோணமலை.

இரண்டாம் பரிசு ரூ. 5,000
'ஒரு பிடிச்சோறு'
ஓ.கே. குணநாதன்
மட்டக்களப்பு.

மூன்றாம் பரிசு ரூ. 3,000
'அந்த நாள் வாராதோ'
திருமதி தேவகுமார்
ஆனந்தகிளி,
பருத்தித்துறை.



படைப்பாற்றல் போட்டியில்
பரிசு பெற்றோர் விபரம்

பத்திரிகைகள்/சஞ்சிகைகளில்பிரசுரமான

## G.P.வேதநாயகத்தின் <u>பிற எழுத்து முயற்சிகள்</u>

*'சீதனம்' சிறுகதை விமர்சனக் கட்டுரை* [முதற் பரிசு] - **வெள்ளி**' யில் -நவமபர் 1971

*'இது ஒரு வழிப் பாதை'* [நாடகம்] [முதற் பரிசு] - தினகரனின் '**அமுது**'வில் - 2001

*'காலத்தால் அழியாத கலைஞர்களும் கானங்களும்'* - தமிழ் சினிமா பற்றிய ஆய்வுக் கட்டுரைத் தொடர் - 21/08/2005 முதல் 18/06/2006 வரை **43** வாரங்கள் - ஞாயிறு தினகரன் இதழ்களில்

*'இலங்கை வானொலி நாடகங்களும் சிருஷ்டிகர்த்தாக்களும்'* - நாடக ஆய்வுக் கட்டுரைத் தொடர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- 03/03/2013 முதல் 19/05/2013 வரை 12 வாரங்கள் - தினக்குரல்' வார மஞ்சரியில்

***இலங்கை வானொலித் தமிழ் நாடகங்கள் - ஓர் அறிமுகம்*** - 'அமுது' சஞ்சிகையில் 2001 – Aug.& Sept

***'தமிழ்த் திரையுலக மாஸ்டர்களும் பேபிகளும்'*** – சினிமா ஆய்வுக் கட்டுரைகள்-'தினக்குரல்'வார மஞ்சரியில் 14,& 21/12/2008

***'கனவுத் தொழிற்சாலையின் ஆரம்ப காலக் கதாநாயகிகள்'*** - தமிழ் சினிமா ஆய்வுக் கட்டுரை - 'தினக்குரல்' வாரமஞ்சரி'யில் 19/04/2009

***'கனவுத் தொழிற்சாலையின் கறுப்பு வெள்ளைக் கதாநாயகர்கள்'*** - தமிழ் சினிமா ஆய்வுக் கட்டுரை - 'தினக்குரல்' வாரமஞ்சரியில் – 21/06/2009

'***முதுசொம்***' - யாழ்ப்பாணப் பேச்சு வழக்குப் பற்றிய தேடல்கள் -'இருக்கிறம்' சஞ்சிகையில் – 01/05/2009, 15/05/2009, 15/08/2009, 01/09/2009, 15/09/2009

***'வானொலி நாடகப் போட்டி'*** - விமர்சனம்
18/06/1996 - 'சரிநிகர்' சஞ்சிகையில்.

'***மீண்டும் வடக்கு நோக்கி***' - சிறுகதை விமர்சனம்
25/01/1996 - 'சரிநிகர்' சஞ்சிகையில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறு கதைகள்

**ஒரு சிறுவன் சினிமாவுக்குப் போகிறான்**/ 24/09/1978 / 'வீரகேசரி' ஞாயிறு வார இதழில்.

**மணிதனைத் தேடி**' [ஆறுதற் பரிசு பெற்ற கதை]/ 27/10/1989 'திசை' சஞ்சிகையில்.



பன்னாட்டுப் புலம்பெயர் தமிழ் எழுத்தாளர் ஒன்றியம்
Internationaler Verein Emigrierter tamilischer Schriftstelle.e.V
International Union of Emigrated Tamil Writers Germany (Regd.)

திருவள்ளுவர் விழா 2016 சிறுகதைப் போட்டி

சான்றிதழ்

திருமிகு கிரகரி வேதா (மறைமுதல்வன்)

ஜேர்மனியில் இயங்கிவரும் பன்னாட்டுப் புலம்பெயர் தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தினால், திருவள்ளுவர் விழா 2016ஐ முன்னிட்டு நடத்தப்பட்ட திருக்குறள் சிறுகதைப் போட்டியில், தங்களின் "தண்டனை" என்கின்ற சிறுகதை ஆறுதற் பரிசு பெற்றதை உறுதிப்படுத்தி, தங்களுக்கு இச்சான்றிதழ் வழங்கப்படுகின்றது.

கந்தையா முருகதாசன் — தலைவர்
சுப்பிரமணியம் பாக்கியநாதன் — செயலாளர்
விமலசேகரன் சபேசன் — நடுவர் குழு

'**தண்டனை**' [ஆறுதற் பரிசுக் கதை] - திருவள்ளுவர் விழாச் சிறுகதைப் போட்டி -**2016** பன்னாட்டுப் புலம்பெயர் தமிழ் எழுத்தாளர் ஒன்றியம்

பழிக்குப் பழி 15/10/2007 இருக்கிறம்
என்னதான் முடிவு? 20/03/2008 இருக்கிறம்
சுயநலமி – 15/03/2010 இருக்கிறம்
மன்மதனுக்கு அம்னீஷியா – 15/05/2010 இருக்கிறம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனுபவப் பகிர்வுகள்

குரலின் கதையும் ஒரு ஜாம்பவானும் - 01/05/2010 - இருக்கிறம்

அசலும் நகலும் – 15/09/2010 "

நான் TV நடிகனாக கதை – 01/03/2008 "

சொல்லக் கூடாத வில்லங்கம் – 01/05/2010 "

காசு மேல காசு வந்து – 01/07/2010 "

கோச்சி வரும் கவனம் - 15/06/2010 "

**G.P.** வேதநாயகத்தின் வெளிவந்துள்ள

## நூல்கள்

**'நாளைய நாயகன்** - சிறுவர் [மலர்] நாடகங்கள் -2000

**'கழுதைக்கும் காலம் வரும்'** [நகைச்சுவை நாடகங்கள் 11] - 2005


**'காதல் போயின் கல்யாணம்'** [நகைச்சுவை நாடகங்கள்- 07] - 2020

**கிடப்பில் கிடந்த கவிதைகள்** [கவிதை நூல்] 2020

**மறைமுதல்வன் சிறுகதைகள்** – 2020

**இலங்கை வானொலியின் தமிழ் நாடக வரலாறு** [ஆய்வு நூல்] - 2020

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலைத்தளத்தில் வேதா...

## 2015இன்

இறுதி நாளன்று https://maraimuthalvan.blogspot.com எனும் வலைத்தளத்தை ஆரம்பித்து 'வேதாவின் வானவில்' எனும் மகுடத்தின் கீழ் வேதா தமது ஆக்கங்களைப் பதிவு செய்ய ஆரம்பித்தார். இற்றை வரை [2020] அவரது சிறுகதைகள், கவிதைகள், நாடகங்கள் உட்படப் பல்வேறு விதமான பதிவுகளையும் தரவிறக்கம் செய்து வருகிறார்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றுள் குறிப்பிடத் தக்கவை சில -

* 'குடிமக்கள் காப்பியம்' - குடி பற்றியும் 'குடி' மக்கள் பற்றியதுமான [நகைச்சுவை 'மது'+'ர[ஸ]ம்' கலந்த] ஓர் அலசல்.

*வில்லிசை - ஓர் அறிமுகமும் 'பரமார்த்த குரு' வில்லுப்பாட்டுப் பிரதியும்.

* மெல்லத் தமிழினி....தமிழில் எழுதுவோர் விடும் எழுத்துப் பிழைகளும் அவற்றின் சரியான வடிவமும் பற்றியது

* இலங்கை வானொலியும் ஹிந்திப் பாடல்களும்

* சிங்களத் திரைப்படங்களும் தமிழர்களின் பங்களிப்பும்.

* இலங்கை இந்திய கலைப்பாலம் சமைத்தவர்கள்.

* தமிழ்த் திரையுலக மாஸ்டர்களும் பேபிகளும்

* ஹிந்தி - தமிழ் மொழிமாற்றப் படங்கள் [1950 - 1961 ].

* ஹிந்தி திரையுலகும் கலைஞர்களும் [31 முதல் 61 வரை]

* ஹிந்தித் திரையுலக முன்னணி நடிகையர் [30 களில்]

* 1940, 1950 களில் ஹிந்தித் திரையுலக முன்னணிக் கதாநாயகிகள்.

* ஹிந்தி இசையமைப்பாளர்கள். [31 முதல் 61 வரை]

* தாள லய நாடகம் 'மனம் திருந்திய மகன்'


* இலங்கை வானொலித் தமிழ் நாடக வரலாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* இவற்றை விட இவரது 'மறைமுதல்வன் சிறுகதைகள்' நூலில் வெளியாகியுள்ள 'தண்டனை', 'மரண அறிவித்தலும் மணமகன் தேவையும்' எனும் இவரது சிறுகதைகளும் மற்றும் 'கிளிக்', 'சிலுசிலுப்பு', 'விண்ணாணம்', 'உன்னைத் தேடி', 'பிரிவு', 'பாவசங்கீர்தனம்', ' Cho க்கெல்லோ', 'குரல்கள்', 'முகநூல்' முதலான ஒருசில நகைச்சுவை இழையோடும் கவிதைகளும் கூட இடம் பிடித்துள்ளன

## YouTube இல் **G.P. வேதா**

GPVethavin VaanaVil மூலம் தமிழ்த் திரைப்படங்கள் பற்றிய தனது விமர்சனக் கண்ணோட்டங்களை யூ ரியூப்பில் 2018 செப்டம்பரில் இருந்து G.P.வேதா பதிவு செய்ய ஆரம்பித்தார். 'கோல மாவு கோகிலா', 'சீம ராஜா', U Turn, 'செக்கச் சிவந்த




வானம்', '96 ' முதலான திரைப்படங்களின் விமர்சனங்கள் 2018 இல் வெளிவந்தன. இன்றுவரை அவரது You tube பதிவுகள் தொடர்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினக்குரல்

# காற்று வெளி யில்

# திறனாய்வாளர் தம்பியையா தேவதாஸ்


78

நாடகம் எழுதுவதிலும் நடிப்பதிலும் வல்லவரான ஜீ.பி.வேதநாயகம்


தினக்குரல்

காற்று வெளி

79

1996

பழைய பாடல் அபிமானிகளின் நினைவில் நிற்கும் ஜி.பி.வேதநாயகம்

ஞாயிறு தினக்குரல் பத்திரிகையில் 'காற்று வெளி' பகுதியில் எழுத்தாளர் தம்பியையா தேவதாஸ் 'இலங்கை வானொலியின் இனிய ஒலிபரப்பாளர்கள்' எனும் இலங்கை வானொலி ஒலிபரப்பாளர்கள் பற்றிய அறிமுகத் தொடர் ஒன்றை 2011 - 2013 காலப் பகுதியில் எழுதி வந்தார். அதில் 78, 79 ஆம் வாரங்களில் 16/12/2012 , 23/12/2012 ஆகிய திகதிகளில் அறிவிப்பாளர் G.P. வேதநாயகம் பற்றிய அறிமுகக் கட்டுரைகளை எழுதியிருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரிய சேவையில் .....ஒரு பதச் சோறு

GREEN TREE

**Green Tree Academy**

(English Academy, Preschool & Daycare)

192, Inner Harbour Road, Trincomalee. TP: 077-0203932

அகவை **75**ஐ எட்டிவிட்ட எனது அன்பு ஆசானுக்கு,

உங்களை வாழ்த்தும் வயதில்லை எனக்கு. ஆனால் உங்கள் புகழை வழுத்த ஆசிக்கிறேன் இவ்வேளை. களிமண்ணாய்க் கிடந்த மாணவனை இணக்கி, அவனுக்கு உருக்கொடுத்து, பக்குவப்படுத்தி - இந்த உலகிற்கு நல்லதொரு குடிமகனாக உருவாக்கி வழங்கும் பெருமை நல்லாசிரியனையே சாரும். அதற்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர் தாங்கள்.

நான் திருகோணமலை செல்வநாயகபுரம் தமிழ் மகாவித்தியாலயத்தில் தரம் ஆறில் கல்வி பயின்ற காலம்...எத்தனையோ ஆசிரியர்களை என் வாழ்வில் கடந்துவிட்ட போதிலும் என் மாபெரும் அன்பையும் கௌரவ மதிப்பையும் பெற்றவர் என் அன்பு ஆசான் **G.P.** வேதநாயகம் என்றால் மிகையாகாது. ஆம். அது நீங்களேதான்!

உங்கள் பெயரை உச்சரித்தாலே என் மனமும் மெய்யும் உணர்ச்சி பொங்க, நயனம் கலங்க, ஆனந்த நிலையடைகின்றேன். அப்பேர்ப்பட்ட உன்னத உயர்ந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசான் நீங்கள். உண்மையிது. வெறும் புகழ்ச்சியல்ல! உங்கள் புகழ் பாடப் புறப்பட்டால் வார்த்தைகள் வற்றிவிடுகின்றன!

நீங்கள் எமது பாடசாலையில் ஆசிரியராக இருந்த காலத்தில் எம் வகுப்பறையில் நுழைந்தாலே எமக்குள் தனிப் புத்துணர்வு ஏற்பட்டுவிடும். கலகலப்பும் சிரிப்பும் கூடவே வந்துவிடும். பாட நேரம் போவதே தெரிவதில்லை. எங்களுக்கு நீங்கள் ஆங்கிலம்தான் கற்பித்தீர்கள். மாணவர்கள் பலருக்கும் விருப்பமில்லாத கசப்பான பாடமது. ஆனால் அதையும் கற்கண்டாய் இனிக்கும்படி செய்தவர் நீங்கள். ஆர்வத்தைத் தூண்டி எம் மனதிற்கிசைவாக அன்புடன் அளிப்பதில் உங்களுக்கு நிகராக வேறொருவரை நாம் கண்டோமில்லை.

ஆசிரியர் பணி வெறும் கல்வியைப் போதிப்பது மட்டுமல்ல. ஒழுக்கம், ஆற்றல், ஊக்கம், தன்னம்பிக்கை போன்ற நல்லவை பல எடுத்தியம்பி, நன்மை தீமைகளை அறிந்து ஓர்ந்து நடக்கும் நல்லவனாக, வாழ்வில், கலைகளை நயந்து நடுநிலை கோணாது , எதிர் நீச்சல் போட்டு வாழத் தெரிந்த வல்லவனாக, பகுத்தறிவுள்ள பண்பாளனாக ஒருவனை உயர்த்தும் உன்னத பணியது. அக்கூற்றை மெய்ப்பிப்பது போல உங்கள் வழிகாட்டலில் ஆங்கிலக் கல்வியை மட்டுமே எமக்களிக்காது தமிழ் நாடகங்கள், கவிதை, விளையாட்டு எனப் பல்துறைகளிலும் உங்கள் தனித்திறமையை எமது பாடசாலை மாணவர்களுக்கீந்து அவர்கள் போட்டிகளில் கலந்து வெற்றியீட்ட ஊக்கப்படுத்தினீர்கள்..

உங்கள் நடிப்புத் திறமையோ நாடறிந்தது. நீங்கள் மாணவர்களாகிய எமக்கு நடிப்பைப் பயிற்றிய போதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரி மேடையில் ஏறி உங்கள் கம்பீரக் குரலில் உணர்ச்சிபூர்வமாக நடித்த போதும் சரி உங்களுக்குள் இத்தனை திறமைகளா? இலக்கியங்களைக் கரைத்துக் குடித்தவர் போல , தமிழில் இத்தனை புலமை வாய்ந்தவரா? என நான் எண்ணி வியப்பதுண்டு; புளகாங்கிதமுற்று மெய்சிலிர்ப்பதுண்டு. யாம் பெற்ற பேறை இப் பார் பெறும் காலமும் ஒன்று னியும் என அப்போதெல்லாம் நான் நினைத்துக் கூடப் பார்த்ததில்லை.

பின்னர் வானொலியில் உங்கள் குரல் நாடகங்களிலும் அறிவிப்புகளிலும் அடிக்கடி ஒலிக்க ஆரம்பித்ததும் 'இதோ எமது ஆசான்! இந்த சின்னஞ்சிறிய செல்வநாயக புரத்திலே எம்மோடு கூடிக்குலவி ஆடிப்பாடி மகிழ்ந்த இனியவர். வானொலியில் தனது வசீகரக் குரலால் வெற்றிக் கொடி நாட்டுகிறார்' எனப் பெருமிதத்துடன் எனது சக நண்பர்களிடமும் என்னுடன் பணியாற்று பவர்களிடமும் ஏன் எனது கணவர் பிள்ளைகளிடம்கூட வாயோயாமல் சொல்லி மகிழ்வதுண்டு. உங்கள் புகழையும் பெருமையையும் நானே பெற்றதாக எண்ணிப் பெருமிதமும் கொள்வதுண்டு.

பாடசாலைக் கலைவிழாக்கள், போட்டிகள் மற்றும் நிகழ்ச்சிகளின்போது ஓர் அறிவிப்பாளராகத் தடம் பதித்து, நானும் ஓர் அறிவிப்பாளராக வேண்டும் எனும் விதையை என்னுள் விதைத்த என் மனதிற்கினிய ஆசானாகிய உங்கள் குரல் வானதிர, [முன்பு] வானொலியிலும் பின்னர் இணையத்திலும் என வலம் வந்து எனது எண்ணங்களுக்கு எழுச்சியூட்டிக் கொண்டிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவையனைத்துக்கும் சிகரம் வைத்தாற் போல் நீங்கள் எங்களை விட்டுப் பிரியாவிடை பெற்றுச் சென்ற **1996** ஆம் ஆண்டின் இறுதியில் அரங்கேற்றிய ஒளி விழா நாட்டிய நாடகம் அமைந்தது.

யேசுபாலனின் பிறப்பை மையமாகக் கொண்டு கதையும் பாட்டுமாக வடிக்கப்பட்ட அந்நாடகத்தில் கோலியாத் - தாவீதின் பைபிள் கதையை இடைச் செருகலாக்கிப் பாட்டும் கூத்துமாக அமர்க்களப் படுத்தி எம்மை எல்லாம் ஆனந்தக் கடலில் ஆழ்த்தி விட்டீர்கள். ஆசிரியர் சத்தியநாதன் உங்களுக்கு அனுசரணையாக ஒப்பனையிலும் இசையிலும் அசத்தி விட்டார். பாட்டால் கதை சொல்பவர்களில் ஒருத்தியாக - பாடகர் குழாம் நடிகையாக, நானும் அதில் பங்கேற்கக் கிடைத்தமை என் பெரும் பாக்கியமே.

அந்நாடகத்தில் என்னுடன் பங்கேற்ற எனது தோழிகளான மரியராஜினி, கவிதா, பிரவீனா, சுபாஷினி, அனுசூயா போன்றோரும் நாம் சந்திக்கும் வேளைகளில் அந்நாட்டிய நாடகம் பற்றி அடிக்கடி விதந்து பேசுவார்கள். என் வாழ்விலும் நான் மறக்க விரும்பாத, மறக்க முடியாத தருணங்கள் அவை.

நீங்கள் வெளியிட்ட 'நாளைய நாயகன்' எனும் முதல் சிறுவர் நாடக நூலிலேயே முகப்பட்டையில் எமது பாலன் பிறப்பு நாட்டிய நாடகப் புகைப் படத்தைப் பிரதிஷ்டை செய்து, காலத்தால் அழிக்க முடியாத நினைவுப் பொக்கிஷமாக்கி, எமக்கும் எமது பாடசாலைக்கும் பெருமை சேர்த்துவிட்டீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனிவுடன் கூடிய கண்டிப்புடன் கல்வியையும் கல்வி சாரா விழுமியங்களையும் ஒழுக்கத்தையும் செவ்வனே போதித்தவர் நீங்கள். நீங்கள் இப்பாடசாலையில் அடியெடுத்து வைத்த ஆண்டில் தான் - நீங்கள் வகுப் பாசிரியராக இருந்து உங்களிடம் கணிதம் பயின்ற, எமக்கு ஓராண்டு முன்னதாகப் படித்த அக்காமார் மூவர் புலமைப் பரிசில் பரீட்சையில் முதன்முறையாகச் சித்தியெய்தி எமது பாடசாலைக்கும் உங்களுக்கும் பெருமை தேடித் தந்தார்கள். அவ்வமயம் எமது அதிபர் உங்களுக்கு மாலை அணிவித்து உங்களைக் கௌரவப்படுத்திய நிகழ்வும் எனது மனக்கண்ணில் நிழலாடுகிறது

ஓய்வுபெற்று நீங்கள் எமது பாடசாலையை விட்டுச் சென்ற பின்னரும்கூட உங்கள் தரிசனம் கிடைக்காவிட்டாலும்கூட, உங்களது கம்பீரமான குரலை வானலைகளில் கேட்டு மகிழக் கிடைத்த தருணங்கள் மகத்தானவை.

நாடகங்கள், சிறுகதைகள், கவிதைகள், திறனாய்வுகள் எனச் சமகாலத் தமிழிலக்கியத்தில் உங்கள் பங்களிப்பால் தாரணி போற்றும் தாரகையாகப் பிரகாசிக்கிறீர்கள் நீங்கள்.

உங்களை எனது ஆதர்சமாகக் கொண்டு - அதனால் போலும் உங்களில் ஒரு துளி என்னுள் தூவப்பட்டு, நானும் இன்று எழுத்து, நாடகம், நடனம், அறிவிப்பு, ஆங்கில ஆசிரியத் துறை எனப் பல பரிமாணங்களை என்னுள் கொண்ட ஒரு பெண்மணியாக சமூகத்தில் வலம் வருகிறேன் என்றால் அதற்கான அத்திபாரத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இட்டவர் எனது அன்பு ஆசானாகிய தாங்களே எனக் கூறுவதில் எனக்கு எவ்வித தயக்கமுமில்லை.

உங்கள் வாழ்வின் **75** வற்சரங்கள் கடந்துவிட்ட நிலையில் உங்களது உயரிய சேவை இவ்வுலகிற்கு இன்னும் தேவை என்பதை உணர்ந்து, இன்னும் பல்லாண்டுகள் பார் போற்றும் பல்கலை வித்தகனாய் நல்லவை பல புரிந்திட இறையருள் வேண்டி -'வாழ்க பல்லாண்டு - வளர்க நும் சேவை' என்று இப் பவளவிழா நந்நாளிலே பாங்குற வாழ்த்தி அமைகின்றேன்.

என்றும் தங்கள் பிரியத்துக்குரிய மாணவி,



**திருமதி.மரியஜெயந்தா உமாசங்கர்,**

**இயக்குனர்,**

**க்ரீன்கல்வி நிறுவனம்.**

**192, உட்துறைமுக வீதி,**

**திருகோணமலை.**

You are a great gift to the world

My lives you touched, the good you did

Shall never know an end.

And I am proud to call you

My favourite teacher and My mentor.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Thank you for the happy memories and great lessons you have given me sir!



தி/செல்வநாயகபுரம் அரசினர் தமிழ் வித்தியாலய 'ஒளி விழா' -[ 1996] இசை நாடகத்தில் பங்கேற்ற மாணவ மாணவியருடன் ஆசிரியர் G.P. வேதநாயகம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Wishes Message from K. S. Sivakumaran

**from Colombo, Sri Lanka.**

Vethanayagam Brothers were all gifted personalities in their own right. I knew the eldest and the other who was in the SLAS (Sri Lanka Administrative Service). They moved with me intimately. The youngest of them all joined the SLBC when I left Radio Ceylon.

But I have heard him on the air and found him imaginative, creative and had an attractive voice. He was working as disc jockey Thamil over the Commercial Service. His other literary contributions I am aware of, not strictly followed, because I was ageing and could not cope with the recent developments.

It gives me happiness to wish him from the bottom of my heart the blessings of the Almighty for long life, healthy and prosperous with his family. I am sure that in U K, he and his family are safe and happy.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 'காலத்தால் அழியாத' கலைஞர் வேதா

இலங்கைவானொலி மூத்த அறிவிப்பாளர் **விசாலாட்சி ஹமீதின் வாழ்த்து**

**75** ஆவது அகவையைப் பூர்த்தி செய்து பவளவிழாக் கொண்டாடும் வேதா என்று அன்புடன் அழைக்கப்படும் G.P.வேதநாயகம் அவர்களை இத்தருணத்தில் வாழ்த்தக் கிடைத்ததில் பெரு மகிழ்ச்சியடைகிறேன். அரை நூற்றாண்டுக்கும் மேலாக, அவர் வானொலி நாடகங்களில் பங்குபற்ற ஆரம்பித்த காலமுதல் அவரை நான் நன்கு அறிவேன். என்னைப் போலவே சானா என்கிற நாடகப் பேராசானின் நாடகப் பட்டறையில் பட்டைதீட்டப்பட்டவர் அவர். வானொலி நாடகத் துறையில் பல்வேறு கதாபாத்திரங்களிலும் தனது திறமையை நிரூபித்து வானொலி நேயர்களின் பேரபிமானதை வென்றவர் அவர்.

ஒரு நடிகராக மட்டுமன்றி வானொலி அறிவிப்பாளராகவும் சிறந்து விளங்கிய வேதா தொகுத்து வழங்கிய 'காலத்தால் அழியாதவை' நிகழ்ச்சி திரையிசை பற்றிய அவரது பரந்துபட்ட அறிவுக்கும் ரசனைக்கும் சான்றாக விளங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல்களைத் தொகுத்து வழங்கியதோடு அவை பற்றிய சுவாரஸ்யமான தகவல்களையும் எடுத்துக்கூறி நேயர்களைக் கவரும் உத்தியில் ஒரு முன்னோடி என்றே அவரைச் சொல்லலாம். பாடல்கள் பற்றிய தகவல்களை யார் எந்த நேரத்தில் கேட்டாலும் உடனே சொல்லக்கூடிய திறமை அவரிடம் இருந்தது. அதே நேரம் பழைய பாடல்கள் தொடர்பாக மற்ற அறிவிப்பாளர்கள் விடும் தவறுகளைச் சுட்டிக் காட்டுவதில் அவர் ஒரு நக்கீரர். இன்றும் எமது நட்புத் தொடர்வதில் பெருமையும் பூரிப்பும் எய்துகிறேன்.

அன்பு நண்பர் வேதா அவர்கள் ஆயுள் ஆரோக்கியத்தோடு நீண்ட காலம் வாழ்ந்து சாதனைகள் இனியும் சாதிப்பதற்கு இறைவன் அருள்புரிவானாக.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உதடுகளுடன்
## கண்களும் சேர்ந்து சிரிக்கும்
# உன்னத கலைஞர் வேதா!

லைஞர் G.P. வேதநாயகத்தின் சகோதரர்கள் மற்றும் அவரது நண்பர்களுடன் பழகச் சந்தர்ப்பம் கிடைத்தாலும் 1997 இல் இருந்துதான் வேதநாயகத்துடன் பழகக் கூடிய சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. அதுவும் மிக நெருக்கமாகப் பழகக் கூடிய சந்தர்ப்பம்.

என்னை உருவாக்கிய அமெரிக்கன் மிஷன் கல்லூரி நிதிக்காக கொழும்பில் வானொலி , தொலைக்காட்சி நடிகர்களுடன் 'வாடகை வீடு' எனும் நாடகத்தை மேடையேற்ற வேண்டும். அந்நாடகத்தில் முஸ்லீம் பாத்திரமேற்று நடிக்க ஒருவர் தேவை.

அம் முஸ்லீம் பாத்திரத்தை ஏற்று நடிக்க ஆபத்பாந்தவனாகக் கை கொடுத்தவர்தான் நண்பர் G.P.வேதநாயகம். முதலில் 1997 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 5 ஆம் திகதி கொழும்பு, பம்பலப் பிட்டி, சரஸ்வதி மண்டபத்திலும் பின்னர் 14/06/1997 இல் வவுனியா, இறம்பைக்குளம், புனித



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தோனியார் தேவாலயத்தில் பயணிகள் தங்கிச் செல்லும் இடைத் தங்கல் தங்குமிட வசதி விஸ் தரிப்புக்காக இலட்சக் கணக்கில் நிதி திரட்டு முகமாக வவுனியாவிலும் மேடையேற்றவென நான் தயாரித்து நெறிப்படுத்திய நாடகம்தான் 'வாடகை வீடு'.

பல்வேறுபட்ட பாத்திரங்களையும் ஏற்றுத் திறம்பட நடிக்க வல்லவரான வேதா முதற் தடவையாக முஸ்லீம் வேடமேற்றது அந்நாடகத்திலாகத்தான் இருக்க வேண்டும். தனது அசத்தலான நடிப்பால் எம்மையெல்லாம் வியப்பில் ஆழ்த்தியதுடன் இரசிகர்களை வயிறு குலுங்கச் சிரிக்கவும் வைத்து விட்டார்.

போராட்டம் தொடர்ந்து கொண்டிருந்த அக் கால கட்டத்தில், உயிரைப் பணயம் வைத்து எம்மோடு வவுனியா வந்து அவர் எமக்களித்த ஒத்துழைப்பு மறக்க முடியாதது.

நாடகத் துறையில் ஆழமான அறிவும் நீண்ட கால அனுபவமும் மிக்கவராக, பரவலாக கலை இலக்கியத் துறையின் பல்வேறு பகுதிகளிலும் முத்திரை பதித்து முன்னணியில் திகழும் ஒரு கலைஞராக அவரை நான் அப்போதே இனம் கண்டு கொண்டேன்.

சில இளம் கலைஞர்கள் கதாநாயக வேடம் தவிர்ந்த வேறு வேடங்களைப் புனைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்புவதில்லை. ஆனால் நண்பர் வேதா எந்தப் பாத்திரமானாலும் அதனை விரும்பி ஏற்றுச் சிறப்பாகத் தன் பங்களிப்பை நல்கி, தயாரிப்பாளர், நெறியாளர் உட்படக் கூட நடிக்கும் சக கலைஞர் களையும் திருப்திப் படுத்தி விடுவார்.

'வாடகை வீடு' மேடையற்றத்தின்போது அவரது உதடுகள் மட்டுமல்ல கண்களும் சேர்ந்து சிரித்ததையும் நடை உடை பாவனை என மேடையில் ஏறியது முதல் நாடகம் முடியும் வரை ஓர் அசல் முஸ்லிமாகவே அவர் மாறி விட்ட தையும் அவதானித்து வியந்தேன்.

கலைத் துறையில், குறிப்பாக நாடகத் துறையில் இருப்போரிடையே கருத்து முரண்பாடுகள் தோன்றுவது இயல்பே. ஆனால் எவ்வித கருத்து வேற்றுமையுமின்றி எல்லோருடனும் சிநேகமாகப் பழகி, குறித்த நேரத்துக்கு ஒத்திகைக்கு வந்து, ஒத்திகை முடியும் வரை இருந்து தனது பூரண ஒத்துழைப்பை வழங்கும் அவரின் இனிய பண்பு போற்றுதற்குரியது.

சில சமயங்களில் நாடகத்தோடு தொடர் புடையவர்கள் கருத்து முரண்பாடு கொண்டு பிணக்குற நேரும். அத்தகைய தருணங்களில் அவர்களைத் தனித் தனியே கண்டு கதைத்து அவர்கள் மனங்களை வென்று சமரசம் கண்டு, கலைஞர்களுக்கிடையே நல்லுறவு உருவாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நற்பணியாற்றும் நேய மனம் கொண்டவர் நமது நண்பர் வேதா.


சிறுவர் இலக்கியத்திலும் ஈடுபாடு கொண்டவரும் பயிற்றப்பட்ட ஓர் ஆசிரியருமான நண்பர் வேதா, எழுதிய ' சிறுவர் மலர்' வானொலி நாடகத் தொகுப்பு நூல் வெளியீட்டின்போது அவரது வேண்டுகோளுக்கிசைந்து அந்நூல் பற்றிய மதிப்புரை ஒன்றை நான் ஆற்றிய நிகழ்வும் மறக்கற்பாலது.

நாடகக் கலை வளர்ச்சிக்கு அரும்பெரும் பணியாற்றி வரும், அகவை 75 ஐத் தொட்டுத் தொடரும் அன்பு நண்பர் வேதா ஆரோக்கிய மாகவும் ஆனந்தமாகவும் நீடு வாழ எனது நல்லாசிகள்.

*உடுவை எஸ். தில்லை நடராசா*

மேனாள் அரசாங்க அதிபர், மேலதிக செயலாளர் - கல்வி அமைச்சு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஒருவானொலித் தோழனின் வாழ்த்து...

இந்த முதுமையிருக்கிறதே, ஒரு வகையில் அது விசித்திரமானது. நேற்று நடந்தது கூட மறந்து போகின்றது. ஆனால் சிலவேளைகளில், பள்ளிப் பருவத்தில், மற்றும் விடலைப் பருவத்தில் நடந்தவையெல்லாம் ஒரு சங்கிலித் தொடராக ஒரு திரைப்படம் நகர்வதுபோல் மனத்திரையில் வந்து போகின்றன. அவ்வாறு பழைய நினைவு களை இரை மீட்கவும் ஒரு தூண்டுகோல் வேண்டும் அல்லவா? அத்தகைய ஒரு தூண்டு கோலாகச் சமீபத்தில் விளங்கியவர்தான் நண்பர் ஜி.பி. வேதநாயகம்.

இணையத்தளத்தின் தூது வழியாக அவரிடமி ருந்து ஒரு வேண்டுகோள். பவள விழாவாகக் கொண்டாட வேண்டிய தனது 75 வது அகவை கழிந்து போய் ஓராண்டும் கடந்துவிட்டது. இருந் தாலும் பவள விழா மலர் ஒன்றினை அச்சிலேற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவணப் பதிவாக்க வேண்டுமென அவரது வாரிசு ஆசைப்படுவதால் தன்னை வாழ்த்திச் சில வரிகளை எழுதியனுப்ப முடியுமா, என்ற அவரது .வேண்டுகோளே அத் தூண்டுகோல். உடனே எனது சிந்தனையும் சிறகடித்துப் பின்னோக்கிப் பறக்க ஆரம்பித்துவிட்டது.

தென்கிழக்காசியாவின் முதல் வானொலி என்ற பெருமைக்குரிய இலங்கை வானொலியில் தமிழ் ஒலிக்க ஆரம்பித்த காலம் தொட்டு அதன் வளர்ச்சிக்குப் பெருந் தொண்டாற்றிய பலர் காலத்தால் மறக்கப்பட்டவர்கள் ஆகிவிட்டார்கள். வானொலிக் கலைஞர்களைப் பொறுத்த அளவில், அந்நாளிலே கொழும்பிலே வாழ்ந்து வந்தவர்களே நமது வானொலிக்கு அதிக அளவு பங்களிப்பினை வழங்கி வந்தவர்கள் என்பதை மறுக்க முடியாது. குறிப்பாக ஜிந்துப்பிட்டி,கொட்டாஞ்சேனை போன்ற பகுதிகளில் வாழ்ந்தவர்கள். இன்னும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமெனில் செயின்ற் பெனடிக்ற்ஸ் கல்லூரியில் பயின்று கொண்டிருந்த மாணவர்க ளும் அங்கு கல்வி கற்பித்த ஆசிரியர்களுமே அதிக பங்களிப்பினை நல்கியவர்கள் என்பதை எவருமே மறுக்கவியலாது.

அவ்வாறு சிறுவர் மலரில் ஆரம்பித்து இளைஞர் மன்றத்தில் புடம் போடப்பட்டவர்களே பின்னாளில் சன்மானம் பெறும் வானொலிக் கலைஞர்களாக, தயாரிப்பாளர்களாக,அறிவிப்பாளர்களாக, நிர்வாகப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுப்பாளர்களாகப் பெருந் தொண்டாற்றினர். .விதிவிலக்காகக் கொழும்பின் பிற பாகங்களில் இருந்து வந்த என்னைப் போன்ற ஒரு சிலர் வானொலித் துறையில் தடம் பதிக்க வாய்ப்புகள் கிடைத்ததுவும் ஒரு வரலாறு. அந்த வகையில் 11 வயதில் சிறுவர் மலரில் ஆரம்பித்த அடியேனது வானொலிப் பயணம் செயின்ற் பெனடிக்ற்ஸ் கல்லூரி ஆசிரியர் திரு.வ. இராசையா அவர்களது தயாரிப்பில் ஒலிபரப்பாகி வந்த 'இளைஞர் மன்றம்' நிகழ்ச்சியில் தொடர்ந்தபோதுதான் நான் 'பக்குவ'மடைந்தேன் என்று சொல்ல வேண்டும். அத்தகைய உன்னதமான ஒரு வழிகாட்டல் வானொலி அண்ணா ஆசிரியர் வ. இராசையா அவர்களின் வழிகாட்டல். ஏற்கெனவே அங்கே என்னிலும் இரண்டொரு வயது மூத்த பங்கு பற்றுனர்களாக விளங்கிய மூன்று சகோதரர்களில் ஒருவர்தான் இந்தப் பவள விழா நாயகர் ஜி,பி.வேதநாயகம்.

மூத்தவர் திரு ரெஜினோல்ட் வேதநாயகம். பின்னாளில் உதவி அரசாங்க அதிபராகவும் உயர் பதவிகள் பலவற்றையும் வகித்தவர். இரண்டா மவர் கிறகறி பஞ்சரத்தினம் வேதநாயகம்.[இன்று ஜி.பி.வேதநாயகம்என அழைக்கப்படுபவர்.] மூன்றா மவர் றொபேட் வேதநாயகம். [பின்னாளில் பாராளு மன்றத்தில் சமகால மொழிபெயர்ப்பாளராகவும் பணியாற்றியவர்.]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மூவரின் நமது ஜி.பி.வேதநாயகம் அவர்கள் மட்டுமே வானொலியோடு தனது வாழ்வை மிக நீண்ட காலம் பின்னிப் பிணைத்துக் கொண்டவர். ஓர் ஆசிரியராகப் பணியாற்றும் அளவுக்கு உயர்ந்த போதும் அப்பணியைத் தொடர்ந்தவாறே வானொலியுடனான தம் உறவையும் பேணி வந்தவர். சன்மானம் பெறும் வானொலிக் கலைஞ னாகத் தெரிவாகி வானொலி நாடகங்கள் மற்றும் உரைச் சித்திரங்களில் பங்குபற்றி வந்ததோடு பின்னாளில் ஒரு பகுதி நேர அறிவிப்பாளராகவும் தெரிவானவர். வெறுமனே ஓர் அறிவிப்பாளராக மட்டுமின்றி சிறந்த பாடல் தொகுப்பாளராகவும் திகழ்ந்தவர். அவரது பாடல் தொகுப்பில் சில வித்தியாசமான நிகழ்ச்சிகளும் வானொலியில் ஒலிபரப்பாகி வந்தன.

இவை அனைத்தையும் விட, படைப்பாற்றல் மிக்க ஓர் எழுத்தாளனாகவும் அவர் தன்னை வளர்த்துக்கொண்டார். வானொலி என்ற எல்லை யையும் தாண்டி அது வியாபித்தது. அது இன்ற ளவும் இணையதளத்தினூடாகவும் தொடர்ந்து வருகிறது.

இயல்பாகவே அங்கதச் சுவையில் அவருக்கு ஆர்வம் அதிகம் என்பதால் வானொலிக்குப் பல நகைச்சுவை நாடகங்களை எழுதிப் படைத்திருக் கிறார். அவற்றுள் மூன்று நாடகங்களை நெறிப் படுத்தித் தயாரிக்கும் வாய்ப்பு அடியேனுக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்த்திருந்தது என்பதை இங்கு மகிழ்வோடு பதிவு செய்ய விரும்புகிறேன்.

அந்நாளிலே மாதத்தின் நான்காவது வாரத்தில் மட்டும் தேசிய சேவையில் ஒலிபரப்பாகிவந்த 45 நிமிட நாடகங்களைத் தயாரித்து வழங்கும் பொறுப்பு திருமதி பொன்மணி குலசிங்கம் அவர்களால் என்னிடம் ஒப்படைக்கப்பட்டபோது, சுமார் ஓராண்டு காலம் கவிதை நாடகங்கள், வரலாற்று நாடகங்கள், சமூக நாடகங்கள் எனப் பலவகையாகத் தயாரித்தாலும் நகைச்சுவை நாடகப்பிரதிகள் மிக அரிதாகவே கிடைத்துவந்தன. திரு ஜி.பி.வேதநாயகம் எழுதித் தந்த நாடகப் பிரதிகள் அந்தக் குறையை நிவர்த்தி செய்தன. அவர் எழுதிய 'நீயில்லாமல் நானில்லை', 'வேஷங்கள் மாறலாம்', 'மீண்டும் ஒரு வசந்தம்' ஆகிய நாடகங்களை அடியேன் நெறிப்படுத்தித் தயாரித்து வழங்கினேன். அம்மூன்று நாடகங்களும் நேயர்களது அமோக வரவேற்பைப் பெற்ற நாடகங்கள். அவற்றுள், 'நீயில்லாமல் நானில்லை' என்ற நாடகத்தை இன்றுவரை மறக்க முடியாது. அந்த நாடகத்துக்கு ஜி.பி.வேதநாயகம் முதலில் வைத்திருந்த பெயர் 'நாயில்லாமல் நானில்லை' அதனை அடியேன்தான் 'நீயில்லாமல் நானில்லை' என மாற்றினேன். காரணம், தலைப்பிலேயே நாயைக் கோடிகாட்டி விட்டால், நாயைச் சுற்றித் தான் கதை பின்னப்பட்டிருக்கும் என்று நேயர்கள் ஊகித்து விடுவார்கள். உணர்ச்சி மயமான கதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரப்போகிறதென எதிர்பார்த்துப் படிப்படியாகச் சிரிப்பினை வரவழைக்க வேண்டும் என்ற எனது கணிப்பினைப் புரிந்து கொண்ட நாடக ஆசிரியர் ஜி.பி.வேதநாயகமும் தலைப்பினை மாற்ற இசைந் தார். அந்நாடக ஒத்திகையின் போதும் ஒலிப் பதிவின் போதும் பங்கெடுத்த கலைஞர்களோடு நானும்கூட வரிக்குவரி அடக்க முடியாமல் வாய் விட்டுச் சிரித்து மகிழ்ந்த நினைவு இன்னும் பசுமையாக உள்ளது.

வாழ்க்கை எனும் பயணத்தில் நாமெல்லோரும் வழிப்போக்கர்கள். சிலரோடு நீண்ட தூரம் பயணம் செய்வோம். சிலரோடு இணைந்த பயணங்களோ மிகக் குறுகியது என்றாலும் அவர்களைப் பற்றிய நல்ல நினைவுகள் மட்டும் மிக நீண்ட காலம் நம்மோடு கூடவே வரும். அத்தகைய நல்ல நினைவுகள் ஜி.பி.வேதநாயகம் தொடர்பாகவும் அடியேனது நெஞ்சில் இன்றளவும் நிலைத்துள் ளன. ஊடகத்துறையில் புகழ் பெற வேண்டு மெனில் போட்டியும் கூடவே பொறாமையும் ஏற்படுவது இயல்பு. ஆனாலும் தனது எல்லை களைத் தானே நிர்ணயித்து, அதற்குள்ளே நிறைவு கண்ட மிகச் சில நல்ல மனிதர்களுள் ஒருவர் நண்பர் ஜி.பி.வேதநாயகம். கூடி நின்று பிறரைப் புறங்கூறி மகிழும் கூட்டத்தில் அவரை என்றுமே நான் கண்டதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லாசிரியரான அவரிடம் கல்வி பயின்ற மாண வர்கள் பலர் இன்று உலகின் பல பாகங்களில் உயர் பதவிகளில் இருக்கலாம். அவர்கள் இதயங்கள் அனைத்தும் இந்தப் பவளவிழாக் காலத்தில் நன்றியுடன் அவரை வாழ்த்தி மகிழும் என்று நம்புகிறேன்.

கிறகறி பஞ்சரத்தினம் வேதநாயகம் என்ற மறைமுதல்வனை உடல் உள உறுதியுடன் இன்னும் பல்லாண்டு நிம்மதியும் மகிழ்ச்சியும் தொடர வாழ்கவென்று அடியேனும் வாழ்த்தி மகிழ்கின்றேன். நம் எல்லோருக்கும் பொதுவான ஏக இறை அவருக்கும் அவர்தம் குடும்பத் தினருக்கும் நல்லருள் புரிவாராக.ஆமென்.

அன்புடன்,

வானொலித் தோழன்,

B.H. அப்துல் ஹமீத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'நாளைய நாயகன்' - சிறுவர் [மலர்] நாடக நூலுக்கு மதிப்புக்குரிய ஆசிரியர் திரு.வ.இராசையா அவர்கள் உவந்தளித்த அணிந்துரை



வ. இராசையா

இந்த நூலின் ஆசிரியராகிய கி.ப. மறை முதல்வனை அவரது பள்ளிப் பருவம் முதல் நான் அறிவேன்.

இவர் ஒரு சிறந்த இலக்கியப் படைப்பாளி. நாடகங்களை எழுதியும் அரங்கேற்றியும் நாடகங்களில் நடித்தும் சாதனை படைத்தவர்; வானொலி ஒலிபரப்பாளர். இத்தகைய பன்முகப்பட்ட கலைத்துறை அனுபவங் கொண்ட மறைமுதல்வனது முதலாவது சிறுவர் நாடகத் தொகுப்பாகிய இந்த நூலுக்கு அணிந்துரை வழங்குவதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

சிறுவர்க்குரிய இலக்கியம் வளர்ந்தோருக்கான இலக்கியத்திலும் வித்தியாசமானது. இதை எல்லோரும் இலகுவில் படைத்துவிடல் முடியாது. சிறுவர்களது உள்ளப் பாங்கினை உணர்ந்து, அவர்களது நாட்டம். ரசனை என்பவற்றைப் புரிந்து, அறிவுத் தளத்தை அறிந்து அவற்றுக்கு ஏற்றவாறு படைக்கப்பட வேண்டிய இலக்கியம் இது. சிறுவரிலக்கியப் படைப்பாளி, தாம் சிறுவர்களுக்கு எதை, எவ்வாறு, எதற்காகச் சொல்லப் போகிறார் என்பது பற்றிய தெளிவு உள்ளவராக இருத்தல் வேண்டும். அவர் உயர்ந்த சிந்தனைத் தளத்தில் நின்று திட்டமிட்டு, பின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர்களது மட்டத்துக்கு இறங்கி வந்து சிறுவரோடு சிறுவராக நின்று கொண்டு இந்த இலக்கியத்தைப் படைத் தல் வேண்டும். இது இலகுவில் கைவரும் காரியமல்ல.

மறைமுதல்வன் இந்த வகையில் இலக்கியம் படைத்து வெற்றி பெற்றிருக்கிறார் என்பதை இந்நூல் நமக்குக் காட்டுகிறது. இதிலும் குறிப்பிடத் தக்க ஓர் அம்சம் இது ஒரு நாடக நூல் என்பது. சிறுவர் இலக்கியத் திலும் நாடகம், எழுத்தாளனது படைப்பாற்றலுக்கு ஒரு சவாலாக இருப்பது. அவன் நாடகத்தைப் பின்னும் போது, ஒவ்வொரு கணமும் அதில் வரும் ஒவ்வொரு கதாபாத் திரமுமாகத் தன்னை மாற்றிக் கொள்ளல் வேண்டும். அந்த அந்தப் பாத்திரத்தின் குணவியல்புகள் துலங்கும்படி, சொற்களைப் பொறுக்கியெடுத்து உரையாடலைத் தொடுத் தல் வேண்டும். நாடகம் எழுதும்போது எழுத்தாளன் அந்த உரையாடலைத் தனக்குள் முணுமுணுத்துக் கொண்டே யிருக்கிறான். மறைமுதல்வனும் இவ்வாறு துளித் துளி யாகச் செதுக்கித்தான் 'நாளைய நாயக'னை உருவாக்கி யிருக்கிறார் என்பது இந்த நூலைப் படிக்கும்போது நன்றா கப் புலனாகிறது.

வளர்ந்தவர்களுக்கு இருப்பது போல சிறுவர் களுக்கும் தனியான ஓர் உலகம் இருக்கிறது. வேடிக்கை, விளையாட்டு, அழுகை, சிரிப்பு, போட்டி, பொறாமை என்று பல்லினமான கோலங்கள் அங்கே உண்டு. இவற்றுக்கு அப்பால் சிறுவர்கள் அண்டி வாழுகின்ற வளர்ந் தோருடைய வாழ்வுப் போக்கும் சிறுவர்களைப் பாதிக்கின் றது. இவையெல்லாம் சிறுவர் உலகின் யதார்த்தங்கள். மறைமுதல்வனது நாடகங்கள் இந்த யதார்த்தங்களையே கருவாகக் கொண்டு புனையப்பட்டிருக்கின்றன. இங்குள்ள நாடகங்களில் பெரும் பாலானவை கிராமியக் களத்திலே,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமியப் பிள்ளைகளை முக்கிய பாத்திரங்களாகக் கொண்டு புனையப்பட்டவை. மலையகத்துப் பிள்ளைகளையும் வடக்கு கிழக்குப் பிரதேசப் பிள்ளைகளையும் அவர்களுடைய வாழ்விடச் சூழலுக்குரிய மண்வாசனையுடன் இவற்றிலே காணலாம். அந்த அந்தப் பிரதேசத்துப் பேச்சு நடையும், அதன் பரிமளிப்பும் இந்நாடகங்களுக்கு அணி செய்கின்றன.

இவை ஒலிபரப்பு நாடகங்கள்.செவிப்புலன் ஊடாக நுகர்வதற்கெனவே எழுதப்பட்டவை. ஆயினும் மேடைக் கேற்ற வகையில் ஆங்காங்கே சிற்சில மாற்றங்கள் செய்து கொண்டால், இவற்றுள் பெரும்பாலானவற்றை மேடை நாடகங்களாகவும் ஆக்கிக் கொள்ளலாம். மறைமுதல்வன் இவற்றுள் சிலவற்றைத் தொலைக்காட்சி நாடகங்களாக மாற்றியும் எழுத வேண்டும் என நான் விரும்புகிறேன். நமது பாடசாலைகளில் சிறுவர்கள் நடிப்பதற்குப் பொருத்தமான நாடகங்கள் கிடைப்பது அரிதாக இருக்கின்றது. அந்தக் குறைபாடு இந்த நாடகங்கள் மூலம் ஓரளவு நீங்குகிறது. இவை சிறுவர்கள் படிப்பதற்கும் நடிப்பதற்கும் ஏற்ற நாடகங்கள் ஆதலால், இந்த நூலை ஆசிரியர்களும் மாணவர்களும் விரும்புவார்கள் என்று நம்புகிறேன்.

சிறுவர்கள் வேடிக்கை நாடகங்களையும், அதீத கற்பனை நாடகங்களையும் விரும்புவார்கள் என்பது உண்மையே. ஆயினும், சிறுவர் நாடகத்திலும் ஓர் அர்த்தம் இருத்தல் வேண்டும் என்ற நோக்கிற்கு அமைய ஆசிரியர் இவற்றை யதார்த்த நாடகங்களாகப் படைத்திருக்கிறார். சிப்பிக்கு உள்ளே முத்து இருப்பது போல இங்குள்ள நாடகம் ஒவ்வொன்றின் உள்ளும் சிறுவர்க் கேற்ற அருங் கருத்து ஒவ்வொன்று புதைந்து கிடக்கிறது. அந்தக் கருத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினைத் தூக்கிக் காட்டும் ஒவ்வொரு திருக்குறளை நாடகங்களுக்கு மணிமுடியாகச் சூட்டியிருக்கிறார் ஆசிரியர்.இந்தக் குறள்களைச் சிறுவர்கள் இப்பொழுது மனனம் செய்து கொண்டால் போதும்.பின் நாளில் அவற்றின் பொருளை அவர்கள் முழுமையாகப் புரிந்து கொள்ளலாம்.

இந்த நூலில் உள்ள நாடகங்களில் பெரும் பாலானவை, நான் இலங்கை வானொலியில் சிறுவர் மலர் நிகழ்ச்சி நடத்திக்கொண்டிருந்த போது அந்த நிகழ்ச்சிகளில் ஒலிபரப்பானவையாகும். இவற்றை இப் பொழுது படித்துப் பார்க்கையில், இவை ஒலிபரப்பான அந்த நாள் ஞாபகம் எனது மனத்தில் விரிகிறது. சிறுவர் கள் நாடகங்களிலே நடிப்பதில் காட்டும் ஆர்வமும், நாடகத்தின் சுட்டிசையைக் கேட்கும் போதெல்லாம் அவர்கள் அடைகின்ற குதூகலமும், நிகழ்ச்சியின் போது அவர்களிடையே ஏற்படும் மனக்கிளர்வும் கலகலப்பும் - ஆகிய எல்லாம் இனிய நினைவுகளாக இப்பொழுது எனது மனத்தில் வந்து நிறைக்கின்றன.

நாளைய நாயகன் என்னும் இந்த நூலே இலங்கையில் தமிழிலே வெளியாகும் முதலாவது சிறுவர் நாடக நூல் என எண்ணுகிறேன். பயனுள்ள இந்த நூலைப் படைத்தளித்ததன் மூலம் கிறகறி மறைமுதல்வன் நமது சிறுவர் இலக்கியத் துறைக்குச் சிறப்பான ஒரு பணி புரிந்திருக்கிறார் .மறைமுதல்வனை நான் மனமாரப் பாரா ட்டுகிறேன். இவரது இலக்கியப்பணி தொடர்க! வளர்க்க

வ. இராசையா,

40, லில்லி அவெனியூ, கொழும்பு 06



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**'கழுதைக்கும் காலம் வரும்'** - நகைச்சுவை நாடகங்களின் தொகுப்பு நூலுக்காக பிரபல தமிழக எழுத்தாளர் **ஜ.ரா. சுந்தரேசன்** [அப்புசாமி & சீதாப்பாட்டி புகழ் **'பாக்கியம் ராமசாமி'** வழங்கிய அணிந்துரை



## Bhagyam Ramasami

**[Ja.Ra.Sundaresan]**

**மி**கக் கஷ்டமான ஒரு வித்தையை மிகச் சுலபமாகவும் ஆக்கபூர்வமாகவும் ஜனரஞ்சகமாகவும், ரசித்து ரசித்து நகைத்து நகைத்து இன்புறும் வண்ணமும் செய்திருக்கிறார் இலங்கை வாழ் எழுத்தாளர் திரு. ஜீ.பீ. வேதநாயகம்.

'தமிழக நகைச்சுவை எழுத்தாளர்களின் எழுத்து தன்னை ஊக்கப்படுத்தியது' என்று தன்னுரையில் கூறியிருக்கிறார். இந்த நாடகங்களை இவர் எழுதிய பிறகு நிலைமை தலைகீழாகியுள்ளது. 'இந்த நாடகங்களைப் படித்துவிட்டுத் தான் தமிழ் நாட்டில் இனி எழுத்தாளர்கள் நகைச்சுவை நாடகங்கள் எழுத வேண்டும்; மேடையேற்ற வேண்டும்' என்று கூறத் தோன்றுகிறது.

சாதாரணமாக வானொலி, நகைச்சுவை நாடகங்களுக்கும் அச்சில் வெளிவரும் நகைச்சுவை நாடகங்களுக்கும் மிகுந்த வித்தியாசம் உண்டு. அச்சு எழுத்தைப் படிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது வரும் சிரிப்பு, ஒலி வடிவில் வானொலியில் அதே வார்த்தைப் பிரயோகத்தைக் கேட்கும்போது சுமார் ஐம்பது விழுக்காடு குறைந்துவிடும். அதேபோல வானொலி யிலோ மேடையிலோ திரைப்படத்திலோ பார்த்து, கேட்டு குலுங்க நகைத்த நாடகங்களை அச்சில் படிக்கும்போது அந்த அளவு சிரிப்பு மலரத் தயக்கமாயிருக்கும்.

இந்தப் பெரும் இடைவெளியும் வித்தியாசமும் இந்த நகைச்சுவை வித்த கரின் எழுத்தில் இல்லை. ஒலியாகக் கேட்டாலும், எழுத்தாக வாசித்தாலும் சிரித்தேயாக வேண்டிய பக்குவத்தில் வடித்திருக்கிறார்.

எத்தனையோ வருஷங்களுக்கு முன்னரேயே [1960 களிலேயே] இவர் இந்த வித்தையை நிரூபித்திருக்கிறார் என்பதை அறியும்போது தமிழ் நாட்டு வாசகர்கள் அடைந்த நஷ்டம் புரிகிறது. நாற்பத்தைந்து வருட வட்டியும் சேர்த்தால் மலைப்பு ஏற்படுகிறது.

மணிமேகலைப் பிரசுரத்தார் இவரது நகைச்சுவை நூலை வெளிக்கொண்டு வந்திருப்பது நகைச்சுவை ரசிகர்களுக் குக் கிடைத்துள்ள பாக்கியம்; அதிர்ஷ்டம்.

நண்பர் ஜீ.பீ.வேதாநாயகத்தின் அனைத்து நாடகங்களிலும் கிண்டல்களும் கேலிகளும் மட்டுமல்ல, நாட்டு நடப்பின் லூசான நட்டுகளை முடுக்கித் திருகி ஒழுங்கு செய்ய வல்ல பயனும் இருப்பதைக் காண்கிறோம். [எம தர் பார் அபாரம்!] அனைத்து நாடகங்களையும் திரும்பத் திரும்பப் படிக்கத் தோன்றுகிறது.

அமுதசுரபி மாதிரி சிரிப்புச்சுரபி வைத்திருக்கும் நாடக ஆசிரியர் எழுத்தாளராக மட்டுமின்றி, நடிகராகவும் இருப்பதால் வசனப் பிரயோகங்கள் மகா சரளமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரைச் சரணடைந்திருக்கின்றன. வேதனை தீர்க்கும் நாயகமாக வேதநாயகம் ஜொலிக்கிறார்.

நம் தமிழ் நாட்டுப் பத்திரிகைகள் திரு.ஜீ.பீ.வீ. அவர்களின் எழுத்துக்களை ஏன் இவ்வளவு நாள் நம் கண்ணில் காட்டவில்லை; மேடைகளில் ஏற்றவில்லை என்று ஆச்சரியப்படுகிறேன். வானொலியாவது பயன்படுத்திக் கொண்டதோ தெரியவில்லை.

கும்மாளமான நடை, குத்தலான விமர்சனங்கள், குதூகலமான உணர்வுடன் கூடிய இந்த மாதிரி நாடகங்களை நிறையப் படிக்க மாட்டோமா என்று ஏக்கத்தை ஏற்படுத்திவிட்டார் நாடகாசிரியர் வேதநாயகம்.

மழைக்காலத்தில் தொட்ட இடமெல்லாம் 'ஷாக்' என்பது போல புத்தகத்தில் தொட்ட இடமெல்லாம் சிரிப்பு. வாழ்த்துகள்.

இங்ஙனம்,

பாக்கியம் ராமசாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'**காதல் போயின் கல்யாணம்**' - நகைச்சுவை நாடகத் தொகுப்பு நூலுக்கு 'ஆதவன்' வானொலி சிரேஷ்ட நிகழ்ச்சி முகாமையாளர் திரு. **சுந்தரேஸ்வரன்** பிரதீப் வழங்கிய **அணிந்துரை**.



'**சி**ரிக்கத் தெரிந்த மிருகத்துக்கு மனிதன் என்று பெயர்' என்று ஆளவந்தான் படப்பாடலில் வைர முத்து எழுதியிருப்பார். இன்று, எதையோ பறிகொடுத்தவன் போல ஓடிக்கொண்டேயிருக்கும் அவசர யுக மனிதனுக்கு சிரிப்பு மறந்துபோய் அவன் மிருக மாகிக்கிகொண்டிருக்கிறான். அப்படி மறந்து போன சிரிப்பை மீண்டும் அவனுக்கு ஞாபகமூட்டுபவர்கள் திரு.ஜி.பி.வேதநாயகம் போன்ற படைப்பாளிகள். 'Comedy is a very serious business' என்பது நகைச்சுவை சார்ந்த படைப்புகளைத் தருபவர்களுக்கு அனுபவ ரீதியாகத் தெரிந்த சமாச்சாரம். அப்படி, மருத்துவமனையில் சீரியஸாக இருப்பவரையும் சிரிக்க வைத்துக் குணமாக்கும் அற்புத நகைச்சுவைப் படைப்புகளை திரு.வேதா அவர்கள் தந்திருக்கிறார்.

பாடசாலைக் காலங்களில் இவரது வானொலிப் படைப்புகளை அவ்வப்போது செவிமடுக்கும் சந்தர்ப்பம் வாய்த்திருக்கிறது. அவற்றில் சில சீரியஸான ஆக்கங்களுமிருக்கும். ஆனால், சீரியஸா கச் சொல்வதானால் அவரது நகைச்சுவை ஆக்கங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களே என்னை அதிகம் கவர்ந்திருந்தன. அதிலும் அவரது வானொலி நாடகங்களில் வரும் கதாபாத்திரங்களின் வடிவமைப்பு மிக ஈர்த்தது. ஒருசில கதாபாத்திரங்களே அந்த நாடகங்களில் தொடரும். அதனால், அவற்றின குணவியல்பு தொடர்ந்து வானொலி கேட்கும் நேயர்களுக்கு நன்கு பரிச்சயமாகிவிடும். எனவே, அந்தப் பாத்திரங்கள் குறித்த நாடகத்தில் இருக்கின்றன என்பதை அறிந்ததுமே கேட்பவர்கள் மனக்கண்ணில் அவை உருப்பெற்றுவிடும். அதன்பின்னர் அவை பேசும் வசனங்கள் தயிர்ச்சட்டியில் ஊற்றப்படும் பாணியைப்போல இனிக்க இனிக்க காதுகளுக்குள் இறங்கத்தொடங்கும்.

திரு.வேதா அவர்களின் நகைச்சுவை நாடகங்கள் வெறுமனே சிரிப்பை மட்டும் தராமல் சிந்திப் பதற்குரிய களத்தையும் பரவலாக ஏற்படுத்தித்தர வல்லவை என்பதைக் குறிப்பிட்டேயாகவேண்டும். சமூக அவலங்கள்,அரசியல் நிலைவரம், பிற்போக்குச் சித்தாந்தங்கள், பொருளாதார நிலைகள் என்று அந்தப் படைப்புகள் பலவாறான சிந்தனைகளைக் கேட்பவ ரிடத்தில் கிளறிவிட்டுவிடும். கேட்பவர் அவைபற்றிச் சிந்திக்கிறாரோ இல்லையோ, அடுத்த படைப்புப் பற்றிய சிந்தனையில் திரு.வேதா இறங்கிவிடுவார். அது அடுத்த நாடகத்தில் கம்பீரமாக வெளிப்படும்.

அவரது பாத்திரப் படைப்புகளில் கந்தசாமி - நல்லம்மா தம்பதி பலருக்கும் அறிமுகம். நமது வீடுகளில் அன்றாடம் நடக்கும் கணவன் - மனைவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண்டைகள் இந்தப் பாத்திரங்களைக்கொண்டு வார்த்தைகளில் அழகாக வெளிப்படுத்தப் படுவதோடு அதனூடு இழையோடும் சமூகச் சிந்தனையும் நம்மை ஈர்க்கும். இலங்கைத் தமிழ் வழக்கில், குறிப்பாக யாழ்ப்பாண வழக்கில் நடக்கும் உரை யாடல்களை தனது எழுத்தின் மூலம் அவர் அற்புத மாகக் கையாண்டிருப்பார். அவரது கையெழுத்தும் கூட அச்சுப் பதிப்பித்தது போல அவ்வளவு அழகாக இருக்கும் என்பதை பின்னாட்களில் சூரியன் பண்பலையில்'அரங்கம்' நிகழ்ச்சிக்கான நாடகங்களை தயாரித்திடும்போது அறிந்துகொண்டேன். முத்து முத் தான எழுத்துகளில் அச்சடிக்கப்பட்டவை போன்று அவரது நாடகப் பிரதிகள் இருக்கும். அந்தப் பிரதி களை அவரிடமிருந்து வாங்கி வாசித்திடும் போதே, அந்தப் பாத்திரங்களூடாக அந்த வசனங்கள் எப்படி உருப்பெறப் போகின்றன என்ற சிந்தனை ஓடிடும். அதேமாதிரியான அனுபவம் இந்தப் புத்தகத்தை வாசித்திடும்போது உங்களுக்கும் ஏற்படுமென்று நம்புகிறேன். அவ்வாறு நான் வாசித்துச் சிலாகித்த பிரதிகள், ஒலிப்பதிவின்போது அந்தப் பாத்திரங்களை ஏற்று நடிப்பவர்களின் ஆற்றலால் வேறொரு பரிமாணத்துக்குச் செல்வதையே தனி நூலாக எழுதிடலாம்.

வானொலி நிகழ்ச்சித் தொகுப்பாளராக, ஒலிபரப்பாள ராக, எழுத்தாளராக தனது ஆற்றலை வெளிப்படுத்திக் கொண்டிருக்கும் திரு.வேதா அவர்கள், நடிகராகும் போது நடக்கும் transformation ஐக் காணக் கோடிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்வேண்டும். அந்த நாடகங்களை வானொலியில் கேட்டு இரசித்திடத் தனிக் காதுகளும் வேண்டும். வானொலித் துறைக்கப்பால் இவர் ஓர் அற்புத மேடை நாடக ஆற்றலாளர் என்பதும் கவனிக்கப்பட வேண்டியது. அண்மையில் ஆதவன் வானொலிக்காக அவரை நேர்காணல் செய்த போது, 'நீங்கள் நாடகப் பிரதிகள் எழுத ஆரம்பித்தது எதனால்?' என்று கேட்டேன். 'நடிக்கவேண்டும் என்பதற்காகத்தான் நான் எழுத ஆரம்பித்தேன். என்னுடைய நாடகப் பிரதிகள் என்பதால் எனக்கு நடிக்க வாய்ப்புக் கிடைத்தது' என்றார். இந்தப் பதிலுக்குள் பொதிந் திருக்கும் யதார்த்தம் உற்று நோக்கப்பட வேண்டியது. பல தசாப்தங்கள் வானொலித் துறையோடு பயணித்து விட்டாலும் இன்றும் மிகுந்த தேடலோ டும், உற்சாகத்தோடும், ஆர்வத்தோடும் அவர் இருப்பது எமக்குச் சிறந்ததோர் எடுத்துக் காட்டாகும்.

படைப்புகளை ஆவணமாக்கும் முயற்சிகள் எப்போ தும் முக்கியமானவை. கவிதைகள், சிறுகதைகள், நாவல்கள், பொது அறிவு, கோலம் போடும் வழி முறைகள், சமையல் குறிப்புகள், சினமா நடிகர்களின் வரலாறுகள் நூலாக்கப் படுமளவுக்கு நாடகப் பிரதி கள் பதிப்பிக்கப் படுவதில்லை. இது அந்தத் துறை யோடு இயங்கிக் கொண்டிருக்கும் எம்போன்றவர் களுக்கு மிகுந்த வேதனை தருகிறது. திரு.வேதா போன்றவர்கள் அந்த முயற்சியில் இறங்கியிருப்பது ஓரளவுக்காவது ஆறுதல். இந்தத் தொகுப்பில் இடம் பிடித்திருக்கும் நாடகங்களை அந்தப் பாத்திரங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளோடு ஒன்றி வாசித்திட முயற்சி செய்யுங்கள். அது ஒரு சுகானுபவத்தை நிச்சயம் உங்களுக்குத் தந்திடும். 'இருளடைந்து கிடக்கிறதே என்று முணு முணுப்பதை விட, சிறு மெழுகு வர்த்தியை ஏற்றி வைப்பது மேல்' என்பார் மைக்கேல் டீ மொன்டேய்ன். "நாடகப் படைப்புகள் அருகி விட்டன" என்று வெறு மனே புலம்பிக்கொண்டு மட்டும் இருக்கும் நம் மத்தி யிலிருந்து ஒரு விளக்கையே ஏற்றிவைக்கிறார் - என் வானொலி நாடகத் துறைப் பேராசான் திரு.வேதா அவர்கள். அந்த விளக்கின் ஒளி உலகெங்கும் பிரகா சிக்க இயற்கை அருளட்டும்.

என்றென்றும் நன்றியுடன்

சுந்தரேஸ்வரன் பிரதீப்
(சிரேஷ்ட நிகழ்ச்சி முகாமையாளர் -ஆதவன் வானொலி)

pradysp@gmail.com





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**'இலங்கை வானொலியின் தமிழ் நாடக வரலாறு'** - ஆய்வு நூலுக்கு 'சூரியன்' பண்பலை வானொலிப் பணிப்பாளர்

திரு.A.R. **வாமலோசனன்** வழங்கிய



# மதிப்புரை

**இ**லங்கையின் தமிழ் வானொலி நாடகத் துறையில் அரை நூற்றாண்டுக்கும் மேலான அனுப வம் வாய்ந்த மூத்த எழுத்தாளர், நடிகர் அன்புக்கும் பெரு மதிப்புக்கும் உரிய 'மறை முதல்வன்' G.P.வேதநாயகம் அவர்கள் தன்னுடைய அனுபவ ஆற்றலினாலும் அரிய தேடலினாலும் உரு வாக்கியுள்ள இந்த வரலாற்றுப் பதிவில் அணிந்துரை வழங்குபவனாக நானும் சேர்ந்ததில் மிகப் பெருமை யடைகிறேன்.

எங்கள் சிரேஷ்டர்களில் ஒருவரான திரு.G.P.வேதநாய கம் அவர்கள் தனது குருநாதரான எங்கள் தாத்தா சானா சண்முகநாதன் அவர்களுக்குச் சமர்ப்பணம் செய்துள்ள இந்நூலில்,தனது குருநாதரின் சார்பாக என் னையும் அழைத்திருப்பதாக எண்ணி அகமகிழ்கிறேன்.

தாத்தா வழியில் அம்மா, நான், சகோதரன் செந் தூரன் என்று நால்வர் இந் நூலாசிரியருடனும் அவ ரெழுதிய நாடகங்களிலும் நடித்திருக்கும் வாய்ப்பை பெற்றிருக்கிறோம் என்பது பெருமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னாளில் இவரது ஆற்றலையும் அனுபவத்தையும், சூரியன் வானொலியில் நாங்கள் ஆரம்பித்து [பிரதீப்பின் தயாரிப்பில்] சில ஆண்டுகள் வெற்றிகரமாகக் கொண்டு சென்ற 'அரங்கம்' நாடக நிகழ்ச்சிக்குப் பிரதி எழுத்தாளராகவும் நடிகராகவும் பயன்படுத்திக் கொள்ளும் வரமும் வாய்ப்பும் கிட்டியது. எமக்கு இவரது வழிகாட்டல் தந்த துணை பெரியது.

எம் நாட்டில் தமிழ் ஊடகங்களுக்கும் புதிதாக இத்துறையில் வருவோருக்கும் தகுந்த வழி காட்டி, கைநூல்கள் இல்லாதிருப்பதை யும் எங்கள் மொழியின் சிரேஷ்ட விற்பன்னர்களும் வல்லுனர்களும் தங்கள் அனுபவங்களைப் பதிவுகளாகத் தராமலிருப்பதையும் பற்றி அடிக்கடி நான் குறிப்பிட்டு வந்திருக்கிறேன். தமிழ் வானொலி நாடகக் கலை அருகிவருகிறது என்று கவலையும் அச்சமும் வெளியிடப்பட்டு வரும் இக்காலகட்டத்தில் இந்நூல் அத்தியாவசியமான ஓர் ஆவணம்.

இலங்கை வானொலியில் பணிப்பாளர்களாக, தயாரிப்பாளர்களாக நீண்ட காலம் பணியாற்றிய அனுபவஸ்தர்கள் செய்திருக்க வேண்டிய ஒரு பாரிய கடமையை, நல்ல வேளையாக இத்தனை ஆண்டுகள் கடந்த பின்னராவது மறைமுதல்வன் மேற்கொண் டிருக்கிறார்.

இலங்கை வானொலித் தமிழ் நாடக உலகின் கடந்த கால வரலாற்றை மிக நுணுக்கமாக ஆராய்ந்து தகவல்கள் ஏதும் விட்டுப் போகாமல் எழுத்தாளர்கள், கலைஞர்கள், நாடகத் தயாரிப்பாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் பற்றிய துல்லியமான தகவல்களைப் பதிவு செய்துள்ளார். இளைய சந்ததியினரான எம்மைப் போன்றவர்கள் பலரும் அறியாத பல விஷயங்களை அறியத் தந்து வியப்பில் ஆழ்த்தியுள்ளார். எழுத் தாளர்களினதும் கலைஞர்களினதும் காணக் கிடைக் காத அரிய நிழற் படங்களைத் தேடிச் சேகரித்து அவர் இந்நூலில் ஒன்றுசேரத் தந்துள்ளமை ஒன்றும் சாமான்யமான காரியமல்ல.

நூலாசிரியரே தமது முகநூலில் ஒரு போது குறிப்பிட்டது போல, இ.ஒ.கூ.தாபனத் தமிழ்ச் சேவையினரின் நூலாக்கக் குழுவினர் 11 பேர் சேர்ந்து 2000 இல் வெளியிட்ட பவள விழா மலரானது, 'பல எலி `கூடினால் மண்ணெடாது' என்பதற்கொப்ப, பல நாடகக் கலைஞர்களையோ, தயாரிப்பாளர்களையோ, எழுத்தாளர்களையோ கண்டு கொள்ளாது அதன் இயலாமையை வெளிச்சம் போட்டுக் காட்டி நிற்கும் போது, பல பேர் கூடி இழுக்க வேண்டிய தேரைத் தனி ஒருவராக வெற்றி கரமாக இழுத்து வந்து சேர்த்துள்ள ஆசிரியரின் சாதனை வியக்க வைக்கிறது; பெருமிதம் கொள்ளச் செய்கிறது.

மேடை நாடகங்கள் பற்றிய, அதிலும் குறிப்பாக நவீன நாடகங்கள் பற்றிய பல்கலைக் கழகம் சார்ந்த நூலாசிரியர்கள் சிலரின் ஆய்வு நூல்கள் வெளிவந்துள்ளன. வானொலி எழுத்தாளர் கள் சிலரது அனுபவப் பதிவுகளும் நூல்களாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிவந்துள்ளன. ஆயினும் வானொலி நாடகங்கள் பற்றிய பரந்து பட்ட ஆய்வு நூலாக முதன் முதலாக வெளிவந்துள்ள நூலிதென்பதும் இதன் சிறப்புகளுள் முதன்மையானது..

ஆய்வு நூல் எழுதுபவர்கள் சில வேளைகளில் அறிந்தோ அறியாமலோ ஒரு பக்கச் சார்பாக எழுதி விடுவதுண்டு. போட்டி பொறாமை பொச்சரிப்புக் காரணமாகச் சிலரது பெயர்களை இருட்டடிப்புச் செய்து விடுவதுண்டு. அவ்வாறில்லாமல் இந்நூலை நடு நிலை கோணாது, இன்னார் இனியாரெனப் பாராது, தானறிந்த உண்மைகளை உள்ளபடியே பதிவு செய்துள்ள ஆசிரியரின் நேர்மையை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

சமீப காலத்தில் வெளிவரும் நூல்கள் பலவற்றிலும் எழுத்துப் பிழைகளும் இலக்கணப் பிழைகளும் மலிந்து காணப்படுகின்றன. அவ்வாறான வழுக்களைத் தவிர்த்து மிகுந்த செய்நேர்த்தியுடன் இந்நூலானது வடிவமைக்கப் பட்டுள்ளமையையும் காண முடிகிறது. ஒரு நடிகராக, நாடக எழுத்தாளராக ஒலிபரப்பாளராக நாமறிந்த G.P.வேதநாயகம் அவர் களின் மற்றொரு பரிமாணத்தை இந்நூல் மூலம் தரிசிக்க முடிகிறது.

சானா காலம் முதல் அதன் பின்னரான 50 ஆண்டு கால வானொலி நாடக உலகின் அத்தனை விடயங்களையும், கலைஞர்களையும், கால மாற்றங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களின் விளைவுகள் இலங்கையின் தமிழ் வானொலி நாடகத்துறையில் ஏற்படுத்திய மாற்றங்களையும் கூடவே பயணித்து அறிந்தவர் என்ற அடிப்படையில் அன்புக்குரிய திரு.G.P. வேதநாயகம் அவர்கள் இது பற்றி எழுதுவது மிகப் பொருத்தமும் பொறுப்புணர் வும் கண்ட ஒரு காலத்தின் கடமை.
இவரது தேடலும் உழைப்பும் எமக்கும் எதிர்கால சந்ததி க்கும் மிகப்பெரிய பொக்கிஷத்தைத் தந்துள்ளன,

வணக்கத்துடன் வரவேற்கிறேன்.

**A.R.V.லோஷன் (இரகுபதி பாலஸ்ரீதரன் வாமலோசனன்)**
**A.R.V.Loshan**

**பணிப்பாளர் - சூரியன் FM**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

‘இலங்கை வானொலியின் தமிழ் நாடக வரலாறு’ - நூலுக்கு திரு. P.விக்னேஸ்வரன் வழங்கிய

'**அணிந்துரை**' யில் இருந்து....



ஒலிபரப்புக் கலையின் சகல அம்சங்களும் பற்றிய பூரண நூலாகவும், ஒலிபரப்பு நிகழ்ச்சித் தயாரிப்புப் பற்றிய பயிற்சி நூலாகவும், வானொலியில் செய்தி முதல் பல்வேறு நிகழ்ச்சிகள் தயாரிப்பது பற்றிய நூல்களாகவும், ஒலிபரப்புத்துறையில் அனுபவங் கொண்ட பலரது அனுபவப் பகிர்வுகளாகவும், சில நாடக எழுத்தாளர்களது வானொலி நாடகங்களின் தொகுப்பாகவும் பல நூல்கள் இதுவரை வெளியிடப் பட்டிருக்கின்றன. இந்த நூல்கள் பற்றிய விபரங்களை G.P. வேதநாயகம் இந்நூலின் இறுதியில் பட்டியலிட்டிருக்கிறார்.

ஆயினும் மக்களால் மிகவும் விரும்பி இரசிக்கப்பட்ட இலங்கையின் தமிழ் நாடகத்துறை பற்றி ஆங்காங்கே கட்டுரை வடிவில் வெளிவந்த சில குறிப்புகளைத் தவிரப் பூரணமான விபரங்களைக் கொண்ட நூல் எதுவும் இதுவரை வெளிவரவில்லை.

இந்நிலையிலே G.P.வேதநாயகம் அவர்களின் வானொலி நாடகத் தயாரிப்பாளர்கள், எழுத்தாளர்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடிகர்கள் பற்றிய விபரங்களைக் கொண்ட இந்த நூலை மிக முக்கியமானதொன்றாக நான் கருதுகிறேன். மேலை நாட்டவர்களைப் போல வரலாற்றைப் பேணும் கலாசாரம் எமக்குக் கிடையாது. பதிவுகள் பேணப்படுவதில்லை. நடப்பவை எல்லாமே அந்தந்த நேரங்களில் மட்டும்தான். பின்னர் அவை பற்றி யாரும் அக்கறை கொள்வதில்லை. சிறிது காலத்திலேயே அவை அடியோடு மறக்கப்பட்டு விடுகின்றன. இந்த நிலை, சிலருக்குத் தாம் நினைத்த வாறு வரலாற்றைத் திரிக்க வாய்ப்பாக அமைந்து விடுகிறது. குறிப்பாக, உள்நாட்டு யுத்தத்தால் நிலை குலைந்துவிட்ட ஈழத் தமிழர்களுக்குத் தம்மை மீள நிலை நிறுத்துவதே முக்கியமாக இருக்கின்ற நிலையில் எமது பல்துறை வரலாறு பற்றிய அக்கறை அவசியமற்ற தாகிப் போய்விட்டது. இதனால் போருக்கு முந்திய பல விபரங்கள் தற்போதைய தலைமுறையினருக்கு முற்றாக அந்நியமாகி விட்டன. இந்த நிலையில் இலங்கை வானொலித் தமிழ் நாடக வ்ரலாற்றைத் தன்னால் முடிந்தளவில் பதிவிட்டிருக்கும் G.P.வேதநாயகம் அவர் களின் பணி மிகவும் பாராட்டுதற் குரியது.

சிறுவயது முதலே ஒலிபரப்புத் துறையோடு நெருக்கமாகியிருந்த G.P.வேதநாயகம், எழுபதுகளில் எனது காலத்தில் எனக்குப் பழக்கமானவர். 'மறை முதல்வன்' என்ற பெயரில் வானொலி நாடகங்கள் எழுதியவர். எல்லோருடனும் கௌரவமாகவும் நேர்மை யுடனும் பழகும் பண்பு கொண்டவர். அவரது சில நாடகங்களை நானும் தயாரித்திருக்கிறேன். எழுபதுகளில் அவர் ஆசிரியத் தொழில் நிமித்தம் மலையகத்தில் பணி புரிய நேரிட்டதால் அவரை அடிக்கடி வானொலி நிலையத்தில் காண முடியாவிட்டாலும் அவ்வப்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது பங்களிப்பைச் செய்து வந்தார். அவர் இலங்கை வானொலியில் தெரிவு செய்யப்பட்ட வானொலி நாடக நடிகர் மட்டுமல்ல. பகுதி நேர அறிவிப்பாளரும்கூட.

தொண்ணூறுகளில் அவரது ஆசிரிய பணியிலிருந்து ஓய்வு பெற்று ஒலிபரப்புத்துறையில் தீவிரமாக ஈடுபட்ட G.P. வேதநாயகம், அந்தக் கால கட்டத்தில் பல நாடகங்களை எழுத, அவற்றை அப்போதைய பல புதிய தயாரிப்பாளர்கள் தயாரித்திருப்பதாக அறிகிறேன். வானொலியுடன் அதிக தொடர்பு கொண்டிருந்த அந்தக் கால கட்டத்தில்தான் அவருக்கு இந்த நூலில் இடம் பெற்றிருக்கும் விபரங்களைத் திரட்டக் கூடியதாக இருந்திருக்கிறது. அதே நேரம், வானொலியுடனும் வானொலியின் பல கலைஞர்களுடனும் சிறு வயதி லிருந்தே கொண்டிருந்த நெருக்கமான தொடர்பு காரண மாகப் பெற்ற அறிவு அவருக்குப் பின்புலமாக அமைந்து இந்த முக்கிய பணியைச் செய்வதற்கு உதவியிருக்கிறது.

G.P.வேதநாயகம் வானொலிக்கெனப் பல நாடகங்களை எழுதியதோடு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம் நடத்திய வானொலி நாடகப்பிரதி எழுத்துப் போட்டியொன்றில் பரிசு பெற்றவர் என்பது குறிப்பிட்டுச் சொல்லப்பட வேண்டியதொன்றாகும்.

இந்த நூலை எழுதும்போது வரலாறு எழுதும் சிலரைப்போல தமக்கு வேண்டாதவர்களை மறைத்து எழுதாமல் பல விபரங்களையும் திரட்டித் தந்திருக்கிறார். ஏதேனும் தகவல்கள் விடுபட்டிருந்தால் அது அந்தத் தகவல் எழுதும்போது நினைவுக்கு வராததால் ஏற்பட்டிருக்குமேயல்லாது அதில் உள் நோக்கமெதுவும் இருக்காதென்பதை இந்த நூலை வாசிக்கும்போது நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணரக்கூடிய விதத்தில் பல தகவல்களைத் தந்திருக் கிறார். இதை வாசித்த போது நான் முற்றாக மறந்திருந்த பலர் எனது ஞாபகத்தில் வந்தனர். இந்த நூல் வானொலி நாடகத்துறை பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபடுபவர்களுக்கு ஒரு முக்கிய உசாத்துணை நூலாக அமையுமென்ற நம்பிக்கை எனக்குண்டு.

சானா அவர்களின் ஆரம்ப காலத்து வானொலி நாடகங்களில் பங்களிப்புச் செய்தவர்களையும் எனது புலம்பெயர்வின் பின்னர் தொண்ணூறுகளில் தெரிவான நாடக நடிகர்கள், எழுத்தாளர்களையும் தவிர ஏனைய அனைவரோடும் எனக்கு நேரடியான பழக்கம் உள்ளது. இந்த நூலை வாசிக்கும்போது எனது பழைய வானொலி நினைவுகளை மீட்டு, ஒவ்வொருவரையும் மனக் கண் ணில் தரிசிக்க முடிந்தது. அந்த வாய்ப்பினை எனக்களித்த G.P.வேதநாயகம் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரி விப்பதோடு,அவர் பூரண உடலாரோக்கியத்துடன் எழுத்துத் துறையிலும் நாடகத் துறையிலும் மேலும் பல சேவை களை ஆற்ற வேண்டுமென்ற எதிர்பார்ப்புடன் அவருக்கு எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

P.விக்னேஸ்வரன்

வானொலி, தொலைக்காட்சி நாடகத் தயாரிப்பாளர்

ரூபவாஹினித் தமிழ் நிகழ்ச்சிப் பிரிவின் முன்னாள் தலைவர்,

ரொரன்ரோ, கனடா.

நவம்பர் 12 , 2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




1971 - நவம்பர்



'வெள்ளி' கட்டுரைப்போட்டியில் ரூபா. 200 பரிசு பெறுகிறார்.

கி. ப. வேதநாயகம் (மறை முதல்வன்)

178, ஸ்ரீகுணானந்த மாவத்தை கொழும்பு-13.

ஈழத்து எழுத்தாளர்களின் படைப்புக்களை நமது இளைஞர்கள் எவ்வளவு ஆர்வத்துடன் மிகவும் உன்னிப்பாக வாசித்து வருகிறார்கள் என்பதற்கு இக் கட்டுரைப்போட்டிக்கு வந்து சேர்ந்த கட்டுரைகள் நல்ல சான்றாக இருந்தன!

'தினகரன்' வாரமஞ்சரி (14-10-70) இதழில் ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தினால் எழுதப்பட்ட "சீதனம்" என்ற சிறுகதையே, நாம் குறிப்பிட்டிருந்த காலப் பகுதியில், ஈழத்தில் படைக்கப்பட்ட மிகச் சிறந்த படைப்பு என்று கூறி அதனை விமர்சிக்கின்றார் கொழும்பைச் சேர்ந்த இளைஞர் திரு. கி. ப. வேதநாயகம் 1945ம் ஆண்டு நவம்பர் மாதம் கரம்பனில் பிறந்தவர் இவர்!

இவரது கட்டுரையே பரிசுக்குரியதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது.

— ஆசிரியர்.




**தி.ச.வரதராசன்** எனும் எழுத்தாளர் **'வரதன்'** 70 களில் மாத இதழாக வெளியிட்ட 'வெள்ளி' நடாத்திய கட்டுரைப் போட்டியில் [முதற்] பரிசு பெற்ற இக் கட்டுரையானது **1971** நவம்பர் 'வெள்ளி' இதழில் 16 - 19 ஆம் பக்கங்களில் பிரசுரிக்கப்பட்டது. இது பற்றிய ஆசிரியரின் குறிப்பு வருமாறு -

## 'வெள்ளி' கட்டுரைப் போட்டியில் ரூபா 200 பரிசு பெறுகிறார்

கி.ப.வேதநாயகம் [மறைமுதல்வன்]

178, ஸ்ரீ குணானந்த மாவத்தை, கொழும்பு - 13



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்து எழுத்தாளர்களின் படைப்புகளை நமது இளைஞர்கள் எவ்வளவு ஆர்வத்துடன் மிகவும் உன்னிப்பாக வாசித்து வருகிறார்கள் என்பதற்கு இக் கட்டுரைப் போட்டிக்கு வந்து சேர்ந்த கட்டுரைகள் நல்ல சான்றாக இருந்தன!

'தினகரன்' வாரமஞ்சரி [14 – 10 – 70] இதழில் ராஜேஸ்வரி பாலசுப்பிரமணி யத்தினால் எழுதப்பட்ட 'சீதனம்' என்ற சிறுகதையே, நாம் குறிப்பிட்டிருந்த காலப் பகுதியில், எழுத்தில் படைக்கப்பட்ட மிகச் சிறந்த படைப்பு என்று கூறி அதனை விமர்சிக்கின்றார் கொழும்பைச் சேர்ந்த இளைஞர் கி.ப.வேதநாயகம். 1945 ம் ஆண்டு நவம்பர் மாதம் கரம்பனில் பிறந்தவர் இவர்.

இவரதுகட்டுரையேபரிசுக்குரியதாகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறது. - ஆசிரியர்

# 'வெள்ளி' கட்டுரைப் போட்டிப் பரிசுக் கட்டுரை

**செ**த்தை வேலிகளுக்கப்பால் சிதம்பிச் சீரழிந்து கொண்டிருக்கும் ஒரு சமூகத்தையே விழுங்கி ஏப்பம் விட்டுக் கொண்டிருக்கும் 'சீதனம்'. அதன் வக்கரித்த விளைவுகளைச் சிறப்பாகச் சிறுகதை ஒன்றில் அடக்கிக் காண்பித்து விட்டமையால், புதிய தலை முறையினரான ராஜேஸ்வரி பாலசுப்பிர மணியத்தை நம்பிக்கைக்குரிய நல்லதொரு எழுத்தாளராக நாமும் இனங் கண்டு கொள்கிறோம். ஒரு புதிய, அதுவும் பெண் எழுத்தாளரின் பேனா சீதனக் கொடுமையைச் சாடி எழுகின்ற வேகத்தைக் காணும்போது எமக்கேற்படுவது வியப்பும் சிலிர்ப்பும்தான்.

"மங்கையராய்ப் பிறந்திடில் - மா சீதனம் சேர்த்திட வேண்டுமம்மா"எனத் தனக்குள் பாடி வேதனையுடன் சிரித்துக் கொள்ளும் முப்பது வயதுக் 'கிழட்டுக் குமர்' இந்திரா, கொழும்பில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நர்ஸாக வேலை செய்யும் அவள் தங்கை ராணி, அந்த வீட்டுப் பெரிய ஆண்பிள்ளையான- பல்கலைக் கழகப் புகுமுகப் பரீட்சை முடிவுக்காகக் காத்திருக்கும் தம்பி சிவசம்பு, இருட்டிய பின் வீட்டுக்கு வரும் ஒரு செம்மண் சிலையான தகப்பன், அச் சமூகத்தின் பழைய சம்பிரதாய வேலிக்குள் தன்னைச் சிறைப்படுத்திக் கொண்டு போராடி மாயும் ஒரு தாய் - இவைதாம் 'சீதன' பாத்திரங்கள்.

'ஸ்டாண்டட்'டான மாப்பிள்ளை கிடைக்காமல் முப்பது வயதுவரை காலத்தையோட்டிவிட்டு, 'என்ன சனியனோ - நீயும் துலையிறாய் இல்லை எங்களுக்கும் நிம்மதி இல்லை' என்று நாளாந்தம் தாயிடம் வசவு வாங்கிக் கட்டும் இந்திரா, எவ்வளவு பரிதாபத்துக்குரிய ஒரு பாத்திரம்?

'கட்டிக் கொடுக்க வக்கில்லாமல் ஏன் பெத்தினமாம்?' என மனதிற்குள் மறுகும் அவளே தன்னால் தன் தங்கைமாரின் திருமணங்கள்கூடத் தடைப்படுகின் றனவே என்றும் வேதனைப்படுகின்றாள். பதினைந்து வருடங்களுக்கு முன்னால் படிக்கும்போது சகமாணவன் ஒருவனை, காதல் கடிதம் எழுத வைக்குமளவுக்கு அவளும் அழகியாகத்தான் இருந்தாள். ஆனால் இப் போது தன்னோடொத்த வயதுப் பெண்கள் புருஷன் பிள்ளைகளுடன் வரும்போது தானறியாத் தவிப்பில் துடித்துப் போய்விடுவோமே என்று கோவில் குள மெல்லாவற்றையும் கனவுலகக் காட்சிகளாக விலக்கி வாழ்பவளாக மாறிவிட்டாள்.

அப்படி அவளை மாற்றி வைத்தது எது? 'விரும்பியா விரதம் இருக்கிறன்? யாரையெண்டாலும் கொண்டு வா கட்டுறன்' என மனதிற்குள் அழுகிறாளே இந்திரா, அவளா அழ வேண்டியவள்? சீதனக் கொடுமையால் செல் லரித்துப் போன இந்தச் சமூகத்தில் பிறந்து விட்டதற் காக, அக் கொடுமைகளைக் களைய மார்க்கம் காணா மல் வாழாவிருக்கிறோமே- நாமல்லவா அழ வேண்டிய வர்கள். இந்திராவின் பாத்திரம் நம் மனதில் எழுப்பும் சிந்தனைகளும் சலனங்களும் கதாசிரியையின் வெற்றி யை உறுதிப் படுத்தும் சான்றுகள்.

எல்லாமே தலைவிதியென்று நம்பி நசிந்து கொண்டிருக்கும் அச் சமூகத்தின் புதுமைப் பெண்தான் ராணி. தமக்கைக்குத் திருமணம் ஆகாத காரணத்தை உணர்ந்து, தனது பிரச்சினைகளுக்குத் தானே தீர்வு காணும் துணிச்சலும் கெட்டித்தனமும் கொண்டு, தனது வாழ்க்கைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணையைத் தானே தெரிந்தெடுத்துக் கொள்ளும் அவள் காதலிப்பதோ வேறு சாதியா னொருவனை.

அச் சாதிபேதம் தன்னைப் பாதிக்குமோ என அவள் அஞ்சவில்லை. ஆனால் தமக்கைக்கு வரப் போகும் நல்வாழ்வை அது தாக்கிவிடக் கூடாதே என்று தான் அவள் ஆதங்கப்படுகிறாள்.

["நான் உனக்கு முதல் கலியாணம் செய்யிறதைப் பற்றிப் பயப்பிடலை. ஆனால் பேந்து உனக்கு கலியாண மாகாது. அதுதான் நீ முதலில் கலியாணம் செய்தா பேந்து நான் பேசாமச் செய்து விடுவேன்"]

சமூகத்தின் குறைபாடுகளுள் ஒன்றான சாதிப் பிரிவினை இவ்விடத்தில் சாடையாகத் தலை நீட்டு கிறது. கதாசிரியை அதற்கும் அழுத்தம் கொடுக்க முயன்றிருந்தால் அவ்வளவுதான். அத்துடன் அவர் 'குளோஸ்'!

தானெடுத்துக் கொண்ட கருப் பொருளைச் செவ்வனே சொல்ல முடியாமல் 'அந்தரித்'திருப்பார். ஆனால், 'இப்படியும் ஒரு தடை இருக்கிறது' என்பதை மட்டும் பட்டும் படாமலும் தொட்டுக் காட்டிவிட்டு நாசூக்காக நழுவி விடுவதன் மூலம் நூலிழையில் நடக்கும் 'சர்க்கஸ்காரனை' நிகர்க்கிறார். மிகப் பெரிய எழுத்தாளர்களே சறுக்கி விழுந்து விடும் இத்தகைய சந்தர்ப்பத்தில் சாமர்த்தியமாகத் தப்பிவிடும் இவரது திறமை வியக்க வைக்கின்றது.

கதையில் இந்திராவின் பாத்திரத்தை வலுப்படுத்தவே பிற பாத்திரங்கள் யாவும் அறிமுகப்படுத்தப்படுகின்றன. இந்திராவைப் போன்ற பெண்களை 'வாழ' வைப்பதற்காக, ராணியைப் படைத்து, வாழும் வழியைக் காட்டியிருக்கிறார் ஆசிரியை. கதை பின்னிச் செல்லும் பிரச்சினைக்கான மறைமுகமான தீர்வும் கதையிலேயே கோடிகாட்டப்பட்டுவிடுகிறது. யாழ்ப்பாணத்தில் வந்து நிற்கிற காலம் வரைதான் கதையில் ராணி உலவுகிறாள். அப்பால் அவளைப்பற்றிக் கதையில்லை. பிற பாத்திரங்களும் அவ்வாறே. தேவைக்கதிகமாகத் தலையை நீட்டாமல் ஒதுங்கிக் கொள்கின்றன. பாத்திரங்களின் இயக்கங்களை அளவோடு கட்டுப் படுத்தியுள்ள முறையிலும் மேதை தெரிகிறது.

பூர்வ புண்ணியமாக, 'பியூப்பிள் டீச்சராக' எடுபடும் இந்திரா, புதிய சூழ்நிலையில் பழகிப் போகிறாள். அங்கே, 'கிழட்டுக் குமர்' இவள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுமல்ல. இன்னும் இரண்டொரு கிழட்டுக் குமர்களுமல்ல, கிழட்டு வாலிபர்களும் இருக்கிறார்கள். அவர்கள் பாவம் எந்தத் தமக்கைக்கு அல்லது தங்கச்சிக்கு தம் ஆசைகளை நரைதிரை மூப்பாக்குகிறார்களோ?

எந்த ஒரு பாத்திரத்திற்கும் வழக்கறிஞராகத் தன்னை நியமித்துக் கொண்டு வலிந்து தன் கட்சியை நிலை நிறுத்த முயலாமல், இயல்பாக இந்திராவின் மனவோட்டமாகவே தனது கருத்தைப் பதிந்து விடுகின்றார் ஆசிரியை, அதனாலேயே கதைக்கு நிறைவான ஒரு கலை வடிவம் கிடைத்து விடுகின்றது.

புதிய சூழ்நிலையில் ஆண்களுடன் பழகும்போது அவளது இளமை உணர்வுகள் பீறிட்டுக் கிளம்புவதை எவ்வளவு இயல்பாக வடித்திருக்கிறார்.

'இப்போதெல்லாம் இந்திரா அடிக்கடி பெருமூச்சு விடுகிறாள். இரவில் தலையணையைக் கட்டிப் பிடித்துக் கொண்டு தூக்கமில்லாமல் தவிக்கிறாள். அதன் பிரதி பலிப்பு அடுத்த நாள் கிழட்டு வாலிபர்களுடன் தாராள மாகக் கதைக்கிறாள். எப்போது கலியாணம் நடக்கும்? இப்போதெல்லாம் என்னமாதிரி 'ஸ்டைல்' செய்கிறாள்! யாரும் காதலிக்க மாட்டார்களா?' 'ஆனாலும் என்னவோ ஒரு துடிப்பு. ஒரு தவிப்பு. ராணியைப் போல் நானும் தனியாகப் படத்துக்குப் போய்...'

பெண் பார்க்க வந்தவர்களின் பேச்சு சீதன விஷயத்தில் அதுக்கு இதுக்கென்று நீள நீள, இந்திராவின் மனக் கோட்டைகள் யாவும் சரிந்து தரை மட்டமாகின்றன. 'ஏன் கலியாண வீட்டுக்குப் பட்டாசு வெடிக்கச் சீதனம் வேண்டாமோ?' எனப் படபடத்துப் பொரிகிறாளே, அந்தக் குமுறலுடன் அவள் மாறிவிடுகிறாள்.

அவளது மாற்றத்துக்கான காரணிகளைப் படிப்படியாக, அழகாக வளர்த்துக் கொண்டு வந்தமையால் அதை நாமும் சரியென ஏற்றுக் கொள்ள வைத்துவிடுகிறார். 'டசின்' கணக்கான 'அவை'க்குத் தரிசனம் கொடுத்து ஏற்பட்ட ஏமாற்றம், ராணியின் நடவடிக்கை விளைவித்த மனப் போராட்டம், பியூப்பிள் டீச்சராகத் தன் காலில் நிற்பதால் உண்டான தைரியம், காலச் சுவடுகள் அவளிடம் பதித்துவிட்ட கசப்பான அனுபவங்கள்- எல்லாமாகச் சேர்ந்து அவளை மாற்றி விடுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம் மாற்றத்தின் பின் 'இச் சமுதாய அமைப்பே அடியோடு மாறிப் பணத்தின் மதிப்பு அழிந்து, விரும்பிய வாழ்க்கையையே விரும்பியபடி பெறும் காலம் வாராதா' என ஒரு போது ஏங்கிய இந்திரா, சமுதாய அமைப்பையே பழி வாங்குபவள் போல நடந்து கொள் கிறாள். ஆண் பெண் வித்தியாசமின்றித் தன்னோ டொத்தவர்களுடன் அவள் பேசிச் சிரிக்கிறாள். 'ஊர் வாய் மூடவில்லை. திறந்த வாயில் அவளை மென்று கொண்டிருக்கிறது'. 'எது எவரெவரால் கட்டிக் காக்கப்பட்டதோ, சம்பிரதாயம், ஒழுங்கு என்ற பெயரில் - அந்த ஒழுங்கு ஒன்றும் அவளுக்குத் தேவையில்லையாம்' என்று மூன்றாம் ஆளாக நின்று கொண்டு ஆசிரியர் கதையை முடிக்கிறார். படாரென்று முகத்தில் அறைந் தாற் போன்ற, எவ்வளவு வேகமான[forcible] தாக்கமான முடிவு!

சிறுகதை என்பது வாழ்க்கையின் சாளரம். அந்தச் சாளரத்துக்கூடாக ஒரு சமூகத்தின் முழுப் பின்னணியையுமே காட்ட முடிவது அற்புதமான சாதனை. ஒரு சமூகத்தினது எல்லா இயல்புகளையும், ஒரு சிறுகதைக் குள்ளேயே மடக்கி ஒரு பாத்திரத்தின் வளர்ச்சியாலும், மன அவசங்களாலுமே சொல்லி முடித்து விடுவதென்ன சாமான்யமான செயலா?

தனது உருவ அளவுபாட்டால், குறிப்பிட்ட சில உணர்ச்சிகளையும் நிகழ்ச்சிகளையும் ஏந்த முடியாத சிரம முள்ளது சிறுகதை. ஆனால் 'சீதன'த்தில் தன்னால் ஏற்க முடிந்தளவு நிறைவாகவே அது ஏந்திக் கொள்கிறது.

திடீர்த் தோற்றம், மூச்சு விடாத ஓட்டம், பட்டெனும் முடிவு எனும் சிறுகதையின் அமைப்பு இலக்கணங் களை மீறாமல், அதே வேளை அவ்விலக்கணங்களுக்குள் அடங்கி விட வேண்டுமே என்ற நிர்ப்பந்தத்தில் சிரமப்பட்டு வளைக்கப்படாமல், கதைக்கென்று புகுத்தப் பட்டு முன் நீட்டிக் கொள்ளும் செயற்கைத் தன்மையோ பிரசாரத் தொனியோ எங்கேயும் தலை நீட்டாமல், காலம், இடம், நிகழ்ச்சியில் ஒருமைப்பாடு கொண்டு, உணர்ச்சியிலோ சுவையிலோ பேதம் காட்டாமல், எதார்த்த நிலைகளைச் சிறப்பாகச் சித்தரித்து, எடுத்துக் கொண்ட பொருளை - சீதனக் கொடுமையை - படிப்போர் நெஞ்சில் அழகாகப் பதித்துச் சுவையான ஒரு கலையனுபவமாகவும், வாழ்வின் பிரதிபலிப்பாகவும் திகழும் 'சீதனம்' ஈழத்து எழுத்துலகு பெற்று விட்ட சிறந்த சீதனமென்றால் அது பொய்யாகாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மறைமுதல்வன் **G.P.** வேதநாயகத்துடனான

# ஒரு நேர்காணல் ....

செவ்வி கண்டவர் - **'ஆதவன்'** பண்பலை வானொலிக்காக - 'ஆதவன்' சிரேஷ்ட நிகழ்சசி முகாமையாளர் -

**சுந்தரேஸ்வரன் பிரதீப்.**

*இன்று எம்முடன் தமது தமது வானொலிக்கால நினைவுகளை, அனுபவங்களைப்பகிர்ந்து கொள்ள வந்திருக்கும் நாடறிந்த எழுத்தாளர் மறைமுதல்வன்* **G.P.** *வேதநாயகம் அவர்கள் நம்மைப் போன்ற வானொலி இரசிகர்களுக்கெல்லாம் மிக நெருக்கமாக அறிமுகமானவர். அவர் எழுதி நடித்த நாடகங்கள் பலவும் இலங்கை வானொலியுட்படப் பல ஒலியூடகங்களிலும் ஒலிபரப்பாகி மிகுந்த வரவேற்புப் பெற்றவை. இன்று எமது ஆதவன் வானொலிக்காக அவரைச் சந்திப்பதில் மகிழ்ச்சி யடைகிறோம். வணக்கம் வேதநாயகம் அவர்களே!*

**வணக்கம்பிரதீப்!**

*மறைமுதல்வன் என்ற புனை பெயரிலும் நீங்கள் பல ஆக்கங்களை எழுதி வருகிறீர்கள். அப்புனைபெயரை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*நீங்கள் தெரிவு செய்யக் காரணம் எதுவென்று கூறமுடியுமா?*

எனது 15 ஆவது வயதில் நான் பத்தாம் ஆண்டில் படித்துக் கொண்டிருந்த போது 'கும்பகர்ணன் வதைப் படலம்' எமக்குப் பாடநூலாக இருந்தது. அதில் ஒரு பாடல் 'வேதநாயகனே உன்னைக் கருணையால் வேண்டிவிட்டேன்....' என ஆரம்பமாகும் அப்பாடலுக்கு உரை எழுதியவர் மறைமுதல்வனே எனத் தனித் தமிழாக்கம் செய்திருந்தார். அன்று தொட்டு எனது எழுத்து முயற்சிகளுக்குப் பெரும்பாலும் அப்பெய ரையே நான் பயன்படுத்தலானேன். சொல்லப்போனால் வேதநாயகம் என்பது எனது தந்தையாரின் பெயர். எனது சகோதரர்களும் கூட வேதநாயகம்கள் தான். வேதநாயகம் எனும் போது அதில் எனது தனித்துவம் அடிபட்டுப் போய்விடுகிறது. எனது தந்தையார் கலைமாணிப் பட்டதாரியாக, வித்துவான் பட்டம் பெற்ற ஒரு தமிழறிஞராகப் பலராலும் அறியப் பட்டவராக இருந்தார். அவர் பெயரில் குளிர் காய்வது எனக்கு உடன்பாடானதாக இருக்கவில்லை என்றும் கொள்ளலாம். இது சம்பந்தமாக ஒரு சிறு நிகழ்வு ஞாபகம் வருகிறது. ஒருக்கால் ஏதோ ஒரு பத்திரிகையில் யாரோ ஒரு வேதநாயகம் நடிகை மனோரமாவிடம் அவரது அழகின் ரகசியத்தையோ என்னத்தையோ பற்றி வேண்டாத ஒரு விழலக் கேள்வியைக் கேட்டுத் தொலைத்திருந்தான். வீட்டில் சினிமா சம்பந்தமாக அதிகம் வாசிப்பவன் நானாகத் தான் இருந்திருக்கும் போலும். அதனால் அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழல்க் கேள்வியைக் கேட்டிருப்பவன் நானாகத் தான் இருக்கும் எனத் தீர்மானித்துத் தனது பெயரை இப்படியான சில்லறை விடயங்களில் போட்டு நாறடிக்க வேண்டாமென்று காலை தொட்டு மாலை வரை அநியாயமாக என்னை ஏசித் தள்ளிவிட்டார் எனது தந்தையார். அதே மனோரமா, ஆச்சியான பின்னர் அவருடன் தொலைக்காட்சி நாடகம் ஒன்றில் நடிக்கக் கிடைத்தபோது கூட அப்படியான அபத்தமான கேள்விகளை நான் அவரிடம் கேட்டவனல்ல. பழி ஓரிடம் பாவம் ஓரிடம் எனறானதற்குக் காரணமாக அமைந்த அப் பெயரை விட மறைமுதல்வன் என்ற பெயரில் எனது தனித்துவம் வெளிப்படக் கூடியதாக இருந்தது என்னவோ உண்மைதான்.

*நவீன தமிழிலக்கியத்தின் பல்வேறு துறைகளிலும் நீங்கள் பங்காற்றிய போதிலும் இலங்கை வானொலியுடன்தான் உங்கள் தொடர்பு அதிகமாக இருந்துள்ளது. வானொலியுடனான தொடர்பு உங்களுக்கு எவ்வாறு ஏற்பட்டது எனக் கூறுவீர்களா?*

1957 இல் நான் ஆறாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தேன். அந்நாளில் பெரும்பாலானோரைப் போல எமது வீட்டினர்க்கும் பிரதான பொழுது போக்கு வானொலி கேட்பதுதான். அதில் ஒலிபரப் பாகி வந்த 'விவேகச் சக்கரம்' நிகழ்ச்சியும் பலராலும் விரும்பிக் கேட்கப்பட்ட ஒன்று. எனது அண்ணன் SVR அதில் கலந்து கொண்டு தொடர்ந்து பணப் பரிசீட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வது வழக்கம். அதில் ஞாயிறு தோறும் ஒலிபரப்பான 'சிறுவர் மலர்' நிகழ்ச்சியும் பிரபலமான ஒன்று. அதில் சிறுவர்களுக்கான ஒரு நடிப்புப் போட்டி பற்றி ஒருமுறை அறிவித்தார்கள். 12 வயதில் இருந்து 16 வயது வரையானோர்க்கென அப்போட்டிக்கான வயது வரம்பு இருந்தது. அப்போது நான் கொழும்பில் உள்ள பிரபல கல்லூரியொன்றில் படித்துக் கொண்டிருந் தேன். எனக்குப் 12 வயதாக ஆறு மாதங்கள் மட்டில் இருந்தன. ஆயினும் அப்போட்டியில் கலந்துகொள்ள விரும்பி விண்ணப்பித்தோம். நேர்முகப் போட்டிக் கான கடிதமும் வந்தது. எனது நடிப்புக்கான பிரதி யை எனது பெரியண்ணா எழுதி **அதற்காக** என்னை ஆயத்தப் படுத்தினார். ஷேக்ஸ்பியரின் 'ஜூலியஸ் சீசர்' நாடகத்தில் இருந்து மார்க் ஆண்டனி பேசுவ தான நீண்ட பேச்சு அது. இன்றும்கூடப் பசுமையாக அது எனது ஞாபகத்தில் உள்ளது .அப்போது திரு. எஸ்.குஞ்சிதபாதம் அவர்கள் ரேடியோ மாமாவாக இருந்தார். அவர் ஒரு பாராளுமன்ற சமகால உரை பெயர்ப்பாளர் என்பதும் அந்நாளில் பிரபலமான வானொலி நடிகர் என்பதும் பின்னாளில் நான் தெரிந்துகொண்டவை. அப்போட்டிக்கு சானா சண்முக நாதனும் சரவணமுத்து மாமாவும் சிறுவர் மலர் நிகழ்ச்சித் தயாரிப்பாளராகவும் வானொலி அக்கா வாகவும் அப்போதிருந்த திருமதி பொன்மணி குலசிங்கமும் நடுவர்களாகக் கடமையாற்றியதாக ஞாபகம். அப்போட்டியில் எனக்குத்தான் முதற் பரிசு கிடைத்தது. கண்ணகியாகச் சீறிய ஜெயகௌரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுப்பிரமணியமும் கட்டபொம்மனாகக் கர்ஜித்த பாபு ராஜேந்திராவும் அடுத்த இரு பரிசுகளையும் பெற்றார்கள். அப்போது வானொலிக் கலையகத்தில் காலடி வைத்தவன்தான். அது என்னைப் பற்றிப் பிடித்துக் கொண்டது. தொடர்ந்து சிறுவர் மலர் நாடகங்களில் நடித்துப் பெற்ற அனுபவம் நாடக நடிகனாக நீண்ட காலம் என்னைத் தக்க வைத்துக் கொண்டது.

*சிறுவர் மலர் மூலம் அனுபவம் பெற்ற பலரும் வானொலி நடிகர்களாக, அறிவிப்பாளர்களாகப் புகழீட்டியுள்ளார்களால் என்பது தெரிந்த விஷயம். நீங்கள் எப்போது நாடக அரங்க நடிகரானீர்கள்?*

அது ஒரு நீண்ட கதை. அதை ஏற்கெனவே பலமுறை பல செவ்விகளிலும் நான் கூறியிருக்கிறேன். ஆகவே சுருக்கமாகவே கூறிவிடுகிறேன். எமது கல்லூரி ஆசிரியர் திரு.வ.இராசையா அவர்கள் 'இளைஞர் மன்றம்' எனும் நிகழ்ச்சியை வானொலியில் தொகுத்து வழங்கிக் கொண்டிருந்த காலமது. அதில் நானும் பங்குபற்றுவது வழக்கம். அப்படியாகச் சென்ற ஒரு நாளில் லண்டன் கந்தையா நாடகத்தில் நடித்த நடிகர் ஒருவர் வராமல் போகத் திடீரென ஒரே நாளில் 'நாடக அரங்க' நடிகனாக நான் மாறிவிட்ட மாயம் நேர்ந்தது. அது நடந்தது 64 இல் என நினைக்கிறேன்.

*ஆனால் 70 களில் வாசகர் தயாரிப்பாளராக இருந்த காலத்தில் நீங்கள் நடித்ததாகத் தெரியவில்லையே?*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மைதான். நானாகத் தேடித் போகாமல் தானாகக் கிடைத்ததாலோ என்னவோ அதன் முக்கியத்துவம் எனக்குத் தெரியாமல் போய்விட்டது போலும். யானை தனது தலையில் தானே மண்ணை வாரிப் போட்டுக் கொண்ட மாதிரி நானே எனக்குக் குழி பறித்துக் கொண்டேன்.

'லண்டன் கந்தையா' நாடகம் நிறைவுற்ற பின்னர் சானாவின் தயாரிப்பில் ஒரு யாழ் பேச்சு வழக்கு நாடகத்தில் நடித்தேன். அதன் பின் திரு C.V. ராஜசுந்தரத்தின் தயாரிப்பில் பார்லிமென்ட் சுந்தா நெறிப்படுத்திய 'மனிதனைப் பாடமாட்டேன்' எனும் கவிஞர் இ.முருகையனின் இலக்கிய நாடகத்தில் குலோத்துங்க சோழனாக நடித்தேன். ஒத்திகையின் போது திரு. கா.சிவத்தம்பி அவர்களைக்கூட - அப்போது அவர் பேராசிரியர் ஆகவில்லை - அழைத்து வந்து 'புது முக' நடிகனான எனது நடிப்பை அவர் பார்க்க வைத்தார். ஆனால் பின்னர் ஒரு முறை நான் வானொலி நிலையத்துக்குச் சென்ற போது குரல் தேர்வு மூலம் எடுபடாத காரணத்தால் எனது பெயர் நடிகர்கள் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டு விட்டதாகவும் அதனால் என்னைத் தமது நாடகத்தில் போட முடியாமல் போய்விட்டதாகவும் 'சுந்தா' குறிப்பிட்டார்.

இக்காலகட்டத்தில் **1968** இல் நான் 'முசுப்பாத்திதான்' என்ற நாடகத்தை எழுதித் தயாரித்து கொழும்பு, லும்பினி மேடையில் முதன்முதலாக அரங்கேற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னேன். அந்நாடகம் மூலம்தான் K.S. பாலச்சந்திரன் முதன்முதலாக கொழும்பு நாடக உலகிற்கு அறி முகமானார். இந்நாடகத்தில், இலங்கை வானொலி யில் தமிழ் அறிவிப்பாளர்கள் தெரிவாகும் முறை யில் உள்ள பாரபட்சம் பற்றிக் கொஞ்சம் மிகை படவே கிண்டல் பண்ணி விட்டேன். அது உரியவர்கள் காதுகளுக்குப் போய்ச் சேராமல் விட்டிருக்குமா? அதே நாடகத்துக்கான விளம்பரத் தாளில் அந் நாட்களில் கொழும்பு மேடைகளில் பிரபலமாக விருந்த K.M. வாசகரின் நாடக நோக்குப் பற்றியும் நையாண்டி செய்திருந்தேன். இளங்கன்று பயமறி யாது என்பது போல கொஞ்சம் அதிகப் பிரசங்கித் தனமான காரியங்கள்தாம். சிந்தாமணி பத்திரிகையில் வெளியான விமர்சனத்தில் திறனாய்வாளர் ஜெய சீலனும்கூட அதைச் சுட்டிக் காட்டியதாக ஞாபகம். பழம் தின்று கொட்டை போட்டவர்களைக் கற்றுக் குட்டியான ஒருவன் குட்டிப் பார்க்கப் புறப்பட்டால் சும்மா விடுவார்களா? நடிகர்களுக்கான மற்றும் அறிவிப்பாளர்களுக்கான நேர்முகத் தேர்வுகளில் நான் நிராகரிக்கப்பட்டேன். இலங்கை வானொலியின் நுழைவாயிற் கதவுகள் எனக்கு மூடப்பட்டுவிட்டன. வானொலி நாடக எழுத்தாளர்கள், நடிகர்களின் உச்ச பட்ச உயர்வுக் காலத்தில் நானோ அஞ்ஞாதவாசம் செய்ய நேரிட்டது. அது எனது துரதிர்ஷ்டம்தான்.

*நாடக எழுத்துத் துறைக்கு எப்போது வந்தீர்கள்? எப்படி வந்தீர்கள்?*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைக் காலத்திலேயே, நான்காம் ஐந்தாம் வகுப்புகளில் படிக்கும் போதே சின்னச் சின்ன நாடகங்கள் சில எழுதி வகுப்பறையில் மேடை யேற்றியுள்ளேன். 1963 இல் எமது கல்லூரித் தமிழ்ச் சங்க ஆண்டு விழாவில் 'நெஞ்சில் நிறைந்தவை' எனும் முழு நீள நகைச்சுவை நாடகம் ஒன்றை எழுதி நடித்து நெறியாள்கை செய்து மேடையேற்றி னேன். பிரபல நடிகர் C. நடராஜசிவம் நாயகனாக முதன் முதலாக மேடையில் அறிமுகமானது அந்த நாடகத்தில்தான். அதற்குப்பின் நான் முன்னர் குறிப்பிட்ட 'முசுப்பாத்திதான்' நாடகம் **1968** இல் மேடையேறியது.

1969 இன் பிற்கூற்றில் இலங்கை வானொலியில் நாடளாவிய ரீதியில் ஒரு மணி நேர நாடகங் களுக்கான போட்டி ஒன்று பற்றி அறிவிக்கப்பட்டது. அதில் கலந்து கொள்வதற்காக 'நீதியின் நிழலில்' என்ற துப்பறியும் நாடகத்தை எனது தம்பி சத்தியராஜின் பெயரிலும் 'தயிரா வடையா?' என்ற நகைச்சுவை நாடகத்தை பஞ்சரத்தினம் எனும் பலரும் அறியாத எனது மற்றொரு பெயரிலும் எழுதி அனுப்பினேன். சொந்தப் பெயரில் அனுப்பினால் சுகமாக இருந்திருக்க மாட்டாதென்பது தெரிந்த விஷயம்தானே? நானே எதிர்பாராத விதமாக முதலிரு பரிசுகளும் எனக்கே கிடைத்துவிட்டன! உண்மையைச் சொன்னால் துப்பறியும் நாடகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்றுமுழுதாக எனது சொந்தக் கற்பனையே. நகைச்சுவை நாடகத்தின் கரு மட்டும் இரவல்.

***1969** இல் நாடகப் போட்டியில் ஒன்றுக்கு இரண்டாகப் பரிசுகள் பெற்ற நீங்கள் அதற்குப் பின்னர் **1970**களில் வானொலிக்கு நாடகங்கள் எழுதியதாகத் தெரியவில்லையே?*

'லண்டன் கந்தையா'வில் நடித்த பின்னர் திரு சானாவின் அறிமுகம் காரணமாக **67, 68** களில் அவர் நடாத்திய 'மத்தாப்பு' நகைச்சுவைக் கதம்ப நிகழ்ச்சிக்குச் சில குறு நாடகங்களை எழுதிய போதிலும் எனக்கு அவை அவ்வளவாகத் திருப்தி யளிக்காததால் தொடர்ந்து நான் எழுதவில்லை. முழு நீள நாடகங்கள் என நான் முதன்முதலாக வானொலிக்கு எழுதியது வானொலி நாடகப் போட்டிக்குத்தான். பெரிதாகக் குத்தி முறியாமல் ஒன்றுக்கு இரண்டு பரிசுக் கனிகள் தாமாகவே என் கரம் தேடி வந்த காரணத்தினாலோ அல்லது **70** களில் வானொலியோடான எனது தொடர்பு விட்டுப்போய் யாழ்ப்பாணம், எட்டியாந்தோட்டை என எனது ஆசிரியப் பணி காரணமாக நான் இடம்பெயர நேரிட்டமையாலோ என்னவோ எனது எழுத்து முயற்சி சில காலம் தொடராது தடைபட்டுப் போனது.

*ஆனாலும் 'சிறுவர் மலர்' நிகழ்ச்சிக்கான நாடகப் பிரதிகள் பலவற்றை அக்காலகட்டத்தில்தான் நீங்கள்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*எழுதியதாக உங்கள் 'நாளைய நாயகன்' நாடக நூல் முன்னுரையில் நீங்கள் குறிப்பிட்டுள்ளதில் இருந்து அறிய முடிகிறது. அது பற்றிக் கூறுங்களேன்.*

எனது கலை இலக்கியப் பயணத்தில், எழுத்தூழியத்தில் எனது நல்விதிப்படி நான் பெற்ற பெரும் பேறாக - எனது கல்லூரி ஆசிரியராக, குருவாக, வழிகாட்டியாக வாய்க்கப்பெற்றவர் ஆசிரியர் திரு. வ,இராசையா அவர்கள். எனது நாடக எழுத்தில் அவர் வைத்திருந்த நம்பிக்கை அபரிமிதமானது. எமது கல்லூரித் தமிழ்ச் சங்கத்தின் 25 ஆம் ஆண்டுக் கலைவிழா நாடகத்தை எழுதித் தயாரித்து வழங்கும் பொறுப்பை நம்பிக்கையுடன் துணிந்து அவர் என்னிடமே ஒப்படைத்திருந்தார். அதற்காக நான் எழுதி நெறியாள்கை செய்து ஜோர்ஜ், ஜோக்கிம், நடா போன்ற எமது கல்லூரி நண்பர்களுடன் நடித்து மேடையேற்றிய நாடகமான 'கலை + 6 தலை = ஒரு கொலை' எனும் நகைச்சுவை நாடகப் பிரதியைக் கல்லூரித் தமிழ் விழா மலரிலும் பிரசுரித்து ஆசிரியர் என்னைப் பெருமைப் படுத்தியிருந்தார். நான் ஒரு வானொலி நடிகனாகக் கால்கோளிட்டதும் அவரது 'இளைஞர் மன்றமே'.

70 களில் சிறுவர் மலர் நிகழ்ச்சியின் தயாரிப்பாளராக, வானொலி மாமாவாக அவர் பொறுப்பேற்றபோது அதற்காகச் சில நாடகங்களை எழுதித் தருமாறு அவர் அன்புக் கட்டளையிட்டார். எப்படியாவது எழுதியே ஆகவேண்டும் எனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்ப்பந்தத்தால் அப்போது சில நாடகங்களை எழுதி னேன். அவற்றுள் தப்பித் பிழைத்த சில 'நாளைய நாயகன்' எனும் நூலுருவாயின.

*சிறுவர்களுக்கான வானொலி நாடக நூலை வெளியிட உங்களுக்கு வேறொரு ஆசிரியரின் சிறுவர் மலர் நாடக நூல் தூண்டுகோலாக இருந்திருக்கலாமோ என திரு. எழில்வேந்தன் ஒரு குறிப்பில் கூறி இருந்ததாகவும் அதற்கு நீங்கள் மறுப்புத் தெரிவித்திருந்ததாகவும் ஒரு சேதி வந்ததே... அதுபற்றிக் கூறுங்களேன்.*

சில பிசகுகளை உடனுக்குடன் தீர்த்துவிடுவதுதான் நல்லது. அப்போது நான் கொஞ்சம் மெத்தனமாக இருந்துவிட்டேன். இப்போது அது கொஞ்சம் காலம் கடந்துவிட்ட விஷயம்தான். பழையதைக் கிளறிப் புண்ணியமில்லைத்தான். ஆயினும் சில விஷயங் களைத் தெளிவுபடுத்தி விடுவது நல்லது.

நான் எழுதிய நாடகங்கள் சிலவற்றை நூலுருவாக வேண்டும் எனும் எண்ணம் 80 களின் பிற்பகுதி யிலேயே எனது மனதில் துளிர் விட்டுவிட்டது. அதிலும் 'சிறுவர் மலர்' நாடகங்களைத்தான் முதன்முதலாக வெளியிட வேண்டும் எனும் நோக்கும் இருந்தது. அதற்காக 'தேசிய கலை இலக்கியப் பேரவை' எனும் அமைப்பின் மூலம் நூல்களைப் பதிப்பித்து வெளியிடும் நோக்கத்தில் இருந்த திரு. சோ.தேவராஜாவை அணுகிச் சில ஆரம்ப முயற்சிகளும் மேற்கொண்டேன். நாட்டின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்க்காலச் சூழலால் அது தடைப்பட்டுப் போனது. அங்கிங்கென நானும் ஓடியலைய நேரிட்டதால் பிரதிகளும் அவரிடத்தில் தங்கிவிட்டன. நல்லவேளையாக அவர் அவற்றைப் பாதுகாத்து மீளத் தந்தார். பின்னர், எனது ஆசிரியப் பணி ஓய்வின் பின் அறிவிப்பாளனாக மீண்டும் இலங்கை வானொலியுடனான தொடர்பு புதிப்பிக்கப்படவும் புதிதாக அறிமுகமான நண்பரும் கவிஞருமான சிதம்பரம்பிள்ளை சிவகுமாரிடம் நூல் பதிப்புப் பற்றிப் பிரஸ்தாபித்தேன். இவ்விடயத்தில் V.N.S.உதயச்சந்திரன்தான் அனுபவஸ்தர் எனக்கூறிச் சிவகுமார் அவரைக் கைகாட்டிவிட்டார்.

உதயசந்திரன் எனக்கு ஏற்கெனவே ஓரளவிற்கு அறிமுகமானவர்தான். அவரது தந்தையார் யாழ்ப் பாணத்தில் என்னுடன் கற்பித்த ஒரு சக ஆசிரியர். தனது மகனுக்குக் கொழும்பில் ஆசிரிய நியமனம் கிடைத்திருப்பதாகவும் அங்கு அவர் தங்க, எமது வீட்டில் வசதி செய்து தர முடியுமா என்றும் அவர் என்னிடம் ஒருபோது இறைஞ்சினார். நானும் எனது தம்பியுடன் அவர் தங்க ஒழுங்கு செய்து கொடுத்தேன். அவ்வாறாகக் கொழும்பில் அவர் காலடி பதித்தது எமது வீட்டில்தான். நானெழுதிய ஒருசில நாடகங்களிலும் பின்னர் அவர் நடித்தும் இருந்தார்.

எழுத்தாளரும் பதிப்பாளருமான திரு.S.ரஞ்சகுமாரை எனக்கு அறிமுகப்படுத்திவிட்டு அவர் ஒதுங்கிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டார். ஆனால் உண்மையில் அவர் ஒதுங்கிக் கொண்டார் எனக் கூறமுடியாது. சிறுவர் மலரில் பின்னாளில், அவர் வானொலி மாமாவாக இருந்த போது தாமெழுதிய நாடகங்கள் சிலவற்றை அவசர அவசரமாக அவர் தேடியெடுத்துச் சூட்டோடு சூடாக எனது நூல் வெளிவரும் முன்பாகப் பதிப்பித்தும் விட்டார். தனது நன்றிக் கடனை இவ்வாறாக அவர் ஆற்றி முடிக்க, எனது நூல் வெளியீட்டு விழாவில் உரையாற்றிய நண்பர் தயானந்தா அவரைப் பார்த்துதான் இவருக்கு அதாவது எனக்கு உந்துதல் ஏற்பட்டதோ என ஐயமெழுப்பி அவருக்கு இலவச விளம்பரமும் தேடிக் கொடுக்க, நண்பர் எழிலும் அதையே வழிமொழிந்து விட்டார். நான் செய்த பிழை அப்போது வாய்மூடி மௌனியாக இருந்தது தான். பிசகை அப்போதே மேடையிலேயே தீர்த் திருக்க வேண்டும். பல சமயங்களில் நான் இப்படித்தான். வாயைக் கொடுக்கவேண்டிய இடத்தில் வாழாவிருந்துவிட்டுப் பின்னர் மனம் மறுகுவது வழக்கமாகிவிட்டது.

*50 ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கை வானொலி நடிகனாகவும் நாடக எழுத்தாளனாகவும் இருந்து வருகிறீர்கள். ஆயினும் இன்றுவரை பரவலாக அறியப்படாதவராகவே இருக்கின்றீர்கள். இதற்கான காரணம் என்னவென்று நினைக்கின்றீர்கள்?*

ஒரே நாடகம் வானொலியில் நூறுமுறை ஒலி பரப்பாகுமானால் அதில் நடித்த நடிகர்களும் சில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேளை நினைவுகூரப்படலாம். ஆனால் அது சாத்தியமில்லை. சிறுகதை, நாவல் போன்ற இலக்கியங்களை நயக்கவும் விமர்சிக்கவும் பலர் இருக்கின்றார் கள். எத்தனை காலம் போனாலும் அவற்றைத் தேடி வாசிக்க முடியும். நாடகங்களின் நிலை அப்படியல்ல. காற்றில் கரைந்து போன பின் அவற்றை ஞாபகத்தில் மட்டுமே மீட்டுப் பார்க்க முடியும். தொடர்ச்சியாக நாடகங்களைக் கேட்டு விமர்சித்தவர் எவருமில்லை. பொதுவாக நாடகங்கள் பற்றியோ நாடக நடிகர்கள் பற்றியோ சரியான கணிப்பீடு செய்யப்பட்டு முறையான விமர்சனம் வைக்கப்படுவதில்லை. அதனால் காற்றில் கலை படைக்கும் எம் போன்றோரது திறமைகள் உணரப் படாமல் பத்தோடு பதினொன்றாக அடிபட்டுப் போய்விடுகின்றன.

தமிழில் வானொலி நாடகங்கள் உச்சபடசமாகக் கேட்கப்பட்ட **70** களில் என் பங்களிப்பு இல்லாமல் போய் விட்டதும் ஒரு காரணம். **இவை** அனைத்துக்கும் மேலாக எனது இயல்புதான் முக்கிய காரணம் என்பேன். எதற்கும் எங்கேயும் வளைந்து கொடுத்துப் போகத் தெரியாதவன் நான். எனது சுயமரியாதைக்குப் பங்கம் வந்தால், என்னை யாரும் சிறுமைப்படுத்த நினைத்தால் நான் சீறி எழுந்து விடுவேன். எனது தன்னம்பிக்கையும் என்னைப் பற்றிய எனது சுய கணிப்பும் சிலருக்குத் தற் பெருமையாகத் தெரிந்திருக்கலாம். அதனால் சிலருக்கு என்னைப் பிடிக்காமல் போயிருக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நக்கீரன் எனது நாவில் குடியிருக்கிறான் போலும். அதனால் நண்பர்கள் கூடச் சிலவேளைகளில் என்னைப் பகைவனாகக் கருத வைத்துவிடும். உள்ள படி எனது திறமைகளை ஏற்று அங்கீகரிக்கவோ புகழ்ந்து பேசவோ இவையெல்லாம் தடையாக இருந்திருக்கலாம்.

*இலங்கை வானொலித் தமிழ் நாடக வரலாறு பற்றிய உங்கள் ஆய்வு நூலில் பல எழுத்தாளர் களையும் நடிகர்களையும் பற்றி நீங்கள் குறிப்பிட்டு எழுதியிருக்கிறீர்கள் அல்லவா?*

ஆமாம். அது ஒரு ஆரம்பம். அவ்வளவுதான். அதில் சில நல்ல வானொலி நடிகர்களையும் எழுத்தாளர் களையும் இனங்காட்டி நினைவூட்டினாலும் அது ஒரு முழுமையான மதிப்பீடல்ல. அந்நூலின் நோக்கமும் அதுவல்ல. ஒரு வானொலி நடிகனாக வும் எழுத்தாளனாகவும் இருந்த போதிலும் ஒரு திறனாய்வாளனாக விலகி நின்று நான் நடுநிலை பேணினாலும் கூட நானே அறியாமல் சில சார்பு நிலைகள் ஏற்படவும் இடமுண்டு. எனக்கெதிரான விமர்சனங்கள் வைக்கப்படவும் வாய்ப்புண்டு. சிறு கதை நாவல் இலக்கியங்களைப் பொறுத்த மட்டில் எத்தனை திறனாய்வாளர்கள்? எத்தனை எத்தனை நூல்கள்? கைலாசபதியோ சிவத்தம்பியோ போன்ற வர்கள் சிறுகதை, நாவல்கள் என எழுதிப் பெயர் பதித்தவர்களல்ல. அதனால், அவர்களுக்கான சார்பு நிலைகள் இருந்த போதிலும்கூட அது சம்பந்தமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் கணிப்பீடுகள் ஒருதலைப்படசமாக இருக்க மாட்டாதென நம்பப்படுகின்றது. வானொலி நாடகங்களை பொறுத்தமட்டில் அத்தகைய ஒரு கணிப்பீட்டை வானொலி நாடகப்பிரியராக, நேயராக இருக்கும் ஒருவர் மேற்கொள்வதே பொருத்தமானது. ஆனால் அவ்வாறாக எவருமே செய்யவில்லை. அதுதான் எமது துரதிர்ஷ்டம்.

*வானொலி நாடகங்களைப் பொறுத்தமட்டில் 'உண்டா' விருதுகள் போன்ற விருதுகள் உள்ளதாமே?*

அது ஒரு 'உல்டா' விருது. அவ்விருது பெற்றவர்களை நான் குறைகூறவில்லை. இப்படிச் சொல்வதற்காக அவர்கள் என்னை மன்னிக்க வேண்டும். அவர்களின் திறமைகளை குறைவாக மதிப்பிட்டு நான் இதைக்கூறவில்லை. ஆனால் அவ்விருது பற்றி எனக்குச் சந்தேகமாக உள்ளது.

திடீரெனத் **90**களின் நடுப்பகுதியில் இருந்து இத்தகைய ஒரு விருது வானொலித் தமிழ் நடிகர்களுக்கும் சில நேரங்களில் எழுத்தாளர்களுக்கும் கொடுபடத் தொடங்கியது. விஷயம் தெரியாமல் விழுந்தெழும்பியவர்களில் நல்லவேளையாக நானில்லை. யார் கொடுக்கிறார்கள்? எங்கிருந்து கொடுக்கிறார்கள்? என்ன அடிப்படையில் கொடுக்கிறார்கள்? - என்று அறிய முடியவில்லை. **Google** இல் போய்த் தேடினால் அப்படி ஒரு விருது உண்டா எனும் ஐயப்பாடுதான் தோன்றுகிறது. இதுபோல ஒரு 'கொண்டா' விருதையோ 'குண்டா' விருதையோ ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சதம் செலவில்லாமல் இணையதளம் மூலம் நீங்களும் உங்களுக்குத் பிடித்தவர்களுக்கு வழங்கி மகிழலாம். இது போல ஆயிரம் விருதுகள் தமிழ் நாட்டில் புழுத்துப் போய்க் கிடக்கின்றன.

*நகைச்சுவை எழுத்தில் முதன்மையானவராக நீங்கள் தடம் பதித்தும்கூட இ.ஒ.கூ.தாபனப் பவள விழாவின் போது வெளியிடப்பட்ட நகைச்சுவைக் குறுநாடகங் களின் இறுவெட்டில் கூட உங்களது நாடகங்கள் ஏதும் இடம்பெறவில்லைப் போல தெரிகிறதே?*

அப்படி ஒரு இறுவெட்டு வெளியாகப் போகிறது என்று எனக்கே தெரியாது. 2001 இல் பவளவிழா ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்த போது நானும் அங்குதான் பணியாற்றிக் கொண்டிருந்தேன். விஷயத்தை வெளியில் விடாமல் கமுக்கமாகக் காரியம் பார்த்துவிட்டார்கள். நகைச்சுவைத் தொடர் நாடகங்கள், குறு நாடகங்கள் நீங்கலாக யோகராஜனின் தயாரிப்புக் காலத்தில் மட்டுமல்ல வானொலி நாடக வரலாற்றுக் காலத்திலேயே மிக அதிகமான நகைச்சுவை நாடகங்களை எழுதியவன் நான்தான். நானெழுதிய 'கதம்பம்' குறு நாடகங்களும் ஏராளம். அவ்வாறிருந்தும் அவ்விறுவெட்டில் எனது நாடகங்கள் எதையும் சேர்த்துக் கொள்ளாமல் கூட இருந்தே புறமுதுகில் குத்திவிட்டார் ராஜபுத்திரன்! அதற்கு அறிந்தோ அறியாமலோ எனது நல்ல நண்பர் தயானந்தாவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணை போய் விட்டார் என்பதுதான் நான் எதிர் பாராத என்னால் ஜீரணிக்க முடியாத துரோகம்.

*நாடகம் பற்றிய 'பவள விழாக் கருத்தரங்கில் நீங்கள் பங்கு கொண்டு கட்டுரை வாசித்தீர்களே?*

ஆமாம். அது நான் எதிர்பாராமலே நடந்துவிட்ட ஒன்று. பொதுவாக 'மதியாதார் வாசல் மிதியாமை கோடி பெறும்' என ஒதுங்கியே இருப்பவன் நான். என்னை உதாசீனம் செய்பவர்களுக்கு நானும் மதிப்புக் கொடுப்பதில்லை. அப் பவளவிழாவின் போது காலையில் நடைபெற்ற கருத்தரங்கில் வானொலி நாடக நடிகர்கள் எழுத்தாளர்கள் பற்றிய எனது ஆய்வுக் கட்டுரை ஒன்றை நானும் சமர்ப்பிக்க விரும்பி நாடகத் தயாரிப்பாளராக இருந்த ஆர்.யோக ராஜன் மூலமாக விழாக் குழுவினரிடம் கேட்டுப் பார்க்கச் சொன்னேன். அந்நிகழ்ச்சிக்குப் பொறுப்பாள ராக இருந்த ஒருவர் அனுமதிக்கக் கண்டிப்பாக மறுத்துவிட்டார். ஆனால் அவரது கட்டுப்பாட்டையும் மீறி, அன்று கட்டுரை சமர்ப்பிக்க அழைக்கப்பட்டி ருந்த அறிவிப்பாளரும் எனது நண்பருமான நடராஜ சிவம் மூலையில் 'மசுங்கி'க் கொண்டு நின்ற என்னை வலுக்கட்டாயமாக மேடைக்கு அழைத்துச் சென்று விட்டார். கல்லூரியில் நாம் கற்ற காலத் திலே இருந்தே எனது திறமைகளை அறிந்து மதித்தவர் நடா! அவரது புண்ணியத்தில் நான் ஆயத் தப்படுத்தி இருந்த கட்டுரையை என்னால் அன்று வாசிக்க முடிந்தது. அன்றைய நிகழ்ச்சிக்குத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமை தாங்கிய பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள்கூட எனது கட்டுரையையே அன்று மேடை யில் சிலாகித்துப் பேசினார். அதைப் பின்னர் நண்பர் சி.சிவகுமார் தமது 'அமுது' சஞ்சிகையில் பிரசுரித் தார். எனக்குத் தரப்படவேண்டிய அங்கீகாரத்தைத் தர மறுத்த அந்த சின்னத்தனமான, சிறுமைக் குணம் கொண்ட கட்டுப்பாட்டாளர் பெரிய மனிதர் போல தனது நிழற் படத்தை மட்டும் அக் கட்டுரையி னிடையே போட்டுக் கொள்ள முந்திக் கொண்டார்.

*அப் பவளவிழாவின் நாடகங்களிலும் நீங்கள் பங்களிப்புச் செய்திருந்தீர்களே?*

ஆமாம். அதில் அரங்கேறிய நகைச்சுவை நாடகத்தின் பின்னணியிலும் ஒரு துரோக நாடகம் அரங்கேறியது. அந்நாளைய நடிகர் ராஜரத்தினம் என்பவர் சானாவுடன் சேர்ந்து சானா தயாரித்த 'மத்தாப்பு' கதம்ப நிகழ்ச்சியில் 'சக்கடத்தார்' எனும் பாத்திரத்தில் தோன்றி அதைப் பிரபலப்படுத்தினார். அப்பாத்திரத்தை மனதில் வைத்து நானும் பின்னாளில் 'கதம்பம்' நிகழ்ச்சிக்குத் தொடர்ச்சியாகச் சில நாடகங்களை எழுதி நடித்திருக்கிறேன். விழாவில் ஜெயகிருஷ்ணாவைச் சக்கடத்தார் ஆக்கி மேடையேற்றலாமென யோகராஜன் சர்வானந்தா வுடன் சேர்ந்து திட்டமிட்டிருக்கிறார். பழைய சக்கடத்தாரை மனதில் கொணர்ந்து எழுத ஆரம்பித்த சர்வானந்தாவால் அதை ஒரு பக்கத்துக்கு மேல் கொண்டிழுக்க முடியவில்லைப் போலும். சட்டியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தால் தானே அகப்பையில் வருவதற்கு! யோகராஜன் அவர் எழுதிக் கொடுத்த 'பல்லவி' யோடு என்னிடம் வந்து அதைத் தொடர்ந்து நாடக உருவாக்கித் தருமாறு கேட்டுக் கொண்டார். அதில் ராஜா கணேசனுக்கும் எனக்குமான பாத்திரங்களை உருவாக்கிச் சக்கடத்தாரை முழுமையான ஒரு கலகலப்பான நாடகமாக்கி மேடையேற்றினோம்.

பகிடி என்னவென்றால் அந்நாடகத்தை எழுதியவர் என சர்வானந்தாவின் பெயரைப் பணிப்பாளராகவிருந்தவர் மேடையில் பகிரங்கமாக அறிவிப்புச் செய்தார். எனது பெயரை இருட்டடிப்புச் செய்துவிட்டார்கள். முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைக்கும் இக்கைங்கரியத்துக்குப் - பாவம் எடுப்பார் கைப்பிள்ளையாக இருந்த அவரும் துணை போய்விட்டார். யாரோ சொன்னதை உண்மை என நம்பிச் சொல்லிவிட்டார். அதனாலேயே நான் வெளியிட்ட 'கழுதைக்கும் காலம் வரும்' நகைச்சுவை நாடகங்களின் தொகுப்பு நூலில் நான் எழுதிய நாடகப் பகுதியை மட்டும் 'உள்ளே வெளியே' எனும் தலைப்பில் தனி நாடகமாகச் சேர்த்துக்கொண்டேன். அதை வாசிப்பின் விளங்கும் எனது பங்களிப்பு எவ்வளவென்று. இப்படியான குத்துவெட்டுகளுக்கும் குழிபறிப்பு களுக்கும் மத்தியில் உண்மையான கலைஞனின் திறமை வெளித்தெரிய வழியில்லைத் தான். அதனால்தான் நானே என்னைப்பற்றிச் சொல்லிக் கொள்ள வேண்டியிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*உங்களுக்கான அங்கீகாரம், உங்களுக்கான உரிய இடம் தரப்படவில்லை எனும் ஆதங்கம் இப்போதும் உங்களுக்கு இருக்கிறதா?*

நிச்சயமாக. நாடகம் சம்பந்தமாக நான் பரிசுகள் சில பெற்ற போதிலும் அதைப் பாராட்டப் பலருக்கும் மனமிருக்கவில்லை. தகுதியில்லாதவர்கள் உயர் பீடங்களில் அமருவார்களாக இருந்தால் மற்றவர் களை முன்னேற விடாமல் முட்டுக்கட்டை போடு வார்கள். அவர்களின் திறமைகளைக் கண்டுகொள்ளா மல் **இருப்பதுடன்** அவர்களை மட்டம் தட்டுவதன் மூலம் தங்களின் மேலாண்மையை எண்பிக்கவும் முந்துவார்கள்.

*உங்கள் அனுபவத்தில் அத்தகைய உதாசீனங்கள் நிகழ்ந்ததுண்டா?*

ஒன்றல்ல. இரண்டல்ல. உதாரணமாகச் சிலவற்றைக் கூறுகிறேன். நடிப்பைப் பொறுத்த மட்டில் இலக்கிய நடையோ பேச்சு வழக்கு நடையோ சகலவிதமான நாடகங்களிலும் நடிக்கக் கூடியவர்கள் என ஜோர்ஜ் சந்திரசேகரன் தயாரிப்பாளராக இருந்த 1982 காலகட்டத்தில் நடைபெற்ற குரல் தேர்வின்போது தெரியப்பட்ட மூவரில் நானும் ஒருவன். ஜோக்கிம் பெர்னாண்டோவும் வனஜா ஸ்ரீனிவாசனும் மற்றைய இருவர். ஒரு முறை கல்விச் சேவை நாடகத் தயாரிப்பாளராகப் பணியாற்றிய நடிகரும் தயாரிப் பாளருமான கணேஸ்வரனை யாரோ ஒரு நேயர் வானொலியில் செவ்வி கண்டார். அச்செவ்வியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது நடராஜசிவத்தையும் என்னையும் சிறந்த வானொலி நடிகர்களாகத் தான் கருதுவதாக அவர் முன்மொழிந்தாராம். அதைப் பொறுக்க முடியாத நிரந்தர அறிவிப்பாளர் ஒருவர் அதைக் கொச்சைப் படுத்திப் பொரிந்து தள்ளிக்கொண்டு திரிந்ததால், நான் கேள்விப்பட்ட விஷயம் அது. சக நடிகரைப் பாராட்டவும் ஒரு மனம் வேண்டும். அது கணேஸ்வரனுக்கு இருந்திருக்கிறது.

*நகைச்சுவை எழுத்தில் தமிழ் நாடக உலகைப் பொறுத்தமட்டில் உங்கள் வழிகாட்டியாக யாரைக் கூறுவீர்கள்?*

ஈழத்தைப் பொறுத்த மட்டில் தமிழ் வானொலி நாடக உலகில் பிதாமகராகத் திகழ்பவர் இலங்கையர் கோன்தான். அவரைப் பின்பற்றித்தான் சி.சண்முகமும் எழுதினர். அவரவர்களின் காலத்தில் அவர்கள் நகைச்சுவை எழுத்தில் கொடிகட்டிப் பறந்தார்கள். பல்வேறு விதமான பேச்சுவழக்குகளையும் பேசும் பாத்திரங்களை உருவாக்குவதில் எனக்கும் அவர்கள் ஆதர்சமாக இருந்தார்கள். மற்றப்படி தமிழக எழுத்தாளர் 'சோ'வின் எழுத்து ஒரு காலத்தில் என்னைக் கவர்ந்தது. யாழ்ப்பாணப் பேச்சு வழக்கைக் கையாள்வதில் 'முகத்தார்' எஸ்.ஜேசுரட்ணம் முதன்மையானவர். அவர்களின் பாதிப்பும் எனது எழுத்தில் கொஞ்சம் இருக்கத்தான் செய்தது. K.S.பாலச்சந்திரன், மஹறதி ஹசன் இப்ராஹிம், ராமதாஸ் போன்றோர் **70, 80** களில் வானொலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடகங்களில் கலகலப்பூட்டியவர்கள்.70 களிலேயே 'கலை + ஆறு தலை = ஒரு கொலை' போன்ற நகைச்சுவை மேடை நாடகங்கள் எழுதிய போதிலும் **90** களின் பிற்பகுதியில் இருந்துதான் நான் மும்முரமாக எழுதத் தொடங்கினேன். அக்கால கட்டத்தில் முன்னர் எழுதிக்கொண்டிருந்த பலரும் ஓய்ந்துபோய்விட்டார்கள். அதனாலும்கூட இருக்க லாம் - தற்பெருமை என நீங்கள் எடுத்துக் கொண்டா லும் பரவாயில்லை, நகைச்சுவை எழுத்தில் என்னளவுக்கு எழுதுபவர்கள் தற்போதைக்கு எவரு மில்லை. இதுவரை வெளிவந்துள்ள, வரவிருக்கிற எனது நகைச்சுவை நாடக நூல்களே அதற்குச் சான்றாக அமையும். நானே என்னைப்பற்றி இப்படிச் சுயதம்பட்டம் அடித்துக் கொள்வது கொஞ்சம் அபத்தமாக, அதிகப் பிரசங்கித்தனமாக இருந்தாலும் வேறு வழியில்லை. இதை யாராவது மறுக்கத் துணிந்தால் ஆதாரத்துடன் மறுக்க முன் வரலாம்.

*கலகம் பிறந்தால்தான் நியாயம் பிறக்கும் என்று கொழுத்திப் போட்டிருக்கிறீர்கள் போலும். வாழுகிற, வளருகின்ற நாடக எழுத்தாளர்களுக்கு, நடிகர்களுக்கு நீங்கள் கூறும் அறிவுரை என்னவாக இருக்கும்?*

அறிவுரை கூறுவதோ அல்லது மற்றவர்கள் அறிவுரை என நினைத்துக் கூறுவதைக் கேட்பதோ எனக்குப் பிடிக்காது. ஆயினும் எனது அனுபவத்தில் பெற்றதைக் கூறுகிறேன். கொள்ளுவதும் தள்ளுவதும் அவரவர் இஷ்டம். நிரம்ப வாசியுங்கள். நிரம்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவதானியுங்கள். ஒருவர் பேசும் முறை, அவர் பயன்படுத்தும் சொற்கள், அவர் பேசாத சங்கதிகள், அவரது ஆழ்மன ஓட்டங்கள் போன்றவற்றை அவதானியுங்கள் இவை நடிப்பிலும் சரி பாத்திர வார்ப்பில் சரி துணைபுரியும். எழுத வேண்டும் என்பதற்காக எழுதாமல் எழுதத்தான் வேண்டும் எனும் உந்துதல் வரும்போது எழுதுங்கள். எழுத எழுதத்தான் ஒரு படிமம் வரும். அதனால் நீங்கள் எழுதியதெல்லாமே இலக்கியம் என நினைந்து இறுமாறாமல் காய்தல் உவத்தலின்றி உங்கள் எழுத்தைச் சீர்தூக்கிப் பாருங்கள். உங்களுக்குத் திருப்தி ஏற்பட்டால் மட்டும் பகிர்ந்து கொள்ளுங்கள். அல்லது தாட்சண்யமின்றிக் குப்பைக் கூடையில் தூக்கிப் போட்டுவிடுங்கள்.

*பயனுள்ள பல விடயங்களைப் பகிர்ந்து கொண்டீர்கள் மறைமுதல்வன் வேதா அவர்களே.. உங்கள் பொன்னான நேரத்தை எங்கள் வானொலி நிகழ்ச்சிக்காக ஒதுக்கித் தந்து நிகழ்ச்சியைச் சிறப்பித் தமைக்காக எமது நிலையத்தார் சார்பிலும் நேயர்கள் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.*

எனது இந்தப்பவளவிழா ஆண்டில் உங்கள் வானொலி மூலம் எனது அனுபவங்களை, ஆதங்கங்களை நான் பகிர்ந்துகொள்ள வாய்ப்பளித்தமைக்கு மிக்க நன்றி. உங்கள் சேவை சிறப்புடன் தொடர எனது அன்பும் ஆசிகளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் அறிவிப்பாளன் ஆன கதை

**50, 60** களில் இலங்கை வானொலியில் ஓர் அறிவிப்பாளனாக ஆவதென்பது சாமானியமான காரியமல்ல. இலங்கையைப் பொறுத்த மட்டில் தமிழகத்தில் பிரபலமான ஒரு சினிமா நடிகனைப் போலத்தான் அறிவிப்பாளனும் கருதப்பட்டான். ,

சிறு வயதிலேயே, எனது பதினோராவது வயதிலேயே - 1956 இல் சிறுவர் மலர் நாடக நடிகனாகக் கால் பதித்து விட்டதால், தொடர்ந்து பஸ் செலவு கூட இல்லாமல் வானொலி நிலைய வாகனத்திலேயே நிலையத்துக்குச் சென்று வந்ததால், அந்நாளையத் தயாரிப்பாளர்கள், அறிவிப்பாளர்கள் என வானொலியுடன் தொடர்புடைய பலரையும் தெரிந்து கொள்ளக் கிடைத்தது.

சிறுவர் மலர் நிகழ்ச்சித் தயாரிப்பாளராக 50 களின் பிற்பாதியில் பணியாற்றிய **திருமதி பொன்மணி குலசிங்கமும்** வானொலி மாமாவாக அப்போது இருந்த பகுதி நேர அறிவிப்பாளரும் நடிகருமான திரு **எஸ். குஞ்சிதபாதமும்** தான் நான் முதன்முதலாகப் பார்த்த அறிவிப்பாளர்கள்.

56 இன் பின் 64 இல் நான் ஒரு 'திடீர்' வானொலி நாடக அரங்கு நடிகனாக அவதாரம் எடுத்த கதை முன்னரே கூறப்பட்டுப் பலரும் அறிந்ததே. அதன் போது **கலாஜோதி 'சானா''** அவர்களின் அறிமுகமும் 'லண்டன் கந்தையா'வைத் தொடர்ந்து நான் நடித்த 'மனிதனைப் பாட மாட்டேன்' நாடகத்தை நெறிப்படுத்திய திரு.**வீ. சுந்தரலிங்கத்**தினதும் அந்த நாடகத் தயாரிப்பாளராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்த திரு.C.V.**ராஜசுந்தரத்தினதும்** அறிமுகங்கள் கிடைத்தன.

'லண்டன் கந்தையா'வில் உடன் நடித்த **செல்வி சற்சொரூபவதி நாதனும் கோகிலவர்தனி சுப்பிரமணியமும்** [பின்னர் சிவராஜா ஆனவர்] பின்னர் அறிவிப்பாளர்கள் ஆனவர்கள்.

எனது அண்ணர் **SVR** உடன் வரி மதிப்புத் திணைக் களத்தில் கடமையாற்றிய செய்தி வாசிப்பாளர் **எஸ்..நடராஜ அய்யரை** நான் நேரடியாகத் தெரிந்து கொண்டவனல்ல. 1968 இல் நான் எழுதித் தயாரித்த 'முசுப்பாத்தி தான்' மேடையேற்றத்தின் போது இடைவேளையில் ஒலிபரப்பவெனக் குறிப்பிட்ட சில பாடல்களை அவர் மூலம் 'சித்திர கானம்' நிகழ்ச்சியில் ஒலிபரப்பச் செய்து பதிவு செய்து கொண்டேன். அப்பாடல்களை பற்றிக்கூடத் தனது நாடக விமர்சனத்தில் - சிந்தாமணி பத்திரிகையில் திரு ஜெயசீலன் குறிப்பிட்டதாக ஞாபகம்.

70 களின் ஆரம்பத்தில் **ராஜேஸ்வரி அக்கா** சிறுவர்களுக்கான ஒரு நிகழ்ச்சியைத் தயாரித்து வழங்கிக் கொண்டிருந்தார். அப்போது சிறுமியாக இருந்த அவர்களின் மகள் வசந்தி முக்கிய பங்கு கொண்ட அந்த நிகழ்ச்சிக்கு வாராவாரம் பிரதிகளை எழுதித் தருமாறு ஆசிரியனாகக் கடமையாற்றிய என்னை அவர் கேட்டுக் கொண் டார். நானும் தொடர்ந்து எழுதி வந்தேன். அதன் மூலம் அவரது அறிமுகமும் நெருக்கமும் உண்டானது. அவரது கணவர் **சி.சண்முகமும்** வயது வரம்பு பாராது நட்புப் பாராட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிய இயல்பு கொண்டவர். அடிக்கடி அவர்கள் வீட்டுக்குச் சென்று வரும் அளவுக்கு எமது பழக்கம் இறுகியது. சண்முகம் அண்ணனின் 'இதுவும் ஒரு நாடகம்' 1971 இல் கொழும்பில் மேடையேறியது. அதில் எனது நடிப்பு மிகவும் சிலாகிக்கப்பட்டது. நண்பரும் நாடக நெறியாளருமான தார்சீஸியஸ் எனது நடிப்பை நயக்கவே தான் அந்நாடகத்தைப் பார்க்க வந்ததாக அவ்வரங்கேற்றத்தின் போது குறிப்பிட்டமை என்னைப் புளகாங்கிதமுறச் செய்தது.

70 களின் ஆரம்பத்தில் நான் கொழும்பு விவேகானந்தாக் கல்லூரியில் ஆசிரியனா கக் கடமையாற்றிய காலத்தில் அறிவிப்பாளராக இருந்த திரு. **சரா. இம்மானுவேல்** நான் ஒருமுறை வானொலி நிலையம் சென்ற வேளையில் தானாகவே வந்து தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார். அவர் அந்நாளில் வர்த்தக சேவையில் 'மணி மலர்' என்னும் சிறுவர்க்கான நிகழ்ச்சியைத் தயாரித்து வழங்கிக் கொண்டி ருந்தார். அதில் பங்குபற்றச். சிறுவர்கள் போதாமல் இருந்தது. அதற்காகச் சில சிறுவர்களை அழைத்து வர முடியுமா, என அவர் என்னிடம் கோரிக்கை விடுத்தார். நானும் அதை உவப்புடன் ஏற்றுச் செயற்பட்டேன். அதன் மூலம் அவரோடான எனது தொடர்பு ஆரம்பமானது. எனது திருமண நாளன்று 'பொங்கும் பூம்புனல்' நிகழ்ச்சியில் எம்மை வாழ்த்திப் பாடல் ஒலிபரப்பி அவர் இன்ப அதிர்ச்சி தந்துவிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் பகுதி நேர ஒலிபரப்பாளனாக எடுபட்ட ஆரம்ப காலத்தில் மூத்த அறிவிப்பாளராக இருந்த சரா.இம்மானுவேல் பிரதிகள் மூலம் கலந்து கொள்ளும் இளைய தலைமுறையினருக்கான சஞ்சிகை நிகழ்ச்சி ஒன்றை வர்த்தக சேவையில் வாரா வாரம் நடத்தி வந்தார். அந்த நிகழ்ச்சியின் பெயர்மறந்துவிட்டது.[சிலவேளை 'ஒலி மஞ்சரி'யாக இருக்கலாம்.] அந்நிகழ்ச்சிக்கான பிரதிகள் சிலவற்றை வாசிப்பதற்கு, ஆரம்ப காலத்திலேயே என்னோடிருந்த பரிச்சயம் காரணமாக, என்னைத் தெரிவு செய்து அழைத்துச் செல்வார். என்னோடு உடன் எடுபட்ட அறிவிப்பாள நண்பர்களுக்கு எப்படியாவது தங்கள் குரலும் அத்தகைய நிகழ்ச்சிகளில் ஒலித்துவிட வேண்டுமெனும் ஆதங்கம். என் மூலம் சிபாரிசு பெற்று அவர்களும் நிகழ்ச்சியில் இணைந்து கொண்டனர். தாம் கடமையில் இருந்த காலகட்டத்தில் என் மீது அன்பு பாராட்டி நெருக்கமாக உணரச் செய்த சரா.இம்மானுவேல் மறக்க முடியாத ஒரு நல்ல மனிதர்.

**BH அப்துல் ஹமீதும் போல் அன்ரனியும்** இராசையா மாஸ்டரின் இளைஞர் மன்றம் மூலம் 1964 இலேயே அறிமுகமாகிவிட்ட நண்பர்கள். **ஜோர்ஜ் சந்திரசேகரன், ஜோக்கிம் பெர்னாண்டோ, நடராஜசிவம்** எனும் மூன்று அறிவிப்பாளர்களும் நான் கற்ற அதே சென்.பெனடிக்ற் கல்லூரியில் கற்று அங்கு மேடையேறிய எனது நாடகங்களில் நடித்து அந்தக் காலத்தில் இருந்தே அறிமுகமாகி நண்பர்களுமானவர்கள். அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவிப்பாளர்கள் ஆவதற்கு நானும் ஒரு வகையில் தூண்டுகோலாக இருந்தேன் என்பதைத் தனது 'சருகுக்குள் கசியும் ஈரங்கள்' நூலில் ஜோர்ஜும் மேம்போக்காகச் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

எமது சகோதர பாடசாலையான Good Shepherd Convent இல் கற்றவரான **யோகா சொக்கநாதன்** [பின்னர் தில்லைநாதன்] விவாதப் போட்டியொன்றில் எமது கல்லூரி அணித் தலைவனாக நான் கலந்து கொள்ளச் சென்ற போது எதிரணித் தலைவியாக அறிமுகமானவர். அவரது சகோதரர் **விமல் சொக்கநாதன்** நான் சிறுவர் மலரில் பங்கு கொண்ட அதே காலகட்டத்தில் கொஞ்சம் பின்னராக வந்து சேர்ந்தவர். அவரும் எமது கல்லூரியில் சில காலம் கற்று, தமிழ் மன்றத் தலைவராகவும் இருந்தவராயினும் அக்காலத்தில் நானங்கு கற்கவில்லையாதலால் பெரிய அறிமுகம் கொண்டிருக்கவில்லை.

இவ்வாறாகப் பல அறிவிப்பாளர்களை நான் அறிந்து வைத்திருந்த போதிலும் அறிவிப்பாளர்களின் பணி பற்றி, பங்களிப்புப் பற்றி - நான் அவ்வளவாக அவதானித்தோ தெரிந்தோ வைத்திருக்கவில்லை. மொழி வழுவின்றி, சுத்தமான உச்சரிப்புடன் தெளிவாக வாசித்தால் போதும் - அறிவிப்பாளராகிவிடலாம் என எண்ணியிருந்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி வாசிப்பு, விளம்பரம், விவரணம், தகவல் குறிப்பு, நேர் காணல், நேர் முக வர்ணனை, மரண அறிவித்தல், தொலைபேசி உரையாடல் என ஓர் அறிவிப்பாளர் பல்வேறு வகைத்தான அறிவிப்புப் பணிகளையும் ஆற்ற வேண்டியுள்ளது. ஒவ்வொன்றுக்கும் குரலின் ஏற்ற இறக்கங்கள், வெளிப்படுத்தும் தொனி, பயன் படுத்தும் சொற்கள், சொல்லும் வகை அல்லது வழக்கு என்பன வேற்றுமைப்படும் என்பதெல்லாம் பின்னர் போகப்போக நான் தெரிந்து கொண்டவை. இலங்கை வானொலித் தமிழ்ச் சேவையானது தேசிய சேவை, வர்த்தக சேவை என இரு பெரும் பிரிவுகளாக இயங்கியது. ஒரு அறிவிப்பாளன் ஏதாவது ஒரு பிரிவில்தான் கடமையாற்றலாம்.

1981 இல் நான் பகுதி நேர அறிவிப்பாளனாகத் தெரிவான போது என்னுடன் இன்னும் 17 பேர் தெரிவானார்கள். அவர்களில் **S. கணேஸ்வரன், S. சிவசண்முகநாதன், பாலசிங்கம் பிரபாகரன், ஜெயந்திமாலா செல்வநாயகம், நிஹாரா சபூர்தீன், N.T. ஜெகன், V.K. குமார், கனகசபாபதி நாகேந்திரன், S. வாசுதேவன்** என ஒரு சிலரது பெயர்கள் மட்டும் ஞாபகத்தில் உள்ளன. 83 ஆடிக் கலவரத்துடன் பலரும் ஓடிப் பறிந்து விட்டார்கள். அதில் நானும் அடக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1981 இல் வர்த்தக சேவை அறிவிப்பாளனாக நான் காலடி வைத்தபோது பணிப்பாளராக இருந்த திருமதி பொன்மணி குலசிங்கம் என்னை முந்நாளையச்' சிறுவர் மலர்' நடிகனாக இனம் கண்டு கொண்டார்.

வர்த்தக சேவை அறிவிப்பாளனாக வர விரும்புபவனுக்குத் திரைப்படங்கள் பற்றியும் பின்னணிப் பாடகர்கள், பாடலாசிரியர்கள், இசையமைப்பாளர்கள் பற்றியும் பரந்துபட்ட அறிவிருக்க வேண்டும். சிறு வயதில் இருந்தே வீட்டாருக்குத் தெரிந்தும் தெரியாமலும் திரைப்படங்கள் பார்த்து வளர்ந்தவன் நான். எனது அண்ணன் SVR 'விவேகச் சக்கரம்' போட்டி நிகழ்ச்சிக்காக வாங்கிக் குவித்திருந்த /10 சத/ பாட்டுப் புத்தகங்கள் தவிர, நானாகவே கொட்டாஞ்சேனை வீதியில் மாரியம்மன் கோவிலுக்கு முன்பாக இருந்த சாக்கோ என்பவரது பெட்டிக் கடையிலும் செக்கடித் தெருவிலுமாக தேடித் தேடிச் சேர்த்த அரிய பல பாட்டுப் புத்தகங்கள் உட்பட 1940 இல் இருந்து 1970 வரையான 750 க்கும் அதிகமான பாட்டுப் புத்தகங்கள் எனது சேகரத்தில் இருந்தன. ஐம்பது ஐம்பது கொண்ட கட்டுகளாக அவற்றை நான் Bind பண்ணி வைத்திருந்தேன். திரைப்படப் பாடல்கள் சம்பந்தமான விஷய ஞானம் எனக்கு கொஞ்சம் கூடுதலாகவே இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழைய பாடல்களின் தொகுப்பு நிகழ்ச்சியான 'நினைவூட்டுகிறோம்' எனும் நிகழ்ச்சி நீண்ட காலமாகத் தொடர்ச்சியாக காலை வேளைகளில் 6.00 முதல் 6.30 வரை ஒலிபரப்பாகி வந்தது. அந்நிகழ்ச்சியில் 1960 வரையான காலகட்டத்தில் வெளியான [தடை செய்யப்பட்ட சில பாடல்கள் நீங்கலாக] சகல பாடல்களும் ஒளிபரப்பாகும். அந்நிகழ்ச்சிக்கு [மட்டும்] கடமையில் இருக்கும் அறிவிப்பாளர் பாடல்களைத் தொகுக்க மாட்டார். அதைத் தொகுப்பது குறிப்பிட்ட ஒரு நிகழ்ச்சித் தொகுப்பாளரின் பொறுப்பு.

இசைக்களஞ்சிய நூலகத்தில் ஆங்கில அகர வரிசைப்படி திரைப்படங்களும் அவற்றில் உள்ள பாடல்களும் உள்ள பேரேடுகள் உள்ளன. அவற்றின் துணையுடன் தொகுப்பைச் செய்ய வேண்டும். அவசியமேற்படின் Turn Table இல் இசைத் தட்டைச் சுழலவிட்டு அவதானிக்கவும் முடியும். தொகுப்பானது ஒரே படப் பாடலாக இருக்கக்கூடாது. A யில் ஆரம்பித்து Z வரையுள்ள படங்கள் மாறுபடாமல் தொடர்ச்சியாகச் செல்லவேண்டும். உதாரணமாக ஆசை,அடுத்த வீட்டுப் பெண், அமரகவி, அமர தீபம், அம்பிகாபதி [புதியதும், பழையதும்], அருந்ததி என்றவாறாக 37 இல் இருந்து 60 வரையான சகல திரைப்படங்களும் ஆங்கில அகர வரிசைக்கியைய A யில் இடம்பெறும். அவ்வாறாக ஒரு வட்டம் முடிய ஆறேழு மாதங்கள் வரை செல்லும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த 'நினைவூட்டுகிறோம்' நிகழ்ச்சியைத் தொகுக்கும் பொறுப்பு ஆரம்பத்திலேயே என்னிடம் விடப்பட்டது

எனக்கு முன் அதே நிகழ்ச்சியைத் தொகுத்த அறிவிப்பாளர்கள் அனார்கலியில் ஒன்று அம்மாவில் இரண்டு அண்ணியில் மூன்று அலிபாபாவில் நாலு என ஏதாவது பத்துப் பாடல்களை இட்டு நிரப்பித் தொகுப்பை ஒப்பேற்றுவதை வழமையாகக் கொண்டிருந்தனர்.

எந்த நிகழ்ச்சியாயினும் அதைத் திறம்படச் செய்ய வேண்டும் என நான் விரும்புவேன். கால வரிசைக்கேற்பத் திரைப்படங்களை வகைப்படுத்தி ஒரே தன்மைத்தான பாடல்கள் ஒரே நாளில் வருமாறு நான் தொகுப்புகளை செய்யலானேன். அசோக்குமார், அமரகவி, அம்பிகாபதி எனத் தியாகராஜ பாகவதர் பாடல்களை ஒரு நாள் தொகுத்தால் அன்பு, ஆசை. அமரதீபம் போன்ற படங்களில் வரும் A.M. ராஜா சம்பந்தப்பட்ட பாடல்களை மறு நாள் தொகுப்பேன். ஆண்குரல், பெண்குரல், இருகுரலிசை, கோஷ்டி கானம், நகைச்சுவை, இன்றைய நட்சத்திரம் என முடிந்த மட்டில் நாளும் வெவ்வேறு தலைப்புகளின் கீழ் வரக்கூடியவாறான பாடல்களை அதன் அகர வரிசை பிசகாமல் நினைவூட்டுகிறோமில் உள்ளடக்கி விடுவேன். இவ்வாறாக காலப் போக்கில் அந்நிகழ்ச்சியையும் நேயர்கள் விரும்பிக் கேட்கும் நிகழ்ச்சியாக மாற்றி விட்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்நிகழ்ச்சியை இரசித்துக் கேட்ட நேயர்கள் பலரும் தமிழ் நிகழ்ச்சிப் பணிப்பாளருக்கு – D.T.S. க்கு நேரடியாகத் தம் பாராட்டுகளைத் தெரிவித்து வந்தனர். குறிப்பாக பொரளை, கொட்டா ரோட்டில் இருந்து ஒரு பழம் பெரும் நேயர் விலாவாரியாக விமர்சித்து வாராவாரம் தன் கருத்துக்களை ஆங்கிலத்தில் எழுதிவந்தார். சில இடங்களில் அடிக் கோடிட்டு அக் கடிதங்களை பணிப்பாளர் என்னிடத்தில் அனுப்பி வைப்பார். அந்நிகழ்ச்சியின் தரம் படிப்படியாக உயர்ந்தமையாலாக இருக்கலாம், அந்நிகழ்ச்சியைத் தொகுக்கும் பொறுப்பு என்னிடமிருந்து கைமாற்றப் படவில்லை.

மூத்த ஒலிபரப்பாளர்கள் என்றிருப்பவர்களில் ஒரு சிலரைத் தவிர மற்றவர்கள் தமது புகழை, தமக்கான நேயர்களைத் தக்க வைத்துக் கொள்ள முனைபவர்களாக, புதியவர்களை - இளையவர்களை மட்டம்தட்டி உயர விடாமல் அடக்குபவர்களாக, அவர்கள் தம்மை மதித்து 'சலாம்' போட வேண்டும் என எதிர்பார்ப்புவர்களாக இருந்தார்கள். அதனால் பகுதி நேர அறிவிப்பாளன் ஒருவன் பெயரெடுப்பதோ புகழ் வெளிச்சத்துக்கு வருவதென்பதோ முயற்கொம்பு போலத்தான். நிகழ்ச்சிகளுக்கு இடையில் நேரத்தை நிரப்பப் போடப்படும் 'Fillers ' எனப்படும் ஒலித்தட்டுகள் போலத்தான் அவர்களும். C.O. எனப்படும் Compilation Officer போன்ற வெளியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிய வராத உப்புச் சப்பற்ற வேலைகளில் அவர்களை முடக்கி விடுவதன் மூலம் அறிவிப்பாளர்களாக மிளிரும் அவர்களின் கனவுகளையே மழுங்கடித்து விடுவர். சந்தர்ப்பம் கொடுக்கப்படாமையால் காலப் போக்கில் வானொலி நிலையத்தை எட்டிப் பார்க்காமல் விலகிக் கொண்டுவிடும் பகுதி நேர அறிவிப்பாளர்கள் பலர். சிறிது காலத்தின் பின் பார்த்தால் புதிதாக எடுபட்டவர்களில் நாலைந்து பேர் தவிர ஏனையோர் காணாமல் போயிருப்பார்கள்.

1981 முதல் 1983 ஆடி வரையாக நான் கடமையாற்றிய காலகட்டத்தில் எம் போன்ற பகுதி நேர அறிவிப்பாளர் களுக்கு, யாராவது நிரந்தர அறிவிப்பாளர் விடுப்பில் சென்றால் மட்டும் அவர்களின் சிபாரிசில் அவர்களது Air Time உட்பட அந்நாளைக்கான அவர்களது Compilation வேலையைச் செய்யும் வாய்ப்புக் கிடைக்கும். மற்றப்படி சனி ஞாயிற்றுக் கிழமைகளில் நீங்கள் கேட்டவை நிகழ்ச்சிகளிலும் விளம்பரதாரர்கள் நிகழ்ச்சிகளுக்கிடையிலும் அறிவிப்புச் செய்யும் பாக்கியமும் சித்திக்கலாம். பிற்பகல் 4.30 - 7.00 வரையான ஆசிய சேவையின் தமிழ் ஒலிபரப்பிலும் பகல் 1.00 மணி முதல் 3.00 மணி வரை இடம்பெறும் தென் கிழக்கு ஆசிய சேவை ஒலிபரப்பிலும் மூத்த அறிவிப்பாளர்கள் அவ்வளவாக மூக்கை நுழைப்ப தில்லை. ஓரளவுக்கு எமது விருப்பப்படியான பாடல் தெரிவுகளுடன் புகுந்து விளையாட இடம் கிடைக்கும். தமிழக நேயர்கள் பலரும் அந்நிகழ்ச்சிகளை விரும்பிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டாலும் அவை சம்பந்தமான விமர்சனக் கடிதங்கள் வருவது அரிது. வந்தாலும்கூட அவை எம் கைக்கெட்டு வது அரிதினும் அரிது.

83 இல் ஆடிக் கலவரம் வந்து எம் போன்றோரது வாழ்வை ஆட்டம் காண வைத்து விட்டது. தலை நகரைத் துறந்து வடக்கில் தஞ்சம் புகுந்த காலம் தொட்டு இலங்கை வானொலியைப் பொறுத்த மட்டில் எனது 14 ஆண்டு கால வனவாசம் ஆரம்பமானது.

## ஒரு பகுதி நேர அறிவிப்பாளனின் - இரண்டாவது அத்தியாயம்

**நா**ன் ஒரு பயிற்றப்பட்ட ஆசிரியனாக யாழ்ப்பாணம், திருகோணமலை [இடையில் சிலகாலம் தமிழ் நாடு] என அலைந்துலைந்து ஓய்ந்துவிட்டு ஓர் அறிவிப்பாளனாகப் பணியாற்றும் தவனம் அடங்கிவிடாமல் [வனவாசம் முடிந்து] 14 ஆண்டுகளின் பின் இலங்கை வானொலியை நோக்கி மீண்டும் ஒரு முற்றுகையை ஆரம்பித்தேன்.

ஏற்கெனவே அறிவிப்பாளனாகக் கடமையாற்றி ஓய்ந்த பின் மீண்டும் குரல் தேர்வு மூலம் இரண்டாவது முறையாக எடுபட்ட ஒருவன் இலங்கை வானொலியின் வரலாற்றில் நானாகத்தான் இருக்கமுடியும்.

எனது 51 ஆவது வயதில் ஆசிரிய சேவையில் இருந்து ஓய்வு பெற்று விட்டு என்னிலும் பாதி வயதுடையவர்களுடன் போட்டி போட்டு நான் தெரிவானேன். எனது நியமனத்துக்காக நான் யாருடைய காலையும் பிடிக்கவோ கையூட்டுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்துப் பின்கதவால் உள் நுழையவோ முயன்றேனல்லன். தகுதிகண்டு தெரிவானால் சரி என்றிருந்தேன்; எடுபட்டேன். 23/01/1997 இல் தெரிவாகி வானம்பாடி'யாகச் சிறகடிக்க லானேன்.

அந்த முறை 40 பேர் மட்டில் பகுதிநேர அறிவிப்பாளர்களாகத் தெரிவானதாக ஞாபகம். அவர்களுள் **அபர்ணா சுதனும் ராவு.'.ப்பும்** பின்னர் 'சக்தி'யைச் சரணடைந்து விட்டனர். வானொலி நாடக நடிகர்களாக இருந்த **பத்மா குகபாலன், தேவி கருப்பையா,** கவிஞர் **சி.சிவகுமார், நாவலாசிரியர் A.C.ராஹில், கவிஞர் ரபீக், யாழ் சேவையில் பணியாற்றிய A.L.ஜபீர், மற்றும் உவைஸுல் ரஹ்மான், கலிலுள் ரஹ்மான், மஹ்ரூப், சில்மியா ஹாதி, சுல்பிகா மன்சூர், ஷர்மிளா ஜெய்னுலாப்தீன், நி.'.பால், விஜிதா நாகமுத்து, சுதர்சினி பொன்னையா, சுகந்தினி ராஜகுலேந்திரன், கன்டிடா மரியதாஸ், கலைமகள்** போன்றோரும் என்னோடு எடுபட்ட சிலரில் குறிப்பிடத் தக்கவர்கள். இவர்களைவிட முக்கியமானவர்கள் **முருகேசு ரவீந்திரன், விமல்ராஜ் பாக்கியநாயகம், அபூபைதா மௌஜூட், V.K.ராஜேந்திரன், ஷியானா ஹாதி, உமாசந்திரா முத்தையா, கலையழகி வரதராணி, ஹிக்கம்** முதலானோர். இவர்கள் அனைவரும் 'வானம்பாடி' சேவையை வளர்த்தெடுக்கத் துணை நின்றவர்கள்.

போர்க்காலச் சூழலில் வடக்கு, கிழக்கு வாழ் தமிழர்களின் அபிமானத்தைப் பெறும் நோக்கில் EPDP யினரின் அனுசரணையுடன் 1997 இல் அரசினால் ஆரம்பிக்கப்பட்ட தமிழ்ச் சேவைதான் 'வானம்பாடி' சேவை. பணிப்பாளர் S.N.சிவராஜாவின் ஆற்றுப்படுத்தலில் ஜீவரட்ணகுமார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பவர் அச்சேவையின் தயாரிப்பாளராக இருந்தார். அச்சேவை பற்றிய அரசியற் பின்னணி எதுவும் தெரிந்திராத நிலையில் புதிதாக எடுபட்ட அறிவிப்பாளர்கள் சிலர் அதனுள் ஈர்க்கப்பட்டோம்.

மூத்த அறிவிப்பாளர்களைப் பொறுத்தமட்டில் அதில் கவனம் செலுத்தவோ மினக்கெடவோ அவர்களுக்கு நேரம் இருக்கவில்லை. அக்கறையும் இருக்கவில்லை. அவர்களது தலையீடில்லாமல் சுதந்திரமாகச் செயலாற்றக்கூடிய களமாக அது எமக்கிருந்தது. நிகழ்ச்சிகள் தொடர்பாக எனக்கிருந்த அனுபவமும் அக்கறையும் காரணமாகவோ என்னவோ, வானம்பாடிக்கான வாராந்த நிகழ்ச்சி அட்டவணை ஒன்றைத் தயாரிக்கும் பொறுப்பைப் பணிப்பாளர் S.N.சிவராஜா என்னிடம் ஒப்படைத்தார்.

பல்வேறு தரப்பினரையும் மனதிற்கொண்டு சிறுவர்க்கான நிகழ்ச்சி, மாதர்களுக்கான நிகழ்ச்சி, இளைஞர்களுக்கான நிகழ்ச்சி என்பவற்றுடன் 'கதையும் கானமும்' என்ற தலைப்பில் இசையும் கதையும் நிகழ்ச்சியும் 'காலத்தால் அழியாத கானங்கள்' எனும் தலைப்பில் தினமும் ஒரு மணி நேரப் பழைய பாடல்கள் நிகழ்ச்சியும் உள்ளடக்கியதாக ஒரு நிகழ்ச்சி நிரலைத் தயாரித்தேன். இடம்பெயர்ந்தவர்களின் நலன் கருதி 'அன்புக்கு ஒரு பாடல்', 'சொந்தங்களைத் தேடி' போன்ற பயனுள்ள புதிய நிகழ்ச்சிகளைச் சேர்த்துக்கொள்ள நண்பர் முருகேசு ரவீந்திரன் அடியெடுத்துக் கொடுத்தார்.

'கதையும் கானமும்', 'காலத்தால் அழியாத கானங்கள்' போன்ற நிகழ்ச்சிகள் எனக்கான தனித்துவத்தை நான் வெளிப்படுத்தவும் அதற்கான பெயரை நான் ஈட்டிக்கொள்ளவும் எனக்கு வாய்ப்பாக அமைந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகக் குறுகிய காலத்திலேயே வானம்பாடி சேவைக்கான வரவேற்புப் பல்கிப் பெருகி புற்றீசல்கள் என அந்நிகழ்ச்சிக்கான நேயர்களின் கடிதங்களும் ஆக்கங்களும் வந்து குவியலாயின. மூத்த அறிவிப்பாளர்கள் மூக்கில் விரலை வைத்துக்கொண்டு தம்முள் முனகினர்; மனம் பொறுக்காது பொருமினர். காலப்போக்கில் வானம்பாடியின் சிறகுகளும் முறிக்கப்பட்டு ஒருசில ஆண்டுகளில் அச்சேவை முடக்கப்பட்டும் விட்டது.

அதன்பின் 'தென்றல்' சேவையில் 'காலத்தால் அழியாதவை' எனும் தலைப்பில் பழைய பாடல்களுக்கான தொகுப்பு நிகழ்ச்சி ஒன்றைத் தயாரித்து வாரத்தில் இரு நாட்கள் மாலையில் அரை மணி நேர நிகழ்ச்சியாகத் தொகுத்தளிக்கப் பணிப்பாளர் S.N. சிவராஜா எனக்கு வாய்ப்பளித்தார். அந்நிகழ்ச்சியும் நேயர்களின் பேரபிமானம் பெற்று, இலங்கை வானொலியில் இடம்பெற்ற தமிழ் நிகழ்ச்சிகளுள் முதலிடத்தைப் பெற்றுள்ளதாக தர நிர்ணயக் குழுவினரால் குறிப்பிடப்பட்டதாக ஒரு போது அறிவிப்பாளர்களுக்கான கூட்டத்தில் பணிப்பாளர் சிவராஜா தெரிவித்தார். ஆனாலும் அப்போது அங்கு சமூகமளித்திருந்த மூத்த அறிவிப்பாளர்கள் எவரும் ஒரு மரியாதைக்காகத் தன்னும் எனக்குப் பாராட்டுத் தெரிவிக்கவில்லை. அங்கு சமூகமளிக்காத - வர்த்தக சேவையுடன் தொடர்பில்லாத - தயானந்தா போன்ற ஒரு சிலர் மட்டும் செய்தியறிந்து தமது வாழ்த்தைத் தெரிவித்தனர். கலையுலகில் விசால மனம் படைத்தவர்கள் மிகக் குறைவுதான்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேயர்களின் பார்வையில்...

இலங்கை வானொலி, கொழும்பு - சர்வதேச ஒலிபரப்புச் சேவையில் பின்னைய நாட்களில் தொடர்ச்சியாகச் சிலகாலம் ஞாயிற்றுக் கிழமைகளில் நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கக் கட்டுப்பாட்டாளராக இருந்த நண்பர் சந்திரமோகன் எனக்கு வாய்ப்பளித்தார். விடுமுறை நாளானதால் பெருமளவு நேயர்களிடத்தில் அது சென்றடைந்தது எனலாம். காலை 7.00 மணி முதல் பகல் 11.00 மணி வரை விளம்பரதாரர்களின் ஒருசில நிகழ்ச்சிகள் இடையிட்டு என் விருப்பம், என்றும் இனியவை, பல்சுவை விருந்து என்று நேயர்களைக் கவரக்கூடிய பல நிகழ்ச்சிகள். எனக்கும் மன நிறைவை அளிக்கக்கூடிய பாடல் தொகுப்புகள், ஒத்த அலைவரிசை யில் பயணிக்கும் நேயர்களை ஈர்த்தமையினால் அந்நிகழ்ச்சிகள் சம்பந்தமான பாராட்டுக் கடிதங்கள் அடிக்கடி வரலாயின. ஓர் அறிவிப்பாளனைப் பொறுத்த மட்டில் எவ்வித பிரதிபலனையும் எதிர்பாராத நேயர்களின் உளமார்ந்த பாராட் டென்பது அவனுக்கு ஊக்கமளித்து நிகழ்ச்சிகளை மேலும் தரமாகவும் சிறப்பாகவும் தயாரித்து வழங்க ஓர் உந்து சக்தியாக - உற்சாக பானம் [Tonic] போல அமைவது. தமது பொன்னான நேரத்தைச் செலவிட்டு, நிகழ்ச்சிகளின் குறை நிறைகளை சுட்டிக்காட்டிப் பெரும்பாலும் புகழ்மழையில் நனைய வைத்து உற்சாகப்படுத்தும் நேயர்களை மறக்கத்தான் முடியுமா? அவ்வாறாகத் தமிழகத்தின் தெற்கு முனையில் இருந்து வட பகுதியீறாகப் பல்வேறு பிரதேசங்களிலும் இருந்து ஈடுபாட்டோடு அயராது எழுதி வந்த நேயர்கள் சிலரைக் குறிப்பிட்டாக வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேலம் மாவட்டம், ஆத்தூர், தாயுமானார் வீதியைச் சேர்ந்த நேயர் விஜயராம் A. கண்ணன் எமது நிகழ்ச்சிகளின் நீண்ட நாள் அபிமானி. அவர் பாராட்டுக் கடிதங்களுடன் நின்றுவிடாது எமது நிகழ்ச்சிக்கு உறுதுணை புரியக்கூடிய, இலங்கையில் பெற முடியாத - அறந்தை நாராயணனின் 'தமிழ்த் திரைவானின் நேற்றைய நட்சத்திரங்கள்' எனும் அரிய நூலையும் எழுத்தாளர் வாமனனின் 'திரை இசை அலைகள்' நூற் தொகுதிகளையும் அனுப்பி உதவினார். இவற்றுக்கெல்லாம் மேலாக விஜயராம் A கண்ணன் சுமார் 15 - 20 ஆண்டுகளுக்கு முன்பு நான் அறிவிப்பாளராகக் கடமையாற்றிய காலத்தில் ஒலிபரப்பிய திரையிசைப் பாடல் தொகுப்புகளை பதிவு செய்து பத்திரமாகப் பேணி வைத்திருந்து தமது YouTube வலைத் தளத்தில் தரவிறக்கம் செய்து அவற்றை நாம் என்றும் கேட்டு மகிழ வகை செய்திருக்கிறார்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜயராம் A கண்ணன் போல கடிதங்களால் அன்பு வாரிதியில் குளிக்க வைத்த மற்றும் சில நேயர்கள் -




K.S. அந்தோனிராஜ், 19/3, மாரியம்மன் சந்நதி தெரு, திருவள்ளுவர்புரம், கூறை நாடு, மயிலாடுதுறை.

T. வெண்ணிலவன், துறையூர் தெற்கு, இராமேஸ்வரம்

Dr. C. கண்ணன், 286, தாசில்தார் வீதி, அண்ணா நகர், மதுரை.

வள்ளியூர் A.P.S. ரவீந்திரன், பாஸ்கர் லாட்ஜ், மீனாட்சிபுரம், நாகர் கோவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

S. நாராயணன், நன்னிலம், திருவாரூர் மாவட்டம்.

S.N. முத்து குருசாமி, 147, அண்ணா நகர், பட்டுக்கோட்டை, தஞ்சாவூர்.

மண்டபம் ஸ்ரீ கவிமுகேஷ், ரயில்வே காலனி மண்டபம், முகவை மாவட்டம்.

V.M. சிங்காரவேல் கவிதா, திருவையாம் கோவில், திருச்சி -

கமால் மொஹமட், 30/9, அப்துல் ஹமீது வீதி, அறந்தாங்கி. இவர்களைவிட இன்னும் பலர் இருக்கிறார்கள். வகை மாதிரிக்காக, தப்பித் பிழைத்துக் கைவசம் இருந்த ஒரு சிலரது பெயர், முகவரிகளை மட்டும் இங்கு குறிப்பிட்டுள்ளேன்.

ஒப்பீட்டளவில் நோக்கினால் பல ஆண்டுகள் தொடர்ச்சியாகத் தினமும் இரண்டு மணி நேரமாவது நேயர்களுடன் தொடர்பு கொள்ளும் நிரந்தர அறிவிப்பாளர்களைப் போலல்லாது வாரத்தில் ஒரு சில மணித்துளிகள் மட்டுமே ஒலிபரப்பில் பணியாற்றத் கிடைக்கும் எம் போன்ற பகுதி நேர அறிவிப் பாளர்களை நேயர்கள் நினைவில் வைத்திருப்பதென்பது மிகப் பெரிய கொடுப்பினைதான்.

திருமதி பொன்மணி குலசிங்கம், திரு. S.N. சிவராஜா, போன்ற பணிப்பாளர்களும் R.சந்திரமோகன் போன்ற கட்டுப்பாட் டாளர்களும் என்பால் கொண்ட நம்பிக்கையும் பேரன்புமே நானும் ஒரு அபிமான அறிவிப்பாளனாக ஒரு சிலரது நெஞ்சங்களில் இடம்பிடிக்கப் பிரதான காரணமாயமைந்தது எனக்கூறின் அது மிகையல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை நேயர்களை பொறுத்தமட்டில் வானம்பாடி சேவையிலும் அதன் பின்னர் தென்றலிலுமாக 1997 இல் இருந்து 2005 வரையான காலகட்டத்தில், குறிப்பாக 'காலத்தால் அழியாத கானங்கள்', 'கதையும் கானமும்', 'காலத்தால் அழியாதவை' [மேற்படி தலைப்புகளும்கூட என்னால் சூட்டப்பட்டவைதாம்] போன்ற நிகழ்ச்சிகள் பல்லாயிரம் நேயர்களை எனக்கு ஈட்டித் தந்தன. அவர்களுள் தொடர்ச்சியாக எனது நிகழ்ச்சிகள் பற்றிய தமது கருத்துகளைப் பதிவு செய்த பதின்மரையாவது இத்தருணத்தில் நினைவுகூர்வது என் கடன்



சுழிபுரம்,தொல்புரம் மேற்கு, மூளாய் புதுக் சின்னம்மன் கோவில் பிரதான வீதியைச் சேர்ந்த நேயர் கங்கா கணேசலிங்கம் தொடர்ச்சியாக ஐந்தாறு ஆண்டுகள் வாராவாரம் கடிதங்கள் மூலம் தனது எண்ணங்களை பகிந்துகொள்ளத் தவற மாட்டார். தமது குடும்பத்தில் ஒருவர் போல என்னை மதித்து எனது சுக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துக்கங்களையும் விசாரித்துக்கொள்வார். அத்தகைய அன்புள்ளம் கொண்ட நேயர்களைக் கொண்டிருந்தது என் பாக்கியமே.

இப்போது போல அந்நாட்களில் எல்லோரிடமும் செல்லிடத் தொலைபேசி பரவலாக இல்லாத காலம். ஆயினும்கூடப் பணிப்பாளரைத் தொடர்பு கொண்டு அவர் மூலமாக என்னுடன் உரையாடிய அன்பர் வவுனியாவைச் சேர்ந்த S வேல் நாயகம். அந்நாளில் கிடைத்தற்கரிய சில பழைய [ஏழை படும் பாடு, லைலா மஜ்னு] திரைப்படங்களின் இறுவெட்டுக்களை மலேஷியாவில் இருந்து தருவித்து எனக்கு அனுப்பி வைத்த அவர் ஒரு முறை நேரடியாகவே தம் துணைவியாருடன் வந்து கொழும்பில் என்னைச் சந்தித்து அளவளாவிச் சென்றமை மறக்கற்பாலது.

வத்தளை, அல்விஸ் டவுண், இலக்கம் 174/37, ஐச் சேர்ந்த அன்பர் ராஜ்குமாரும் எனது அபிமானிகளில் ஒருவராக இருந்தார் என்பது என் பெரும் பேறே. காரணம் - இலங்கை வானொலியின் வர்த்தக சேவை ஆரம்பிக்கப்பட்ட போது அதன் ஆரம்பகால அறிவிப்பாளராக இருந்தவர் அவர். கௌரவிக்கப்பட வேண்டிய அவரைப் போன்ற ஒருவரை எனது நேயராக அடையக் காரணமானது 'காலத்தால் அழியாதவை' நிகழ்ச்சியே.

இவர்களைவிட அந்நாட்களில் கடிதங்கள் மூலம் அடிக்கடி தொடர்பு கொண்ட சில நேயர்கள் -

M.Ziad, 19, Dola Road, மாத்தளை.

கிறிஸ்ரி தியாகராஜா, கொட்டாஞ்சேனை வீதி, கொழும்பு

சோ.நடராசா, 182/5, அகதி முகாம், வவுனியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி திரவியம் கோவிந்தசாமி, வட்டுக்கோட்டை வடக்கு, சித்தங்கேணி.

ச,மனோகரன், உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்.

R. பூவேந்திரா, ஏழாலை வடக்கு, ஏழாலை.

S. கண்ணன், கச்சேரி நல்லூர் வீதி, சுண்டுக்குழி.

பொ.முத்துராசா , அம்பிட்டிய லேன், தென்னக்கும்புற.

நேயர்களின் கடிதங்கள் பற்றி எண்ணும்போது எமது மூத்த அறிவிப்பாளர் ராஜேஸ்வரி அக்கா பற்றிய சம்பவம் ஒன்று ஞாபகத்துக்கு வருகிறது. அவருக்கு வழமையாகவே ஏராளமான பாராட்டுக் கடிதங்கள் வந்து குவிவது வழக்கம். தமது தாயாக, சகோதரியாக, வழிகாட்டியாக அவரை உருவகித்து வாழ்த்துவோரும் வழிபடுவோரும் அனந்தம். அவர்களின் கடிதங்களைச் சேர்த்து வைத்து வாசிப்பதே தனது பொழுதுபோக்கு என அவர் ஒரு முறை குறிப்பிட்டிருந்தார்.தனக்கு வந்த நேயர்களின் கடிதங்களைத் தொகுத்து ஒரு நூலாகவே வெளியிட்டிருந்தார் பகுதி நேர அறிவிப்பாளர் உமாசந்திரா முத்தையா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை வானொலிப் பிரபலங்கள் சிலரும் - அறிமுகங்களும்

**நா**ன் ஓர் அறிவிப்பாளனாக வானொலிப் பிரவேசம் செய்த பின்னர் முன் பின்னாகப் பல மூத்த, இளைய, நிரந்தர, பகுதி நேர அறிவிப்பாளர்களை, தயாரிப்பாளர்களை அறிமுகம் செய்து கொள்ளவும் சிலருடன் பழகி நட்புப் பாராட்டவும் சிலரது பொறாமைக் கண்களுக்கும் புகைச்சலுக்கும் பலியாகவும் நேர்ந்ததுண்டு. அத்தகையவர்களை பற்றிக் கொஞ்சம் பார்ப்போம்.

நான் முதன்முறை அறிவிப்பாளனாக எடுபட்ட காலத்தில் எமக்கு கட்டுப்பாட்டாளராக இருந்தவர் திரு.**V.P. தியாகராஜா**. அளவான கண்டிப்பும் பக்கம் சாராத தன்மையும் நேர்மையும் அவரது சிறப்பியல்புகள் எனக் கூறலாம். 'நினைவூட்டுகிறோம்' நிகழ்ச்சி தொடர்பாக அவருடன் தொடர்பு கொள்ள நேர்ந்த போதிலும் நெருக்கமான பழக்கம் அவருடன் எனக்கு இருக்கவில்லை.

அப்போது மூத்த அறிவிப்பாளர்களில் ஒருவராக இருந்த திரு.**S.K. பரராஜசிங்கம்** தமது அறிவிப்பாளர் பதவியில் இருந்து ஏனோ தாமாகவே விலகிக்கொண்டிருந்தார். அவ்வப்போது கலையகத்தில் அவரைக் காண நேரிட்ட போதிலும்கூட ஒரு புன்சிரிப்புடன் அகன்றுவிடுவார். அந்த நல்ல கலைஞரை நெருங்கிப் பரிச்சயம் கொள்ளாமல் போய்விட்டோமே என்ற ஆதங்கம் எனக்கு என்றுமுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சில்வெஸ்டர் பாலசுப்ரமணியமும்** அந்நாளில் பிரபலமான ஒரு வர்த்தக சேவை அறிவிப்பாளர்தான். நான் ஸ்ரீ ஜெயவர்த்தனபுரவில் தங்கியிருந்த காலத்தில் வழியில் தெருவில் அவரைக் காண்பதுண்டு. அவரும் அங்குதான் வசித்து வந்தார். காணும்போது சில குசல விசாரிப்புகளுடன் சரி. அதனால் அவருடனும் நெருக்கமான பழக்கம் ஏற்படவில்லை.

முஸ்லிம் சேவைப் பணிப்பாளராகவும் செய்தி வாசிப்பாளராகவும் இருந்த திரு. **V.A. கபூரைத்** தூர இருந்தே பார்த்து மகிழ்ந்ததோடு சரி. சிலரின் வயது, அனுபவம் என்பன கருதி அவர்களை நெருங்க முடியாமல் போய்விடுவதுண்டு. கல்விச் சேவைப் பணிப்பாளராக நீண்ட காலம் பணியாற்றிய திருமதி. **ஞானம் இரத்தினமும்** அவ்வாறே.

திரு S.குஞ்சிதபாதத்தின் பின் சிறுவர் மலர் மாமாவாக வந்தவரின் தோற்றம் சிறுவர்களான எமக்கு உவப்பானதாக இருக்கவில்லை. கன்னங்கரேல் என்ற அம் மனிதரின் தோற்றம் கொஞ்சம் அச்சுறுத்துவதாக இருந்தது. அவர் வந்த கையோடு சிறுவர் மலர் மருமக்களான எம்மைக்கொண்டு ஒரு விழா அரங்கேற்றப்பட்டது. அவ்விழாவில் திரு சண்முகம் எழுதிய 'தேள் கடித்த திருடன்' எனும் குறு நாடகம் ஒன்று அரங்கேறியது. அதில் நானும் நடித்தேன். புதிய மாமாவால் 'அடுக்களை வாத்தியக் கோஷ்டி' என்றொரு நகைச்சுவை இசை விருந்தும் படைக்கப்பட்டது. அந்த மாமாதான் **V.A.சிவஞானம்** எனப் பின்னைய நாட்களில்தான் தெரிந்து கொண்டேன்.

கல்விச் சேவை நிகழ்ச்சிகளிலும் நாடகங்களிலும் பங்குபற்ற நேரிட்டபோது வண. **அரச அய்யாத்துரை** அறிமுகமானார். அவ்வமயம் நாடகங்களில் நடிக்க வந்த மூத்த கலைஞர் **M.S. இரத்தினத்தை**யும் சந்திக்க நேர்ந்தது. ஆயினும் அவர்களோடான தொடர்பு அவ்வளவாக நீடிக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

70 களில் தமிழ் நிகழ்ச்சிப் பணிப்பாளராக இருந்தவர் **நாவற்குழியூர்** கவிஞர் **K.S.நடராஜா**. இலங்கைத் திரைப்படக் கூட்டுத் தாபனம் 1981 இல் நடாத்திய திரைப்படப் பிரதி எழுதும் போட்டியில் பிரதம நடுவராக அவர் கடமையாற்றினார். அப்போட்டிக்கு நானும் பிரதி எழுதி அனுப்பியிருந்தேன். எனது பிரதி பரிசுக்குரியதாகத் தெரியப்பட்டிராத போதிலும் கூட அதன் எழுத்தாக்கம் பற்றி மண்டபத்தில் வைத்து என்னிடம் ஆவல் மீதூர அவர் விசாரித்து, சூழ இருந்தவர்களை விழியுயர்த்த வைத்தார். வித்துவான் என்ற ரீதியில் எனது தந்தையாருக்கு அறிமுகமானவர் அவர்.

எனது தந்தையாருடன் அறிமுகமான மறறொரு சிறந்த கலைஞரும் அறிவிப்பாளருமானவர் **சில்லையூர் செல்வராஜன்**. அவர் 50,60 களில் வானொலியுடன் நெருங்கிய சம்பந்தம் கொண்டவராக இருந்த போதிலும் பின்னைய நாட்களில் மக்கள் வங்கியின் சஞ்சிகை நிகழ்ச்சியுடன் தன்னை மட்டுப்படுத்திக் கொண்டுவிட்டவர். அதனால் நான் கடமையாற்றிய காலத்தில் கலையகத்தில் அவரை நான் சந்திக்க முடிந்ததில்லை.

அவர் எழுதிய 'ரோமியோ ஜூலியட்' நாடகத்தை **B.H.அப்துல் ஹமீட்** தயாரித்தபோது அதில் பங்கு கொண்ட நடிகர்கள் - பாத்திரங்கள் பற்றிய முன் பின் அறிவித்தல்களை என்னைக் கொண்டு செய்வித்தார்.

விளம்பரம் ஒன்றுக்கு யாழ்ப்பாணப் பேச்சு வழக்கில் குரல் வழங்கத் தேவைப்பட்டபோது ஹமீட் என்னைப் பயன்படுத்திக் கொண்டார். பழைய நட்பை மறவாமல் என்றும் இனிமையுடன் பழகும் நல்ல நண்பர் அப்துல் ஹமீட். எனது 45 நிமிட நாடகங்கள் மூன்று அவர் தயாரிப்பில் ஒலிபரப்பாயின.

சில்லையூராரின் துணைவியார் **கமலினி செல்வராஜனு**டன் நான் பல நாடகங்களில் நடித்த போதிலும் சில்லையூராரைக் கண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவாடி நட்பை உருவாக்கிக் கொள்ள ஏனோ துணியவில்லை. அவரது 'தணியாத தாகம்' ஒலிபரப்பான காலத்தில் நான் கொழும்போடு இல்லாமல் போனதும் எனது துரதிஷ்டமே.

தணியாத தாகத்தின் நெறியாளரும் வானொலி நாடகத் தயாரிப்பாளருமான **K.M. வாசகரைப்பற்றி** முன்பின் அறிமுகமில்லாமலே தவறுதலான ஓர் அனுமானம் கொண்டவனாக, எதிர்மறையான [Negative] அபிப்பிராயம் கொண்டவனாக நானிருந்தேன்.

1981 இல் நான் பகுதி நேர அறிவிப்பாளனாக எடுபட்டபோது எமக்குப் பயிற்றுனராக வாசகர்தான் வந்து சேர்ந்தார். அவருடன் பழகப் பழகத்தான் நான் எண்ணியிருந்ததற்கு முற்றிலும் மாறுபாடான, நேரெதிரான ஒரு மனிதரைக் காணக் கிடைத்தது.

தனக்கு நெருக்கமானவர்களைக் 'குஞ்சு' என அழைக்கும் இயல்புள்ள வாசகர் எவ்வித முன்பகைமையும் பாராட்டாமல் மிக விரைவிலேயே என்னுடன் நெருக்கமாகிவிட்டார். ஆயினும் அந்நட்பு நீண்ட காலம் நிலைக்கக் காலம் இடம் கொடுக்கவில்லை.

70 களின் ஆரம்பத்தில், வானொலி நாடகப் போட்டியைத் தொடர்ந்து அதில் நடுவராகக் கடமையாற்றிய கலாநிதி க.கைலாசபதி தலைமையில் நாடகம் பற்றிய கருத்தரங்கு ஒன்று கலையகத்தில் இடம்பெற்றது. போட்டியில் முதற் பரிசீட்டிய காரணத்தால் அதில் பார்வையாளனாகக் கலந்து கொள்ள நானும் அழைக்கப்பட்டிருந்தேன். அவ்வமயம் கைலாசபதியார் சொன்ன ஒரு கருத்தை மறுத்து நாடகம் பற்றிய எனது கருத்தை அவ்வவையில் நானும் முன்வைக்க நேர்ந்தது.

அப்போது பகுதிநேர அறிவிப்பாளராகப் புதிதாக எடுபட்டிருந்த **K.S. ராஜாவும்** அங்கு பார்வையாளராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்திருந்தார். அவர் பிரபலமாக அறிமுகமாகிவிடாத காலமது. அவர் கருத்தரங்கு முடிந்த பின்னர் தாமாக என்னிடம் வந்து அக்கறையாக என்னைப்பற்றி விசாரித்தார்.

அதன் பின்னான ஒரு தசாப்த காலம் வானொலியுடனான எனது தொடர்புகள் அறுந்து போன காலம். அதனால் 81 இல் ஓர் அறிவிப்பாளனாக வானொலிக் கலையகத்தில் நுழைந்த போதுதான் மீண்டும் அவரைச் சந்திக்க நேர்ந்தது.

அக்காலகட்டத்தில் எமது வானொலிக் கலையகத்தில் தொழில் நுட்ப உதவியாளராகக் கடமையாற்றிய நண்பர் ஒருவர் [பெயர் மறந்து விட்டது] கிளிநொச்சியில் இயங்கிய தனியார் கல்லூரி [Tutory] ஒன்றின் ஆண்டுவிழாவில் பிரதம அறிவிப்பாளராகக் கலந்து கொள்ள K.S.ராஜாவை அழைத்திருந்தார். கொசுறாக, அப்போதுதான் புதிதாக எடுபட்டிருந்த **பாலசிங்கம் பிரபாகரன், S.S.நாதன்** என்போருடன் என்னையும் வருமாறு அழைப்புவிடுத்தார். என்னை அழைத்தமைக்கு முக்கியமான காரணம் ஒன்றிருந்தது. அந்நாட்களில் எல்லாம் 'சோமபானம்' இல்லாமல் ராஜாவைச் சமாளிக்க முடியாது. அதற்கு,அவருடன் கூட்டுச் சேர்வதற்குத் தோதான, அவரைத் தாக்காட்டக் கூடிய ஆளாக, நான்தான் அகப்பட்டேன்.

அந்தப் பயணத்தின்போது அவருடன் நெருக்கமான காரணத்தாலோ என்னவோ ராஜாவைப் பற்றிய உயர்வான பிம்பம் ஒன்று என்னுள் உருவாக முடியாமற் போயிற்று. முன்னுக்குப்பின் முரண்பாடுள்ள ஒரு மனிதராக அவர் எனக்குத் தென்பட்டார்.

நான் பெரிதும் மதிக்கும் தயாரிப்பாளரும் நல்ல பல இனிய இயல்புகளைக் கொண்ட நண்பருமான **P.விக்னேஸ்வரனின்** அறிமுகமும் நட்புங்கூட 80 களிலேயே சித்தித்தது. அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயாரிப்பாளராக இருந்த காலத்தில் எனது 'நினைவுகள் சாவதில்லை' என்ற திகில் நாடகம் அவரது தயாரிப்பில் ஒலிபரப்பானது. நானும் அதில் துணைப் பாத்திரம் ஒன்றில் நடித்தேன். தான் தயாரித்த சிறந்த பத்து நாடகங்களுள் ஒன்றாக அந்நாடகத்தையும் தெரிந்து ஒலிப்பேழைகளின் ஆவணக் காப்பகத்தில் பேணி வைக்க விக்னேஸ்வரன் வழிவகை செய்துள்ளார்.

ரூபவாஹினியில் இணைந்து தொலைக்காட்சி நாடகங்களை அவர் தயாரித்துக் கொண்டிருந்த 83 இன் ஆரம்பப் பகுதியில் கத்தோலிக்க சமயச் சார்பான ஒரு சங்கத்தினருக்காகத் தொலைக்காட்சி நாடகம் ஒன்றைத் தயாரிக்கும் முயற்சியில் அவர் ஈடுபட்டிருந்தார். அந்நாடகப் பிரதியை S.S. கணேசபிள்ளை எழுதியதாக ஞாபகம். அதில் S.S.கணேசபிள்ளை A.M.C.ஜெகசோதியுடன் என்னையும் ஒரு பாத்திரத்தில் நடிக்க அவர் தெரிவு செய்திருந்தார். அந்நாடக ஒத்திகை நடைபெற்றுக் கொண்டிருந்த நாட்களில் ஒரு நாள் Savoy Hotel இல் ஒரு சிறிய விருந்துபசாரத்துக்கும் அவர் என்னை அழைத்துச் சென்றார். நடிகர் **T.ராஜகோபாலும்** அப்போது அங்கு சமூகமளித்தவர்களில் ஒருவர். முன்பின் அவ்வளவாகப் பழக்கமில்லாத ராஜகோபால் அந்த ஒரே நாளில் அறிமுகமாகிப் பின் பஸ் ஏறும்போது ஏனோ என்னோடு முரண்பட்டும் போய்விட்டார். 83 ஆடிக் கலவரம் காரணமாக அத்தொலைக்காட்சி நாடகம் தயாரிக்கப்படாமலே போய்விட்டது. அதன் பின்னரான காலங்களில் நான் யாழ்ப்பாணத்தோடு இடம்பெயராமல் இருந்திருந்தால் எமது நட்பு இறுகியிருக்கலாம்.

ஆரம்பகாலக் 'கலைக் கோலம்' நிகழ்ச்சிகளில் **K.S. சிவகுமாரனின்** திரைப்பட விமர்சனங்கள் அடிக்கடி இடம்பெறும். இளைஞனாக இருந்த காலத்தில் அவற்றை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவலுடன் விரும்பிக் கேட்டவன் நான். எனது மூத்த அண்ணனுக்கு ஒத்த வயதினரும் அறிமுகமானவருமாக இருந்த அவரை நான் அறிவிப்பாளனாக நுழைந்த பின்னர் வானொலிக் கலையகத்தில் அடிக்கடி காண நேரிடும். ஒரு போது வர்த்தக சேவை அறிவிப்பாளராகக் கடமையாற்றிய அவர் பின்னர் ஆங்கிலச் செய்தி வாசிப்பாளராக மாறிவிட்ட காலகட்டத்தில்தான் அவரது அறிமுகம் எனக்குக் கிடைத்தது. உரையாடக் கிடைக்கும் தருணங்களில் சலிப்பின்றி நீண்ட நேரம் உரையாடுவார். மிக மென்மையான இயல்புகளைக் கொண்ட அவர் எளிதில் உணர்ச்சிவசப்படுபவராகவும் காணப்பட்டார். எனது வேண்டுகோளை ஏற்று எனது 'நாளைய நாயகன்' நூல் வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு நூல் பற்றிய ஆய்வுரையை வழங்கி என்னைக் கௌரவப் படுத்திய அவரும் மறக்க முடியாத ஒரு மனிதர்.

ஒரு சிறுகதை எழுத்தாளராக **தம்பியையா தேவதாஸி**ன் பெயர் எனக்கு முன்னரே பரிச்சயமானதுதான். 80 களில் வானொலி மூலம் வாரம் ஒரு சிறுகதையை அறிமுகம் செய்யும் ஒரு நிகழ்ச்சியை P.விக்னேஸ்வரன் நடத்தி வந்தார். அதில் ஒரு ஆசிரியரைச் சுற்றி நகரும் 'ஒரு வேலி பயிரை மேய்கிறது' எனும் எனது சிறுகதையும்கூட இடம்பெற்றது. அது சம்பந்தமாக ஆசிரிய கலாசாலையில் என்னோடு உடன் கற்ற ஆசிரியர் ஒருவர் விக்னேஸ்வரனிடம் குறைப்பட்டு முறையிட்ட ஒரு சம்பவம்கூட நடந்தது. துரதிர்ஷ்டவசமாக 83 கலவரத்தில் அக்கதையும் இழக்கப்பட்டுவிட்டது.

அது ஒருபுறமிருக்க, P.விக்னேஸ்வரன் தயாரித்து வழங்கிய அந்நிகழ்ச்சியில் தம்பியையா தேவதாஸ் எழுதிய சாதிய சமத்துவம் பற்றிய ஒரு கதையும் வாசிக்கப்பட்டது. அக்கதையை நான்தான் வாசித்திருந்தேன். தேவதாஸ் வானொலி வாசற்படியிற் கூடக் காலடி வைத்திராத காலமது. நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாம் கட்டமாக 97 இல் அறிவிப்பாளரான போதுதான் அவரது அறிமுகம் எனக்குக் கிட்டியது.

அவர் தொகுத்து வழங்கி வந்த சஞ்சிகை நிகழ்ச்சி ஒன்றில் பிரதிகள் வாசிக்க என்னை அவர் சில வேளைகளில் அழைப்பதுண்டு. எழுத்தாளர் **மு.பொ.**வின் அறிமுகமும் அவரது நிகழ்ச்சி மூலமே எனக்கு வாய்த்தது.

இலங்கை வானொலி ஒலிபரப்பாளர்கள் பற்றிச் சிறப்பாகவே அறிமுகம் செய்யும் 'இலங்கை வானொலியின் இனிய ஒலிபரப்பாளர்கள்' எனும் பெறுமதி மிக்க ஓர் ஆவண நூலை ஆக்கிய தம்பியையா தேவதாஸைப் போற்றுகின்ற அதேவேளை அந்நூலில் எனது பெயரையும் உட்படுத்த அவர் தவறி விட்டாரே எனும் ஆதங்கமும் எனக்கு நிறையவே உண்டு.

**S. எழில்வேந்தன்** நாடகத் தயாரிப்பாளராக இருந்த 90 களின் ஆரம்பத்தில் நான் மீண்டும் வானொலி நாடகங்கள் எழுத ஆரம்பித்தேன், எழில் 'சக்தியில் பணியாற்றிய காலத்தில் 'Swiss Contract நிறுவன அனுசரணையுடன் தயாரித்து வழங்கிய நிகழ்ச்சிக்காக நாடகங்கள் எழுதும் பொறுப்பை மனமுவந்து என்னிடம் ஒப்படைத்திருந்தார். சுமார் 40 க்கும் மேற்பட்ட குறுநாடகங்கள் அப்போது என்னால் எழுதப்பட்டன.

சூரியன் பண்பலை வானொலியில் 2006 - 2007 காலப்பகுதியில் தினமும் ஒரு நாடகம் என்றவாறாகத் தொடர்ச்சியாகச் சில நாடகங்கள் இடம்பெற்று வந்தன. அவற்றுள் பெரும்பாலானவற்றை எழுதுவதற்கான உந்துகோலாக எனது பெயரைச் சிபாரிசு செய்து உதவிய எழில்வேந்தனின் நல்லியல்பை நயந்து போற்றுகிறேன். சிலவேளைகளில் என்னுடன் கருத்து முரண்பாடு கொண்டவராக இருந்த போதிலும் வேற்றுமையில் ஒற்றுமை காணும் அவரது இனிய இயல்பு வாழ்த்துதற்குரியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் அறிவிப்பாளராக இரண்டாம் கட்டத்தில் - *90* களின் பிற்பகுதியில் அறிமுகமானவர்களில் குறிப்பிடப்பட வேண்டிய ஒருவர் **கவிஞர் சி.சிவகுமார்**. மதிப்பும் மாரியாதையுமுடனான நட்பு அவருடையது. நூல் வெளியீடு சம்பந்தமான எனது நீண்ட காலக் கனவை நனவாக்க உதவிய அவர் நூல் வெளியீட்டு விழாவிலும் கூடவே நின்று உதவி ஒத்தாசைகள் புரிந்து அறிமுக உரையையும் நிகழ்த்தி மகிழ்வித்தவர். தமிழ் சினிமா பற்றிய எனது தொடர் கட்டுரை தினகரன் வார மலரில் வெளிவர வழி சமைத்தவரும் அவர்தான். 'இலங்கை வானொலி நாடகங்கள் பற்றிய எனது அறிமுகக் கட்டுரையை என்னிடம் தானாகவே கேட்டுப் பெற்று அதை 'அமுது' சஞ்சிகையில் உவப்புடன் பிரசுரித்தவர் சிவகுமார். எனது திறமைகளை அங்கீகரித்த்துச் சிலாகித்துப் பாராட்டும் இயல்பும் எவ்வித உதவியையும் எதிர்பாராது உதவிக்கரம் நீட்டும் உயர்ந்த மனப்பான்மையும் இயைப் பெற்ற மறக்க முடியாத ஓர் இனிய நண்பர் சிவகுமார்.

இரண்டாம் முறை நான் அறிவிப்பாளனாக வானொலிக் கலையகத்தில் வலம்வந்த காலத்தில் மிக இயல்பாகவே என்னுடன் நட்புப் பாராட்டி நெருக்கம் கொண்டுவிட்ட ஒருவர் **இளையதம்பி தயானந்தா**. என்னிலும் சுமார் 20 வயது இளையவராக அவர் இருந்த போதிலும் கூட அதை ஒரு பொருட்டாகக் கொள்ளாது அதையெல்லாம் கடந்த அவரது உறவுப்பாலம் மிக இறுக்கமானது. எனது வளர்ச்சியில் உண்மையாகவே அக்கறை கொண்டு, தேவையான நேரங்களில் கஞ்சத்தனம் இல்லாமல் தாராளமாகவே பாராட்டித் தனது மகிழ்வைப் பகிர்ந்துகொண்டவர் அவர். எனது நடிப்பை நயக்கவே தான் நாடகம் பார்க்க வந்ததாக ஒரு மேடை நாடக அரங்கேற்றத்தின் போது கூறி என்னை அவர் மெய்சிலிர்க்க வைத்தார்.

எனது எழுத்து முயற்சிக்குக் காலத்துக்குக் காலம் யாராவது தூண்டுகோலாக இருந்து வந்துள்ளார்கள். இராசையா மாஸ்டர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜோர்ஜ், கணேஸ்வரன், எழில்வேந்தன் போன்றோருடன் தயானந்தாவும் அதில் அடக்கம். யாழ் பேச்சு வழக்கை அடியொற்றி 'சிரித்திரன்' என சுந்தர் [சிவஞானசுந்தரம்] தனது சஞ்சிகைக்குப் பெயர் சூட்டியது போல தயானந்தா 'இருக்கிறம்' என நாமகரணம் சூட்டி ஆரம்பித்த சஞ்சிகை 'ஓகோ' என்று வெளிவந்து உயிர்ப்புடன் சிலகாலம் ஜீவித்திருந்து அவரது பல்துறை ஆற்றலைப் பறைசாற்றி நின்றது. அவரது வேண்டுகோளுக்கிணங்க அதில் நானும் சில ஒரு பக்கக் கதைகளும் 'முதுசம்' எனும் கட்டுரைத் தொடரும் எழுதினேன்.

**டேவிட் ராஜேந்திரனும் K. ஸ்ரீஸ்கந்தராஜாவும்** முன்பின்னாகச் சிலகாலம் கிராமிய நிகழ்ச்சித் தயாரிப்பாளர்களாக இருந்தவர்கள். எவ்வித அதிகார தோரணையுமின்றி மதிப்பு மரியாதையுடன் இனிமையாகப் பழகும் இயல்புடைய அவர்களின் தயாரிப்பில் பல கிராமியத் தொடர் நாடகங்களில் நான் பிரதான வேடமேற்று நடித்திருக்கிறேன்.

என்னுடன் கொட்டாஞ்சேனை,முஸ்லிம் வித்தியாலயத்தில் சக ஆசிரியையாகப் பணியாற்றி - நெருக்கமான நட்புடன் கருத்துக்களை, சுக துக்கங்களைப் பகிர்ந்து கொண்டவரும் பின் நாட்களில் வானொலி ஒலிபரப்பாளராக, நடிகையாக உடன் பயணித்தவருமான சிறுகதை எழுத்தாளர் **புர்கான் பீ இப்திகாரும்** மறக்கப்பட முடியாத ஓர் இனிய நண்பர்தான்.

நகைச்சுவை எழுத்திலும் சரி அறிவிப்புத்துறையிலும் சரி எனக்குக் கொஞ்சம் முன்னதாகவே வானொலியில் அறிமுகமாகிப் பிரபலமாகிவிட்ட நண்பர் **மஹதி ஹசன் இப்ராஹிம்.** அறிவிப்பாளராகு முன்னரே ஜோர்ஜ் மூலம் அறிமுகமாகி நட்புக் கொண்டு இரண்டாவது முறையாக நான் அறிவிப்பாளனான காலத்தில் கூடவே பணியாற்றி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலவேளைகளில் முரண்பட்டாலும்கூட அதைப் பாராட்டாது ஆபத்பாந்தவனாகக் கைகொடுத்து உதவும் இனிய பண்பாளன் **P. சீதாராமன்** போன்ற பல நல்ல உள்ளங்களின் அறிமுகமும் நட்பும் இலங்கை வானொலி மூலமே எனக்குச் சித்தித்தன.

வானொலி நாடகத் துறையில் ஆர்வம் மிகக் கொண்ட இளைஞரான **M.C. ரஸ்மின்** Sri Lankan Development Journalist Forum[SDJF] எனும் நிறுவனத்தின் அனுசரணையுடன் தமிழ் மாணவர்கள், இளைஞர்களுக்கான வானொலி நாடகச் செயற்றிட்டங்கள் பலவற்றை நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் நடாத்தி வானொலி நாடக நடிகர்களும் எழுத்தாளர்களும் உருவாகக் களம் அமைத்தவர். தமது செயற்றிட்டத்தில் ஒரு முக்கிய பங்காளியாக என்னையும் சேர்த்துக் கொண்டு யாழ்ப்பாணத்திலும் அனுராதபுரத்திலுமாக அவர் நடாத்திய செயலமர்வுகள் மறக்கற்பாலன. அனைத்துக்கும் மேலாக மூத்தோருக்கும் கலைஞர்களுக்கும் மதிப்பும் மரியாதையும் கொடுத்தொழுகும் அவரின் உயரிய பண்பும் இயல்பாகவும் நேயமாகவும் பழகும் அவரின் குணவியல்பும் எவரையும் ஈர்க்கவல்லன. அவரது அறிமுகமும் இலங்கை வானொலி மூலமே எனக்குக் கிட்டியது.

இவர்களைவிட **R.சந்திரமோகன், விசாலாட்சி ஹமீட், நாகபூஷணி சீதாராமன், ஜெயலட்சுமி சந்திரசேகர், ஜோசப் ராஜேந்திரன், S.ஜெயபாலன், ஜெயரஞ்சன் யோகராஜா, N.M.ராஜா, லோகேஷ், S.சிவசோதி, நடேச சர்மா, ரேலங்கி செல்வராஜா,** மலையாள அறிவிப்பாளர்கள் **கருணாகரன், லத்திகா,** கன்னட அறிவிப்பாளர் **முனிரத்தினம்,** தெலுங்கு அறிவிப்பாளர் **மீனாட்சி பொன்னுத்துரை** போன்றோரதும் இளைய தலைமுறையைச் சேர்ந்த அறிவிப்பாளர்களான **I. கஜமுகன், A.R. நந்திராஜன், ரஜனி விக்டர், ஷைலானி, சாயி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விதிஷா சனூஸ் முஹமட் பெரோஸ், S.சந்திரகாந்தன், S. தக்கீசன், முத்தையா ஜெகன்மோகன், MNM. அனஸ், நசார்கான்,** பாடகர் **V.முத்தழகு** போன்றோரதும் என்னுடனான பின்னணியில் இனிய நினைவுகளை சுமந்து வரும் நிகழ்வுகளும் உறவாடல்களும் பலவுண்டு.

அறிவிப்பாளர்கள் **R.S.A.கனகரத்தினம், S.சிவராஜா, K.ஜெயகிருஷ்ணராஜா, R.யோகராஜன், புவனலோஜனி நடராஜசிவம், S.விஸ்வநாதன், V.N.மதியழகன், அருணா செல்லத்துரை,** மற்றும் **அன்ரனி ராசையா** போன்றோரின் நல்ல அம்சங்களையும் மீறி நான் மறக்க விரும்பும் அவர்களுடனான கசப்பான அனுபவங்களும் சிலவுண்டு. அவற்றைப் பகிர்ந்து கொள்வது பண்பல்ல என்பதால் தவிர்த்துவிட்டேன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சில நேரங்களில் சில சந்திப்புகள்

**வா**னொலியுடன் தொடர்புடைய தயாரிப்பாளர்கள், அறிவிப்பாளர்கள் போன்றோரைப்பற்றிப் பிறிதொரு கட்டுரையில் நான் குறிப்பிட்டுள்ள போதிலும் கலைத்துறையில் நான் சந்தித்துப் பழகி உறவாடிய, நட்புக் கொண்ட -, கொள்ளாமல் விடுபட்ட ஏனையோர் பலரையும் பற்றிக் குறிப்பிடாமல் விட்டுவிடுவது எனக்கு ஒரு குறையாகவே படுகிறது. அதனால் எனது பாடசாலைக் காலத்தில் இருந்து என்னோடு தொடர்பு கொண்டு எனது வளர்ச்சிக்கு ஏதோ ஒரு விதத்தில் தூண்டுகோலாக இருந்த கலைஞர்களை, எழுத்தாளர்களைப் பற்றிக் கொஞ்சம் எழுதலாம் என நினைக்கிறேன்..

நான் கொழும்பு சென்ற்.பெனடிக்ற்ஸ் கல்லூரியில் ஏழாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்த காலத்தில் எனக்கு வகுப்பாசிரியராக **திரு.ராம் சுந்தரலிங்கம்** வரப் பேறுபெற்றேன். எமக்குச் சித்திர ஆசிரியராக இருந்த அவர் ஒரு நாடக நடிகரும்கூட. அமெச்சூர் நாடகக் குழு ஒன்றை அமைத்து ஜோர்ஜ், ஜோக்கிம் உட்படச் சில மேல் வகுப்பு மாணவர்களைச் சேர்த்துக் கொண்டு எமது கல்லூரி மேடையில் அவர் நாடகம் போடுவார். அந்நாளில் பிரபலமான நகைச்சுவை நடிகர் தங்கவேலுவின் குரலை அச்சொட்டாகப் பிரதிபண்ணி அசத்தலாக நடிப்பார். மேடை நாடகத்தைப் பொறுத்த மட்டில் எனது மானஸீகக் குருவாக அவரை நான் வரித்துக்கொண்டேன் என்றே சொல்லலாம்.

'வெண்ணிற ஆடை' திரைப்படம் வெளிவர முன்னரே [அதில் அறிமுகமான] தனது Christian Collage நண்பரான மூர்த்தியை அழைத்து வந்து 'இரு மேதாவிகள்' எனும் நாடகத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேடையேற்றியவர் அவர். ஏழாம் வகுப்பின் பின் '58 வகுப்புக் கலவரம் காரணமாகச் சிலகாலம் நான் யாழிற்கு இடம்பெயர நேரிட்டமையால் அவரது நாடகங்களில் பங்கேற்கக் கொடுத்து வைக்கவில்லை. 'தொழிலாளர் வேளை' எனும் நிகழ்ச்சியை வானொலியில் சுவைபடத் தொகுத்து வழங்கிய அவர் மறக்க முடியாத ஒரு கலைஞர்.

தாரமும் குருவும் தலைவிதிப்படி என்பார்கள். நான் ஐந்தாம் வகுப்பில் படித்தபோது எனக்குக் குருவாக வந்து வாய்த்தவர்தான் **ஆசிரியர் வ.இராசையா**. எனக்குக் குருவாக, வழிகாட்டியாக, நாடக எழுத்துத் துறையில் எனக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்த முதல்வராகத் திகழ்ந்தவர் ஆசிரியர் இராசையாத்தான். அதிர்ந்து பேசாத, மிக எளிமையான இயல்புள்ள நிறைகுடம் அவர். ஐந்தாம் வகுப்பில் படிக்கும்போது நான் கவிதை எழுதினேன் என்றால் அதற்கு முற்ற முழுதான காரணர் அவர்தான்.

1971 இல் எமது கல்லூரித் தமிழ்ச் சங்கத்தின் வெள்ளி விழாவில் 'கலை + 6 தலை = ஒரு கொலை' எனும் நகைச்சுவை நாடகத்தை எழுதி மேடையேற்ற உந்து சக்தியாகத் திகழ்ந்தவர் அவர் தான். அந்நாடகத்தை வெள்ளி விழாச் சிறப்பு மலரிலும் பிரசுரி த்து ஒரு கௌரவத்தை ஏற்படுத்தியவரும் அவர்தான். அவரது 'இளைஞர் மன்ற' நிகழ்ச்சிதான் வானொலி 'நாடக அரங்க' நடிகனாகும் வாய்ப்பை எனக்கு ஏற்படுத்திக் கொடுத்தது. எழுதுவதற்குச் சோம்பற்படும் என்னைத் தான் தயாரித்தளித்த 'சிறுவர் மலர்' நிகழ்ச்சிக்கு நாடகப் பிரதி எழுத வைத்து, தொடர்ச்சியாக எழுதும் பயிற்சிக்கு மறைமுகமாக வித்திட்டவரும் அவர்தான். 'தகவம்' இலக்கிய வட்டம் மூலம் நல்ல பல எழுத்தாளர்களை ஊக்குவித்து உருவாக்கிய அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரராகி விட்டாலும் என் நினைவில் என்றும் நீங்காது வாழுகின்றார்.

நான் கல்லூரியில் கற்றுக் கொண்டிருந்த காலத்தில் அறிமுகமான ஒருவர்தான் 'சிரித்திரன்' ஆசிரியாரான சிவஞானசுந்தரம் என்கிற **சுந்தர்.** எமது கல்லூரிக்கு மிக அண்மையில், அந்நாளில் Wall Street என வழங்கப்பட்ட St.Benedict's மாவத்தையில் தான் அவரது வீடு இருந்தது

அவரது வீட்டுக்குள் சுயாதீனமாகப் போய் வரும் அளவுக்கு . உரிமை தந்து என்னையும் ஓர் உள்வீட்டுப் பிள்ளையாகப் பாவித்து மிக எளிமையாகப் பழகும் இயல்பு கொண்டவர் அவர். எழுத்தின் சூட்சுமம் படியாத அந்த ஆரம்ப காலத்தில் சினிமாத் தலைப்புகளை வைத்து வசனம் அமைத்துச் சிறுபிள்ளைத்தனமாக நான் எழுதிய சில நாடகங்களையும் தமது சஞ்சிகையில் அவர் பிரசுரித்தார். அந்நாளைய நகைச்சுவை நடிகர்களைப் பட்டியலிட்டு நானெழுதிய முதலாவது 'ஆய்வு'க் கட்டுரையும் சிரித்திரனில்தான் பிரசுரமானது.

அதைப்பற்றிப் பேராசிரியர் கா.சிவத்தம்பி வியந்து பாராட்டியதாகவும் காளி N. ரத்தினத்தைப் பற்றி நான் குறிப்பிடாது விட்டுவிட்டது மட்டும் சிறு குறை எனக் கூறியதாகவும் சுந்தர் குறிப்பிட்டார். காளி N. ரத்தினத்தைப் பற்றி அந்நாளில் நான் கேள்விப்பட்டதோ அவரது படங்களைப் பார்த்ததோ கூட இல்லை..வானொலி அறிவிப்பாளனான பின்னர்தான் அவர் பற்றி நான் தெரிந்து கொண்டேன். 1950 இல் மறைந்துவிட்ட அவர் நடித்த [உத்தமபுத்திரன்[1940],சபாபதி[1941], மனோன்மணி [1942], திவான் பகதூர்[1943], பர்மா ராணி[1945] ஆயிரம் தலை வாங்கிய அபூர்வ சிந்தாமணி[1947], கன்னிகா[1947], பொன்முடி[1950], ஏழை படும் பாடு[1950] போன்ற ஒருசில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படங்களைக்கூடப் பின்னைய காலத்தில்தான் DVD க்களின் வரவாலும் You tube இன் அருளாலும் நான் பார்க்கக் கிடைத்தது. அவரது கடைசிப்படமான 'ஏழை படும் பாடு' மட்டும் சிறு வயதில் நான் பார்த்திருந்த போதிலும் அதில் அவரது பாத்திரம் ஞாபகத்தில் இல்லை. ஆயினும் கலைவாணரின் சம காலத்தவரான அவரைப்பற்றி அவ்வாய்வில் நான் குறிப்பிடாதது ஒரு குறைதான் என்பதை இப்போது உணர முடிகிறது.

நண்பர்களாக, ஞானிகளாக, வழிகாட்டிகளாக [ Friend, Philosopher and Guide] நம் வாழ்க்கையோடு ஒன்றிவிடுபவர்கள் ஒருசிலர்தான். அத்தகைய ஒருவர்தான் **ஜோர்ஜ் சந்திரசேகரன்**. அவரைப்பற்றி ஏற்கெனவே பல இடங்களிலும் நான் குறிப்பிட்டிருக்கிறேன். எனது அண்ணர் SVR இன் சகபாடியான அவர் கலைத் தொடர்பால் எனக்கு ஆப்த நண்பரானார். அவர் கொட்டாஞ்சேனையில் குடியிருந்த வீடும் எங்கள் வீட்டுக்குச் சமீபமாகவே இருந்தது. அந்நாளையத் தமிழ்த் திரைப்பட அரங்கங்களில் நாம் அடிக்கடி சந்தித்துக் கொண்டோம்.. இருவரிடமுமே கையில் காசு புழங்காத அந்த ஆரம்ப காலத்தில் ஒரு 'Single tea தன்னும் குடிக்காது, எமது வீடுகளுக்கு இடையே பிரியும் தெரு முனையில் நின்றுகொண்டு நேரம் போவது தெரியாமல் மணிக்கணக்கில் உரையாடுவோம். அப்போதே அவர் பெயர் சொல்லக்கூடிய ஓர் எழுத்தாளர். 'செய்தி' என்ற வாராந்திரப் பத்திரிகையில் தொடராக அவரெழுதிய 'பொம்மலாட்டம்' என்ற நாவலை வாராவாரம் வாசித்து ரசித்து வந்த நான் அது நூலாக வர வேண்டுமென விரும்பினேன். அதற்காக நான் தொடராகச் சேர்த்து வைத்திருந்த இதழ்களைக்கூட அவரிடம் கொடுத்துவிட்டேன். அவரியல்புப்படி அவர் அதில் அக்கறைப்படவில்லை. ஒரு காலத்தில், அவர் வாசித்த சில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்களின் பாதிப்பினால் போலும், 'சும்மா இருப்பதே சுகம்' எனும் பற்றற்ற நிலைக்கு அவர் பக்குவப்பட்டுவிட்டார். ஜெ.கிருஷ்ணமூர்த்தி என்ற தத்துவ ஞானியை நான் வாசிக்க நேர்ந்ததும் அவரால்தான். இளம் வயதிலேயே ஜேகேயின் தத்துவங்களால் கவரப்பட்ட நானும் சிலகாலம் அதில் மூழ்கிப் போனேன். நல்ல வேளையாக 'ஜோர்ஜ் சந்திரசேகரன் சிறுகதைகள்' என்ற அவரது நூல் 1995 க்கான சாகித்ய விருது பெற்று ஓர் எழுத்தாளராக அவர் பெயரைத் தக்க வைத்துக் கொண்டிருக்கிறது. ஜோர்ஜின் இளமைப் பருவ காலத்தைத் திரும்பிப் பார்த்தால், அவரோடு நீண்ட காலம் நெருக்கமாக நட்புப் பாராட்டி ஊடாடிக் கொண்டிருந்தவன் நானாகத்தான் இருக்கும். அதனால் அவரைப்பற்றி இன்னும் எவ்வளவோ எழுதலாம். பிறிதொரு சமயம் கிடைத்தால் விரிவாகப் பார்க்கலாம்

எனது அண்ணர் SVR மூலம் எனக்கு அறிமுகமானவர்தான் நடிகர் **K.S. பாலச்சந்திரன்.** இறைவரித் திணைக்களத்தில் அவரோடு உடன் பணியாற்றியவர் அவர். படிப்பை மூட்டை கட்டிவிட்டு கையில் ஐந்து சதக் காசுமில்லாமல் கல்லூரி நண்பர்கள் சிலருடன் சேர்ந்து மேடை நாடகம் போடப் போகிறேன் பேர்வழி என்று நான் புறப்பட்ட காலமது. செய்தியறிந்து நடிக்க வாய்ப்புத் தேடி என்னிடம் வந்து சேர்ந்தார் பாலச்சந்திரன். பெண் பாத்திரங்களையும் ஆண்களே ஏற்று நடித்த நாடகம் அது. பொதுவாக மேடைகளில் இந்திய சினிமாப்பாணி நாடகங்களே மேடையேறிக் கொண்டிருந்த அக்காலகட்டத்தில் முற்ற முழுக்க யாழ்ப்பாணத் தமிழில் உருவாக்கப்பட்ட நாடகம்தான் 'முகப்பாத்திதான்'. எடுத்தவாக்கிலேயே கதாநாயகன் வேடத்தை பாலச்சந்திரனுக்குத் துணிந்து கொடுத்துவிட்டேன். மேடையைப் பொறுத்த மட்டில் நான் ஆரம்ப காலத் தங்கவேலுவைப் போல. அப்பா வேடம்தான் போட்டுக் கொண்டிருந்தேன். அதனால் தயங்காது பாலச்சந்திரனைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதாநாயகனாக்கிவிட்டேன். நல்ல வேளையாக லும்பினி அரங்கில் நாடகம் போட்டதால் செலவு கையைக் கடிக்காமல் தப்பிவிட்டேன். அந்நாடகம் 18/02/1968 இல் மேடையேறியது.

அடுத்தபடியாகச் 'சதுரங்கம்' எனும் நாடகத்தை எழுதி மேடையேற்ற எண்ணினேன். நாடகத் தயாரிப்பைத் தானே ஏற்பதாக பாலச்சந்திரன் முன்வந்தார். வசதியாகப் போய்விட்டதென நானும் சம்மதித்தேன். வரவோ செலவோ நான் எதிலும் தலையிடவில்லை. நாடக 'டிக்கெற்' அச்சிட்டபோது பாலச்சந்திரன் அளிக்கும் என்பதை பெரிய எழுத்திலும் மறைமுதல்வனின் என்பதைச் சிறிய எழுத்திலுமாக அடித்து அவர் திருப்திப்பட்டுக் கொண்டார். நாடகம் 04 /02/1971 இல் சரஸ்வதி மண்டபத்தில் 'டீங்கா'கவே மேடையேறியது. அதன் பின்னர் நான் நாடகங்கள் எதுவும் மேடையேற்றவில்லை. அதே ஆண்டு டிசம்பர் 04 இல் அதே சரஸ்வதி மண்டபத்தில் மேடையேறியது சி.சண்முகத்தின் 'இதுவும் ஒரு நாடகம்'. அதில் என்னோடு பாலச்சந்திரனும் நடித்தார்.

'ஓடிப்போனவன்' என்ற சிறுவர் நாவலை எழுதிய **க.நவசோதி** எனதண்ணர் SVR இன் வகுப்புத் தோழர். அதனால் எனக்கும் அறிமுகமானவர்..லண்டன் பிபிசி தமிழோசையிலும் சிலகாலம் பணியாற்றிய அவர் அகால மரணமெய்திய வேளையில்கவிஞர் சில்லையூர் செல்வராசன் அவர் பற்றிய உருக்கமான இரங்கல் கவிதை ஒன்றால் அஞ்சலி செய்திருந்தார்.

எனது அண்ணர் SVR மூலம் அறிமுகமான மற்றொரு நண்பர் எழுத்தாளர் **V.சிங்காரவேலு**.'சதுரங்கம்' நாடக மேடையேற்றத்தின்போது கூடவே நின்று உதவிகள் பல புரிந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் ஒரு நல்ல சிறுகதை எழுத்தாளர். அவர் மூலமாக எனக்கு அறிமுகமானவர்தான் நாடக உலக ஜாம்பவான் **அ. தார்சீஸியஸ்.** 'நாடோடிகள்' எனும் நாடக அமைப்பின் மூலம் மஹாகவியின் 'கோடை' நாடகத்தை மேடையேற்றும் முனைப்பில் அப்போது அவர் தீவிரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்தார். அதில் 'முருகப்பு' எனும் ஒரு போலீஸ்காரர் வேடம். கொஞ்சம் அச'ட்டுத்தனமான ஒரு பாத்திரம். அதில் நான் பொருந்திப் போனேன்.

'கோடை' மட்டக்களப்பில் மேடையேறியபோது கவிஞர் **மஹாகவி**யின் அறிமுகம் கிட்டியது. அவரது மகன் சேரனுக்கு அப்போது பத்துப் பன்னிரண்டு வயதுதானிருக்கும். மட்டக்களப்பு மேடையேற்றத்தில் அவரும் சிறுவன் கணேசுவின் பாத்திரத்தில் நடித்தார். மேடையேற்றத்தின் பின் மஹாகவியோடு உடனிருந்த கவிஞர் **நு.'.மான்** என்னை ஆரத் தழுவியமை மறக்கற்பாலது. ['கோடை' மேடையேற்றம் பற்றி எனது 'இலங்கை வானொலித் தமிழ் நாடக வரலாறு' நூலில் விரிவாகவே எழுதியுள்ளேன்.]

தமிழில் நான் பார்த்து வியந்த, 'இப்படியும் ஒரு நாடகமா?' என மூக்கில் விரல் வைத்த நாடகம் 'பொம்மலாட்டம்'.. அதன் நெறியாளர் **சுஹைர் ஹமீட்**. நான் மேட்டுத் தெரு, அந்தோனியார் பாடசாலையில் ஆசிரியனாக இருந்த காலத்தில் – 1971 காலப் பகுதியில், நானாகவே அவரைத் தேடித் சென்று என்னை அறிமுகப்படுத்திக்கொண்டேன். அதன் பின் 'யாழ் வழக்கில் எழுதப்பட்ட 'வாடகைக்கு அறை' எனும் நாடகத்தில் அவரது நெறியாள்கையில் நானும் நடித்தேன். நாடகம் கலைஞர் **A.ரகுநாதனின்** தயாரிப்பில் யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் மேடையேறியது. அதன்போதுதான் பண்பட்ட நடிகர் **பிரான்சிஸ் ஜெனம்** எனக்கு அறிமுகமானார். நாடக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேடையேற்றத்தின்போது அவர் வீட்டில் தங்கி அவரது விருந்தோம்பலில் சுகித்தோம்.

நான் விவேகானந்தா மஹா வித்தியாலயத்தில் ஆசிரியனாக இருந்த காலத்தில் '72 களில் சுஹைருடனான நட்பு நெருக்கமாயிற்று. தினமும் பொழுதுபட்டால் இருவரும் சந்தித்துக்கொள்வோம். கணகணப்பாக நள்ளிரவுவரை பொழுது கழியும். அவ்வாறான ஒரு நாளில்தான் **பௌசுல் அமீரும்** பழக்கமானார். 'மோக முத்தம் தருவாள் மலர்க் கொடியாள்' ஐ ['ஆன்' திரைப்படப் பாடல்] அவர் குரலில் கேட்டபோது அதன் பரிமாணமே இன்னும் ஒரு படி உயர்ந்துவிட்டது. சுஹைரின் ஆஸ்தான எழுத்தாளரான அவரின் முழுத் திறமையும் அவ்வளவாக வெளிப்படுத்தப் படவில்லை என்பதே. எனதபிப்பிராயம்.

ஈழத்து **'நடிகவேள்' லடிஸ் வீரமணி**யும் சுஹைர் மூலம் நான் சந்திக்கக் கிடைத்த வர்களுள் முக்கியமானவர். சுஹைரின் நெறியாள்கையில் 'பொம்மலாட்டம்' நாடகத்தில் லடிசின் நடிப்பு காலத்தால் மறக்க முடியாத ஒரு கலானுபவம். அப்போது நான் மாணவ ஆசிரியனாகப் பணியாற்றிக் கொண்டிருந்த மேட்டுத் தெரு புனித அந்தோனியார் பாடசாலைக் கலைவிழா ஒன்றில் எனது வேண்டுகோளை ஏற்று அவர் வந்து வில்லிசை இசைத்து மகிழ்வித்தமையானது அவரின் எளிமையான இயல்புக்கோர் எடுத்துக்காட்டு.

நான் மதிக்கும், நான் வாசித்து வியந்த எழுத்தாளர்கள் பலரையும் நான் எதிர்பாராத விதமாக - சில காலங்களில், சில நேரங்களில் சந்திக்க நேர்ந்துள்ளது. ஆயினும் அவ்வேளைகளில் அவர்களுடன் அவர்களது படைப்புகள் பற்றியோ, நான் அவற்றையெல்லாம் வாசித்து வியந்து ரசித்தமை பற்றியோ எதுவுமே குறிப்பிட்டதில்லை. ஒன்றில் அதற்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னேற்பாடுகளுடன் நான் அவர்களை அணுகவில்லையோ அல்லது அதற்குத் தகுதியானவனாக நான் என்னைக் கருதவில்லையோ தெரியவில்லை. அவ்வாறான சில சந்திப்புகள் பற்றிக் கொஞ்சம் பார்ப்போம்.

ஈழத்தின் தலை சிறந்த எழுத்தாளர் **எஸ்.பொ.** எனது முதல் மேடை நாடகத்தில் - 'முகப்பாத்தி தான்' இல் -அவரது 'சடங்கு' நாவலின் பாதிப்பு ஆங்காங்கே இருக்கும். அதுபற்றி அந்நாடகம் பற்றிய துண்டுப் பிரசுரத்திலும் மறைக்காமல் நான் குறிப்பிட்டிருந்தேன். நான் மிகவும் மதித்த அவரைப் பாடவேளையிலும் Staff Room இல் சூடான சம்வாதம் செய்து மினக்கெடும் ஒரு சாதாரண சக ஆசிரியனாகச் சந்திக்க நேர்ந்தது -கொழும்பு, விவேகானந்தா வித்தியாலயத்தில் ஒரு Pupil Teacher ஆக நான் கடமையாற்றத் சென்றபோதுதான். அது 1972 இல். நம் இருவரையும் ஒரே புள்ளியில் சந்திக்க வைத்தது 'புகையின்பம்'. இடைவேளையின்போது மறைமுகமாகச் சிகரெட் பிடிக்கவெனப் பாடசாலையின் பின்புறம் ஒதுங்கும் வேளையில் இருவரும் கட்டாயம் சந்தித்துக் கொள்வோம். அவரைப் பொறுத்த மட்டில் கொழும்பில் பிரபலமான ஒரு கல்லூரி ஆசிரியரின், வித்துவானின் மகன் நான். அவ்வளவுதான். எனது எழுத்துக்கள் ஏதும் - கவிதையோ, சிறுகதையோ - பத்திரிகைகள் எதிலும் வந்திராத நிலையில், ஒரு வானொலி நாடக எழுத்தாளனாக, அதிலும் ஓரிரு நாடகங்களே எழுதிய ஒருவனை, அவர் ஞாபகம் கொள்வாரென நான் எதிர்பார்க்க இடமில்லைத்தானே? [எனது நாடகப் பரிசு பற்றிய பிரதாபங்களையும் நான் எவரிடத்தும் கூறித் திரிவதுமில்லை.] நானங்கு கற்பிக்கச் சென்ற ஒரு சில நாட்களிலேயே அவரும் அரச கரும நூலாக்கக் குழுவில் பணியாற்றத் சென்றுவிட்டார். அதனாலும் அவரோடான தொடர்பு தொடரவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றொரு பிரபலமான எழுத்தாளர் **வ.அ.இராசரத்தினம்**. அவரைத் திருமலை - கொழும்பு இரயில் வண்டியில் ஒரு சக பயணியாகச் சந்திக்க நேர்ந்தது. தனது அழகான இளம் மகளுடன் அவர் பயணம் செய்து கொண்டிருந்தார். நான் வழமையாகவே பயணங்களின்போது நூல்கள் எதையாவது வாசிப்பது வழக்கம். அன்று ஜெயமோகனின் 'ரப்பர்' நாவல் என் கையில் இருந்தது. மாகோச் சந்தியில் இளநீர் பருகலாமென நான் இறங்கிச் செல்லு முன்பாக நானிருந்த seat இல் கையிலிருந்த நூலை அடையாளத்துக்காகக் கவிழ்த்து வைத்துவிட்டுச் சென்றேன். மீளவும் நான் திரும்பி வந்து பார்த்தபோது seat இல் வைத்துவிட்டுப் போன புத்தகத்தைக் காணோம். அது அவர் கையில் இருந்தது. அவர் அதைச் சுவாரஸ்யமாக வாசித்துக்கொண்டிருந்தார்.

எனக்கு வழமைபோல மூக்குக்கு மேல் கோபம் வந்துவிட்டது. அவரிடம் கொஞ்சம் கடுமையாகவே ஏதோ கேட்டுவிட்டேன். நூலைத் திருப்பித் தந்த அவர் தான்தான் வானா ஆனா எனத் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார். நான் வாயடைத்துப் போனேன். என் வாயிலிருந்து வார்த்தைகள் வெளிவரவில்லை. [எப்படி வரும?]

'ஒரு கூடைக் கொழுந்து' எனும் காத்திரமான ஒரே ஒரு சிறுகதைத் தொகுதியை வெளியிட்டதுடன் ஓய்ந்து போனவர் மலையக எழுத்தாளரான N.S.M. **ராமையா.** கொழும்பில் நாங்கள் குடியிருந்த அதே ஸ்ரீ குணானந்த மாவத்தையில்தான் அவரும் சில காலம் இருந்திருக்கிறார். தற்செயலாகத்தான் ஒரு நாள் அவரைச் சந்தித்தேன். சந்திப்பு எங்கு எப்படி நிகழ்ந்ததென ஞாபகமில்லை. எழுதுவதை நிறுத்திவிட்டு மதுவே தஞ்சமென அவர் மயங்கித் தவித்த ஒரு நாளில் அவரோடு அவர் வீடு வரை சென்று கதைத்ததோடு சரி. பின்னர் ஏனோ அவரோடான எனது சந்திப்புத் தொடரவில்லை. ஆனால் ஆர்ப்பாட்டமில்லாத,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதியான, எளிமையான அந்த நல்ல மனிதரின் தோற்றம் மட்டும் இன்றும் என் மனக் கண்ணில் நிழலாடுகிறது.

முத்திரை பதித்த மலையக முன்னணி எழுத்தாளர் **தெளிவத்தை ஜோசப்**. ஓர் ஆசிரியனாகப் பணியாற்றிய காலத்தில் கணிக்கப்படாத நான், பணி ஓய்வு பெற்ற பின் வானொலியில் தொடர்ந்து நாடகங்கள் எழுதிக் கொண்டிருந்த 90 களின் பிற்கூற்றில் தமிழ்த் தின நாடகப் போட்டிகளின் நடுவராகப் பணியாற்ற அழைக்கப்பட்டேன். அப்போது நான் சந்திக்க நேர்ந்த எழுத்தாளர்களுள் தெளிவத்தை ஜோசப்பும் ஒருவர். சிறுகதைகளுக்கான நடுவராக அவர் வந்திருந்தார். இருவருமே Busy யாக இருந்த காரணத்தால் அவ்வளவாகப் பேசிக்கொள்ள முடியவில்லை.

தமிழ்த் தின நாடகப் போட்டிகளுக்கான நடுவராக வந்தவர்களுள் முக்கியமான ஓர் எழுத்தாளர் **செ.. யோகநாதன்**. நல்ல ஒரு சிறுகதை நாவல் எழுத்தாளராகப் பரிணமித்த் அவரின் எழுத்துக்களால் ஒருகாலத்தில் கவரப்பட்டவன் நான். எழுத்தாளர்களை நேரடியாக நாம் சந்திக்கும்போது பெரும்பாலும் அவர்களை பற்றிய மதிப்பு ஏனோ குறைந்து போய்விடுகிறது. ஜெயகாந்தனைப் போன்ற ஒரு கம்பீரத்துடன் உருவாக்கப்படும் எழுத்தாளனின் பிம்பம் நேரடித் தரிசனத்தின்போது உடைந்து போய்விடுவது சிலவேளை காரணமாக இருக்கலாம். எனது நாளைய நாயகன்' நூல் வெளியீட்டில் கலந்து கொண்டு காத்திரமான உரையாற்றிய செ.யோ. - எழுத்தாளனின் இருப்பும் மவுசும் அவன் எவ்வளவுக்கெவ்வளவு நூல்களை விரைவாக வெளியிடுகிறான் என்பதில் தான் தங்கியுள்ளன என்பார். அதனால்தான் சிறுகதை, நாவல், சிறுவர் இலக்கியம், சினிமா எனப் பல்வேறு துறைகளிலுமாக சுமார் முப்பது நூல்களை அவரால் வெளிக் கொணர முடிந்துள்ளது போலும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**J.B.றொபேட், அன்ரனி ஜீவா, மாத்தளைக் கார்த்திகேசு** மூவருமே 60,70 களில் எனக்கு அறிமுகமானவர்கள். றொபேட் ஒரு எழுத்தாளரல்ல. மேடை நாடக நெறியாளர். ஆசிரியையாகக் கடமையாற்றிய எனது பெரியண்ணியிடம் கல்வி பயின்றவர் றொபேட். அண்ணி கேட்டுக் கொண்டதற்கிணங்க, 'முசுப்பாத்திதான்' நாடகத்தை நான் மேடையேற்றியபோது தானாகவே முன்வந்து மேடையமைப்பில் உதவி ஒத்தாசைகள் புரிந்தவர் றொபேட். சினிமாவில் Cameraக் கோணங்கள் போல மேடையில் Spot Lights கள். அவைபற்றியெல்லாம் எனக்கு ஆனா ஆவன்னாக்கூடத் தெரியாத அந்தக் காலத்தில் ஒளிப் பொட்டுகளை தேவையான நேரங்களில் தேவையான அளவுகளில் நேர்த்தியாக இயக்கிக் கையாண்ட றொபேட்டின் கைவண்ணத்தால் எனது நாடகத்தின் தரம் ஒரு படி உயர்ந்ததென்னவோ உண்மைதான். கொஞ்சம் கூச்ச சுபாவமுள்ள அவரின் திறமைகள் சரியாக இனங்காணப்படாது குடத்துள்ளிட்ட விளக்காகவே அவர் இருந்து மறைந்துவிட்டாரே என்பது மனதை உறுத்தும் விஷயம்தான்.

மாத்தளைக் கார்த்திகேசுவும் ஒரு காலத்தில் குறிப்பிடத் தக்க, மலையகச் சிறுகதை, நாவல் எழுத்தாளராகத் திகழ்ந்தவர்தான் றொபேட் மூலம்தான் அவரது அறிமுகம் ஏற்பட்டிருக்க வேண்டுமென எண்ணுகிறேன். அதே காலகட்டத்தில் பழக்கமானவர்தான் அன்ரனி ஜீவாவும். பிரபலமாகாத ஒரு பத்தி எழுத்தாளராக அப்போது அவர் வளர்ந்து கொண்டிருந்தார். என்னைப் பற்றிய சிறிய அறிமுகக் கட்டுரை ஒன்றை முதன் முதலாகத் 'தினகரன்' பத்திரிகையில் எழுதியவர் அவர்தான். ஆர்வக் கோளாறால் நான்கு பேரை ஒன்றுகூட்டி இலக்கியக் கலந்துரையாடல்களும் செய்து கொண்டிருந்த அவர் ஒருமுறை காவலூர் ஜெகநாதனின் சிறுகதைகள் நூலொன்றைத் திறனாய்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யுமாறு என்னை அழைத்திருந்தார். நானும் மினக்கெட்டுச் சென்று கட்டுரை வாசித்தேன். நூலாசிரியர் உட்பட வந்தவர்கள் எண்ணி ஒரு நாலைந்து பேர்தான். பெரிய கவன ஈர்ப்புப் பெறாத அத்தகைய நிகழ்வுகள் எனக்குச் சுவாரஸ்யமாகப் படவில்லை. நேர விரயம் செய்ய விரும்பாத நான் பின்னர் அவற்றில் கலந்து கொள்வதைத் தவிர்த்துவிட்டேன் . அதனால் அவருடனான தொடர்பும் காலப் போக்கில் விடுபட்டுப் போயிற்று.

நான் ஆசிரிய கலாசாலையில் கற்ற 73-74 களில் எனக்குற்ற நண்பராக மாறியவர்தான் பிரபல சிறுகதை எழுத்தாளர் K.R. **டேவிட்**. அப்போதெல்லாம் அவர் எழுத்தாளராகப் பெரிதாக அறியப்பட்டவரல்ல. 'Birds of the same feather' என்பார்களே. அவ்வாறுதான் நாமும். ஒத்த உணர்வுகள் எம்மை ஒன்றிணைத்தன. தொழில் நிர்ப்பந்தங்கள் எம்மை வெவ்வேறு திசைகளில் பிரிய வைத்தன. ஆனாலும் அவ்வப்போது சந்திப்புகள் நிகழத்தான் செய்கின்றன.

ஆசிரிய கலாசாலையில் நான் கற்ற காலத்தில் அங்கு என்னோடு சேர்ந்து நாடகம் நடித்த நண்பன் [த..பஞ்சலிங்கம்] மூலம் அறிமுகமானவர்தான் எழுத்தாளர் **சொக்கன்.** நல்லூர் சாதனா பாடசாலை அதிபராக அப்போதிருந்த அவரெழுதிய 'சிங்ககிரிக் காவலன்' என்ற நாடகத்தில் முக்கிய பாத்திரமேற்று நான் நடித்தேன். அவரும் எனது நடிப்பைப் பாராட்டியதாக ஞாபகம். அவ்வளவுதான். அதற்கு மேல் சிறுகதை. நாடகம், இலக்கியம் ,சமயம் என எழுதிக் குவித்த அந்த முன்னணி எழுத்தாளருடன் எனக்கு எவ்வித சங்காத்தமும் ஏற்படவில்லை.

நான் திருமணம் செய்து யாழ்ப்பாணம், மருதடி வீதியில் எனது மனைவியின் வீட்டில் குடியேறிய பின்னர் எனது அயலிலேயே பிரபலமான முற்போக்கு எழுத்தாளர்கள் இருவர் வசித்து வருவதைத் தெரிந்து கொண்டேன். ஒருவர் **கே.டானியல்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றவர் **பெனடிக்ற் பாலன்**. இருவரதும் நாவல்களையும் பாலனது சிறுகதைகளையும் நான் ஏற்கெனவே வாசித்து இலயித்திருக்கிறேன். ஆயினும் எனது இயல்புப்படி அவர்களைக் கண்டு கதைக்கத் துணியவில்லை. பெனடிக்ற் பாலனுடன் மட்டும் ஓரிரு சந்திப்புகள் சில Bar களில் நிகழ்ந்த போதிலும் ஏனோ அவருடன் நெருக்கம் காண முடியவில்லை.

'**துருவன்**' எனும் எழுத்தாளர் அவ்வளவாக எழுதியவரல்ல. ஆனாலும் அவரது கதைகள் சிலவற்றை வாசித்து அவர்பால் அபிமானம் கொண்டிருந்தேன். 83 ஆடிக் கலவரத்தின் பின் 'சொந்த ஊரே சுவர்க்க பூமி' எனும் சுடலை ஞானம் வரப்பெற்று யாழ்ப்பாணத்தில் போய்ச் சீவிக்க வேண்டி வந்த சிலமாத காலத்தில் அந்தத் 'துருவன்' என்கிற க.பரராஜசிங்கத்தைத் தற்செயலாகச் சந்திக்க நேர்ந்தது. 'குடி'யும் குடித்தனமுமாக அவரிருந்த காலத்தில்/கோலத்தில் அவரை அறிமுகம் செய்துகொள்ள நேர்ந்தது. மிக இனிமையாகவும் இயல்பாகவும் பழகிய அவரைப் பின்னர் கண்டு பழகக் காலமும் சூழலும் வழி சமைக்கவில்லை.

கொட்டாஞ்சேனை, முஸ்லீம் வித்தியாலயத்தில் நான் ஆசிரியனாகக் கடமையாற்றிய காரணத்தால் பல முஸ்லீம் நண்பர்களை ஈட்டிக் கொண்டேன். அவர்களுள் கவிஞர் M.H.M.**ஷம்ஸும்** சிறுகதை எழுத்தாளர் **புர்க்கான் பீ இப்திகாரும்** குறிப்பிடத் தக்கவர்கள். எனது சக ஆசிரியர்களான அவர்களின் இலக்கிய ஈடுபாடும், திரையிசைப் பாடல்கள் மீதான அவர்களின் ஈர்ப்பும் எம்மை ஒன்றிணைத்தன. புர்க்கான் பீ இப்திகார் என்னைப் போலவே ஒரு பகுதி நேர அறிவிப்பாளராகவும் பணியாற்றிய காரணத்தால் எமக்கிடையேயான நெருக்கமும் நட்பும் நீண்ட காலம் தொடர்ந்தது; தொடர்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானொலித் தொடர்பால் **மா.பாலசிக்கம், மு.பொ., காவலூர் ராசதுரை, கோவிலூர் ஜெகநாதன், நெல்லை க.பேரன், மாவை வரோதயன், கவிஞர் இ.சிவானந்தன், நாவலாசிரியர் A.C. றாஹில்** போன்ற ஒருசில எழுத்தாளர்களைச் சந்திக்க நேர்ந்தது. ஆசிரியர் வ.இராசையாவின் 'சிறுவர் மலர்' நிகழ்ச்சிக்கு என்னைப் போலவே நாடகம் எழுதி வந்ததால் எழுத்தாளர் மா.பாலசிங்கம் அறிமுகமானார். எப்போதாவது சந்திக்கும் வேளைகளில் 'மல்லிகை'க்கு ஏதாவது எழுதுமாறு அக்கறையாகக் கேட்பார். பின்னைய நாட்களில் அவரைக் காண்பது அரிதாகிவிட்டது.

**தம்பியையா தேவதாஸ், முருகேசு ரவீந்திரன், எஸ். எழில் வேந்தன், சோக்கல்லோ சண்முகநாதன், சோ.தேவராஜா, நாகேசு தர்மலிங்கம், எஸ். அம்பலவாணர், ஆமினா பேகம் பாரூக்** போன்ற எழுத்தாளர்கள் வானொலிக் கலைஞர்களாகவும் இருந்த காரணத்தால் அவர்களுடனான தொடர்பும் ஊடாட்டங்களும் நீண்ட காலமாக நீடித்தவை. தனித்தனியே ஒவ்வொருவரையும் பற்றி விபரிக்க நிறையவே உண்டு ஆனாலும் . நீளச் சிக்கனம் கருதி அதைத் தவிர்க்க வேண்டிய கட்டாயம். மன்னிப்பார்களாக.வானொலி நடிகர்கள் சிலருடன் நான் சேர்ந்து நடித்த 'வாடகை வீடு' நாடகம் மூலம் அறிமுகமானவர் தான் தமது 'நிர்வாணம்' சிறுகதைத் தொகுப்பு மூலம் எழுத்துலகில் கால் பதித்த **உடுவை எஸ்.தில்லை நடராஜா**. பொதுவாக மேடை நாடகங்கள் நடிக்கும்போது அதில் பங்குபற்றுவோர்க்கு இடையேயான பழக்கமும் தொடர்பும் அவர்களுக்கிடையே நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்தி நெருக்கம் ஏற்பட வாய்ப்பளிக்கும். அவ்வாறாக தில்லையுடன் ஏற்பட்ட நெருக்கத்தால் தான் எனது ‘நாளைய நாயகன்' நூல் வெளியீட்டின்போது அவரது பங்களிப்பையும் பெற முடிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்ச் சூழல் காரணமாக நான் 90 களில் திருகோணமலையில் ஆசிரியனாகக் கடமையாற்ற நேர்ந்தது. .அங்கு எழுத்தாளர்கள் குறைவு. அவர்களின் ஒன்றுகூடல் அரிது. ஆயினும் எழுத்தாளர்கள் **தா.பி.சுப்பிரமணியம், நந்தினி சேவியர்,தம்பு சிவா, கனகசபை தேவகடாட்சம், சித்தி அமரசிங்கம், கவிஞர் சு.வில்வரத்தினம்** போன்றவர்களின் சந்திப்பும் அறிமுகங்களும் சித்தித்தமை திருமலையில்தான். தேவகடாட்சத்தின் முதல் வெளியீடான 'காலக் கீறல்கள்' சிறுகதைத் தொகுதி வெளியீட்டின் போது அந்நூல் பற்றிய ஆய்வுக் கட்டுரை ஒன்றையும் நான் சமர்ப்பித்தேன்.

87 இல் ஆக இருக்க வேண்டும் யாழ்ப்பாணத்தில் நான் ஆசிரிய பணியாற்றிய சமயம் **குழந்தை ம.சண்முகலிங்கம், சி. மௌனகுரு** போன்றோரால் நாடகப் பட்டறை ஒன்று நடாத்தப்பட்டது. முறையாக விண்ணப்பித்து எடுபடாமலே பின்வழியால் நுழைந்து அதில் பங்கு பற்றியவன் நான். எழுத்தாளர் **கோகிலா மகேந்திரனை** நான் சந்தித்தது அங்குதான். ஒரு திறமையான நாடக நடிகையாக அவரை அங்கு கண்டு வியந்தேன். அங்கு முக்கிய வேடமேற்று நான் நடித்த மஹாகவியின் 'புதியதொரு வீடு' நாடகம் போர்ச் சூழல் காரணமாக அரங்கேற்றப்படாமல் இடை நடுவில் நிறுத்தப் பட்டது.

'ஆனந்த விகடன்' சிறுகதை போட்டியில் முதற் பரிசு பெற்றதால் பிரபல்யம் பெற்ற எழுத்தாளர் **சுதாராஜும்** புதிய எழுத்தாளர் **எஸ்.உதயச்செல்வனும்** 2005 இல் மணிமேகலை பிரசுர நூல்களின் வெளியீட்டின்போது அருகருகே அமர்ந்திருந்த காரணத்தால் அரைகுறையாக அறிமுகமானவர்கள். சுதாராஜின் 'இளமைக் கோலங்கள்', 'மனித தரிசனங்கள்' எனும் நூல்களும் உதயச்சந்திரனின் 'காதல் பூட்டு' நாவலும் எனது 'கழுதைக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலம் வரும்' நாடகத் தொகுப்பு நூலும் வெளியிடப்பட்ட நாற்பதுக்கும் மேற்பட்ட நூல்களுள் அடக்கம். அதுபற்றிய பரபரப்பில் அமர்ந்திருந்தவர்களுடன் பெரிதான அறிமுகம் எப்படி ஏற்படும்?

2013 இல் கும்பலோடு கோவிந்தாவாக அவ்வாண்டுக்கான கலாபூஷண விருது வழங்கும் விழாவில் என்னருகே அமர்ந்திருந்தவர் எழுத்தாளர் **குப்பிளான் ஐ.சண்முகன்**. இப்படியான விழாக்களில் விரிவாகக் கலந்துரையாடி பரஸ்பரம் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்வதென்பது சாத்தியமில்லைத்தானே. என்னோடு ஒத்த வயதினரான அவரைப் பற்றிப் பெயரளவில் அறிந்திருந்தாலும் அச் சந்திப்பின் பின்னர்தான் அவரைப்பற்றி ஆழமாக அறிய முயன்றேன் எனக் கூறலாம். முகநூல் மூலமாக எமது நட்பு இப்போதும் தொடர்கிறது.

'திசை' பத்திரிக்கை நடத்திய சிறுகதை போட்டியில் முதற் பரிசை ஈட்டியவர் **எஸ்.ரஞ்சகுமார்**. 'மோக வாசல்' எனும் ஒரே ஒரு சிறுகதைத் தொகுப்பை வெளியிட்ட போதிலும் ஈழத்தின் சிறுகதைத் துறையில் தமது பெயரை ஆழமாகப் பதிவு செய்து கொண்டுவிட்டவர் ரஞ்சகுமார். அவரை ஓர் எழுத்தாளராக அல்லாமல் பதிப்பாளராகத்தான் நான் சந்திக்க நேர்ந்தது. அது 2000 இல். அவரது அச்சகத்தில்தான் எனது முதல் நூலான 'நாளைய நாயகன்' சிறுவர் நாடகத் தொகுப்பு நூலை நான் பதிப்பித்தேன்.

நூலை வெளிக் கொணர்வது சம்பந்தமான பரபரப்பில் அவர் ஒரு பிரபல எழுத்தாளர் என்பதுகூட எனது மனதில் உறைக்கவில்லை. பின்னர் யோசித்துப் பார்க்கும் போதுதான் அவரோடு பழகக் கிடைத்த நல்ல தருணங்களை நான் நழுவ விட்டுவிட்டது மனதை நெருடுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பில் தமிழ்ச் சங்கப் பக்கம் போனால் சில வேளைகளில் சில எழுத்தாளர்களைக் காணலாம். அவ்வாறாக அறிமுகமான ஒருவர்தான் எழுத்தாளர் **நீ.பீ.அருளானந்தம்**. குறுகிய காலத்தில் இருபதுக்கும் மேற்பட்ட நாவல், சிறுகதைத் தொகுப்புகளை வெளியிட்டவரான அவரைப் பார்த்து வியந்ததோடு சரி. செங்கதிர் இதழாசிரியர் **செங்கதிரோனையும்** நான் சந்தித்தது சங்கத்தில்தான்.

மூத்த சிறுகதை ஆசிரியர் **வரதர்,** மருத்துவமும்இலக்கியமும் எனப் பயணிக்கும் **Dr. M.K. முருகானந்தம்,** விமர்சகர்களால் வியக்கப்பட்ட எழுத்தாளர் **கூ.சட்டநாதன்** போன்றவர்களுடன் நாலு வார்த்தைகள் பேசியிருந்தாலும் அவர்களுடனான அறிமுகமானது வெறும் முகப் பழக்கம் வரை மட்டுமே என்றுதான் கூற வேண்டும்.

எனது நினைவுப் பேழையில் இடம் பிடித்திருந்த, நான் சந்தித்த எழுத்தாளர்கள், மேடை நாடகக் கலைஞர்கள் பெரும்பாலா னோரைப் பற்றி இதுவரை கூறிய போதிலும் நான் மறந்து போன ஒரு சில எழுத்தாளர்களும் மேடை நாடகக் கலைஞர்களும் இருக்கலாம். அவர்களிடம் மன்னிப்புக் கோரி இவ்வனுபவத் பகிர்வை நிறைவு செய்கிறேன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## G .P வேதநாயகம்

## எழுதிய/ நடித்த நாடகங்களில் பங்கு கொண்ட வானொலிக் கலைஞர்கள்

**B.H. அ**ப்துல் ஹமீது/ அபர்ணா சுதன்/ S. அம்பலவாணர்/ அம்பிகா சண்முகம்/ P.N.R. அமிர்தவாசகம்/இந்திராணி ஜோர்ஜ் பெர்னாண்டோ/ S.ஆறுமுகம்/ உமா சந்திரா முத்தையா/ V.N.S. உதயசந்திரன்/ஏஞ்சல் வேர்ஜினி/ S.எழில்வேந்தன்/

**S.S.க**ணேசபிள்ளை/ S.கணேஸ்வரன்/ கமலினி செல்வராஜன்/ கலிஸ்ரா திருச்செல்வம்/ கலையழகி வரதராணி/ I. கஜமுகன்/ J. கிரிஷ் குறூஸ்/ குணபதி கந்தசாமி/ V.K.குமார்/ S.குமாரவேல்/ கோகிலவர்த்தனி சுப்பிரமணியம்/ கோபால் சங்கர்/ கோபிகா சுவாமிநாதன் /

**S.ச**க்தீதரன்/ சகுந்தலா சின்னையா/ சசி பரம்/ K.சண்முகநாதன்/ S.சந்திரகாந்தன்/ K.சந்திரசேகரன்/ சந்திரப்பிரபா மாதவன்/ சரசாம்பிகை சுப்ரமணியம்/ சற்சொரூபவதி நாதன்/ சாந்தி சச்சிதானந்தம்/ 'சானா' S. சண்முகநாதன்/ சிசிலியா ஜோக்கிம்/ K.M.சித்தானந்தன்/ சிதம்பரப்பிள்ளை சிவகுமார்/ S. சிவதாசன்/ P.சீதாராமன்/ 'சுந்தா'V.சுந்தரலிங்கம்/ சுமதி சோமசுந்தரம்/சுமதி பாலஸ்ரீதரன்/ சுரனுதா சிவகுருநாதன்/ S.சுரேஷ்ராஜா/ 'உபாலி' S.செல்வசேகரம்/செல்வநாயகி தியாகராஜா/செல்வம் பெர்னா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ண்டோ/'சோக்கல்லோ'S.சண்முகநாதன்/ ஸ்ரீதர் பிச்சையப்பா/ G.ஸ்ரீகுமார்/ ஷாமினி ஜெயசிங்கம்/

**ஞெ**ய் ரஹீம் சயீத்/ K.ஞானசேகரன்/ டோசன் பெர்னாண்டோ/

**S.த**க்கீசன்/தம்பியையாதேவதாஸ்/N.P.தர்மலிங்கம்/ S.K.தர்மலிங்கம்/ A.R.திருச்செந்தூரான்/ M.திருநாவுக்கரசு/ திலகா தில்லைநாதன்/ திலகா ரட்னம்/

**C.ந**டராஜசிவம்/ 'நந்தி' சிவஞானசுந்தரம்/நாகபூசணி சீதாராமன்/ நாகராணி பேரின்பராசா/ நாகேசு தர்மலிங்கம்/ S.நாகேந்திரன்/S.S.நாதன்[சிவசண்முகநாதன்]/ நித்தியகல்யாணி காராளபிள்ளை/ நிலாமதி பிச்சையப்பா/ நிஹாரா சபூர்தீன்/ நீலாம்பிகை சுப்பிரமணியம்/

**R.ப**கவான்/ பத்மா குகபாலன்/ பரமேஸ்வரி கருப்பையா/ K.S. பாலச்சந்திரன்/ பாலசிங்கம் பிரபாகரன்/ T.S. பிச்சையப்பா/ பிராங் புஷ்பநாயகம்/ பிலிப்ஸ் ஜெகநாதன்/ புர்கான் பீ இப்திகார்/புஷ்பராணி சிவலிங்கம்/பூதரன் பெர்னாண்டோ/ G.போல் அன்ரனி/

**ம**ங்களகௌரி விரகநாதன்/ மகேஸ்வரி ரட்னம்/ மணிமேகலை ராமநாதன்/ T.மயில்வாகனம்/ முத்தையா ரத்னபாலன்/ முருகேசு ரவீந்திரன்/ மொறீன் கனகராயர்/ K.மோகன்குமார்/

**ர**ஞ்சினி ராஜ்மோகன்/M.S. ரட்னம்//ரவிசங்கர் சண்முகம்/ ரஜனி விக்டர்/ M.C.ரஸ்மின்/ M.K.ராகுலன்/ ராம் சுந்தரலிங்கம்/ 'மரிக்கார்'S.ராமதாஸ்//ராஜபுத்திரன்யோகராஜன்/



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

R.ராஜரத்தினம்/ M.N.ராஜா/ V.T.ராஜேந்திரா/ T.ராஜேஸ்வரன்/ ராஜேஸ்வரி சண்முகம்/ ரொசாரியோ பீரிஸ்/

**ல**லிதா பெர்னாண்டோ/ லிங்க வேலாயுதம்/ லூக்கஸ் திருச்செல்வம்/ லூக்கஸ் பெர்னாண்டோ/

**வ**சந்தி சண்முகம்/ M.வரகுணன்/வனஜா ஸ்ரீநிவாசன்/ S.வாசுதேவன்/ B.வாமலோசனன்/ R.விக்டர்/ P.விக்னேஸ்வரன் S.விக்னேஸ்வரன்/விசாலாட்சிஹமீது/விமல்ராஜ் பாக்கியநாயகம்/ S.விஸ்வரத்தினம்/ விஜயாம்பிகை ஞானமணி/ விஜயாள் பீட்டர்/றொபேட் வேதநாயகம்/ றோச் அருளப்பு/

**ஜ**முனாராணி நடராஜா/ ஜவஹர் பெர்னாண்டோ/A.M.C.ஜெகசோதி/N.T.ஜெகன்/ K.ஜெகன்மோகன்/ K.ஜெயகிருஷ்ணராஜா/ P.N.ஜெயசீலன்/ A.M. ஜெயந்தி/ ஜெயந்தி அப்புக்குட்டி/ ஜெயரஞ்சன் யோகராஜா/ 'முகத்தார் 'S. ஜேசுரட்ணம்/ ஜோக்கிம் பெர்னாண்டோ / ஜோர்ஜ் சந்திரசேகரன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழா நாயகரின் நன்றி நவிலல்

**கா**லத்தால் அழியாத கலைகளைப் படைத்த கலைஞர்கள் கவிஞர்கள் எழுத்தாளர்கள் எனப் பலரும், வாழுகிற காலத்தில் அவர்களை போற்றுவாரின்றிப் போய்ச் சேர்ந்து விட்டார்கள். முற்பிறப்பில் நான் செய்த நற்பயனாலோ என்னவோ கண் மறைந்து மண் மூடிப் போகுமுன் நான் விதைத்தவைகளை அறுவடை செய்து பார்க்கும் பாக்கியம் எனது அன்புக்கும் அபிமானத்துக்கும் உரியவர்கள் மூலம், எனது வழித் தோன்றல்கள் மூலம் எனக்குச் சித்தித்துள்ளமையானது மன நிறைவைத்த் தருவதாகவும் மகிழ்ச்சியளிப்பதாகவும் உள்ளது.

நான் எதைச் சாதித்தேன், அடுத்த தலைமுறைக்கு எதை விட்டுச் சென்றேன் எனக் கூட்டிக் கழித்துப் பார்க்க வேண்டிய சிரமமில்லாமல் ஒட்டு மொத்தமாக ஒரே நூலில் எனது கடந்த கால அறுவடைகளை நாடக, இலக்கியப் படைப்புகள் பற்றிய தகவல்களைத் திரட்டித் தந்துள்ள இம் மலர்க் குழுவினரின் முயற்சி விதந்து பாராட்டப்பட வேண்டியது மட்டுமின்றி பலருக்கும் முன்னுதா ரணமாகத் திகழப் போகும் ஒரு முன்னெடுப்புமாகும்.

கடந்த காலங்களில் எனது எழுத்துக்கோ நடிப்புக்கோ பாடல் தொகுப்புக்கோ உரிய அங்கீகாரமோ சங்கையோ கிடைக்கவில்லையே எனும் ஆதங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கிருந்த போதிலும் அதை நாடியோ தேடியோ ஓடிச் சென்று புற வழிகளால் அதைப் பெற எஞ்ஞான்றும் நான் முயன்றவனல்ல.

ஆயினும் எனது ஆதங்கங்கள் சிலவற்றை, நான் சொல்ல விரும்பியும் சொல்ல முடியாமற் போன சில மன அவசங்களை வெளிக் கொணரவும், என்னைப்பற்றிப் பலரும் அறியாத பல விடயங்களை வெளிப்படுத்தவும், வாய்ப்பாகவும் வடிகாலாகவும் தூண்டுகோலாகவும் இந்நூல் அமைந்ததென்பதையும் கூறித்தானாக வேண்டும்.

எவ்வித பிரதிபலனையும் எதிர்பாராது, எனது பெரும்பாலான நூல்களைப் பதிப்பித்து வெளிக் கொணர்வதில் முன்னின்றுழைத்த, எனது நாடக எழுத்துக்களினதும் நடிப்பினதும் தீவிர ரசிகரும் அபிமானியுமான சுந்தரேஸ்வரன் பிரதீப்பும் எனது எழுத்துக்களின் முதல் வாசகர்களும் 'நக்கீர' விமர்சகர்களுமான எனது அன்பு மனைவியும் மகளும் மற்றும் அவர்களின் இம் முயற்சிக்குத் தம்மாலான ஒத்துழைப்பை நல்கி, இம்மலர் உருவாக்கத்துக்கு உறுதுணையாக நின்ற மருகர், பேரப்பிள்ளைகள் யாபேருக்கும் நன்றி எனும் ஒரு வார்த்தையைக் கூறி அவர்களின் உன்னத பணியைச் சிறுமைப் படுத்த நான் விரும்பவில்லை.

இம்மலர் வெளியீடு பற்றி அறிந்தவுடன் எவ்வித தயக்கமோ தாமதமோவின்றி உடனடியாகவே மனமுவந்து தம் வாழ்த்துக்களை வரைந்தனுப்பிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பு நண்பர்கள் K.S.சிவகுமாரன், திருமதி விசாலாட்சி ஹமீத், உடுவை எஸ். தில்லை நடராசா, B.H. அப்துல் ஹமீத் ஆகியோருக்கு எனது விசேடமான நன்றிகள்.

அறிந்திருந்தால் வயது வரம்பையும் மீறி நாமும் வாழ்த்தியிருப்போமே என ஆதங்கப்படும் நண்பர்கள் பலரும் இருக்கலாம். அவர்களையெல்லாம் தொடர்பு கொள்ள நூலாக்கக் குழுவினர் வகையறியாதிருந் திருக்கலாம். அவ்வாறாக வாழ்த்த விரும்பிய அன்புள்ளங்களுக்கும் நன்றி.

'தக்கார் தகவிலர் என்பது அவரவர்

எச்சத்தாற் காணப்படும்'

என்றும் உங்கள் அன்பின்,

மறைமுதல்வன் G.P.வேதநாயகம் என்கிற வேதா

NO. 2, Windmill Drive,

Warwickshire,

Rugby

CV22 5qw

U.K. Gmail – gpv1611@gmail.co



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





'வாடகை வீடு'[05/04/1997] நாடகத்தில் A.M.C.ஜெகசோதி, G.P.வேதநாயகம், தில்லை நடராஜா, R.யோகராஜன்.



2005 இல் ஒளிபரப்பான தொலைக்காட்சி நாடகம் ஒன்றில் மகேஸ்வரி ரட்னத்துடன் G.P.வேதநாயகம்



தி/செல்வநாயகபுரம் அரசினர் தமிழ்ப் பாடசாலையில் தமிழ் இலக்கிய தின[16/09/1992] 'வாக்குறுதி வகுத்த விதி' நாடகத்தில் பங்கேற்ற மாணவ மாணவிகள் + ஆசிரியர்களுடன் ஆசிரியர் G.P.வேதநாயகம்





'எந்தையும் தாயும்'[22/03/2006]நாடகத்தில் G.P. வேதநாயகமும் 'சோக்கல்லோ' சண்முகமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*குலுக்கிய பின் சிரிக்கவும்* - சுயாதீனத் தொலைக்காட்சியில்[ITN] - 16/01/1999

M. வரதராஜனின் தயாரிப்பில் G.P. வேதநாயகம் எழுதி ராஜா கணேசன், ஏஞ்சல் வெர்ஜினா ஆகியோருடன் நடித்தது.]



*அண்ணனும் தம்பியும்* - ரூபவாஹினியில் - 1998

சோக்கல்லோ சண்முகத்தின் பிரதி. அவருடன் G.P.வேதநாயகமும் யோகராஜனும் நடித்தது




சொர்ண வாஹினியில் 'கலைச் சுரங்கம்' - நகைச்சுவைக் குறு நாடகங்கள் -- 1997

G.P.வேதநாயகம் எழுதி ஜெயரஞ்சன் யோகராஜனுடன் நடித்தவை.



பிறந்த மண் இ.ஒ.கூ.தாபனப் பவள விழா நாடகம் - 2001

G.P.வேதநாயகம் கோபிகா சுவாமிநாதனுடன் - தந்தையும் மகளுமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சோக்கல்லோ சண்முகநாதன் தயாரித்த எந்தையும் தாயும் [22/03/2006] நாடகக் கலைஞர்கள்



டான் - தமிழ் ஒளி தொலைக் காட்சியில் நேர் கண்டவர் - முருகேசு இரவீந்திரன்



உடுவை S.தில்லை நடராசா தயாரித்த 'வாடகை வீடு' [05/04/1997] நாடகக் கலைஞர்கள்



Vectone - Colombo தொலைக் காட்சியில் நேர் கண்டவர் - இ.தயானந்தா



[illegible]




சக்தி தொலைக் காட்சியில நேர் கண்டவர் - சத்யா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








'கழுதைக்கும் காலம் வரும்' நூல் வெளியீட்டில்
A.M.C. ஜெகசோதியுடன் G.P.வேதநாயகம்


ரூபவாஹினி 'ஊர்க்கோலம்' நிகழ்ச்சியில் 'நாளைய நாயகன்'
நூல் வெளியிட்டு நிகழ்வில் உரையாற்றுவோர் -ஆசிரியர்
வ.இராசையா எழுத்தாளர் செ.யோகநாதன் / நூலாசிரியர் வேதா


'நாளைய நாயகன்' நூல் வெளியீட்டில் [18/02/2001] முதற் பிரதி பெறுவோர்
சரவணமுத்து மாமா /திருமதி ராஜேஸ்வரி சண்முகம் உரையாற்றுவோர் -
கவிஞர் சி.சிவகுமார் / உரைபெயர்ப்பாளர் M.K.ராகுலன்



oundation.
am.org



இ.ஓ.கூ.தாபன நாடகக் கருத்தரங்கில் -[14/07/2001]

இ.வ.-1]அருணாசெல்லத்துரை]தெரியவில்லை 3]விசாலாட்சி ஹமீட் 4]K. சந்திரசேகரன் 5] C. நடராஜசிவம் 6] G.P. வேதநாயகம் 7] R. விக்டர்






'நாளைய நாயகன் நூல் வெளியீட்டில்[18/02/2001]

இ.வ.-செ.யோகநாதன்/சி.சிவகுமார்/இ.தயானந்தா/G.P.வேதநாயகம்/ஆசிரியர்வ இராசையா/M.K.ராகுலன்/G.போல்,அன்ரனி/S.தில்லை நடராசா/S.எழில்வேந்தன்/K.S.சிவகுமாரன்

tion.










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org